This ebook can be downloaded from
wwwVALLALAR.org

முன்னுரை

# மகாவீரரும் வள்ளலாரும்

## சன்மார்க்க தேசிகன்

## ஊரன் அடிகள்

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே !

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ என்று வள்ளலார் பாடுகிறார்.

**வாழையடி வாழைஎன வந்ததிருக்கூட்ட**
**மரபினில் யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த**

**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இது தகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ**

**மாழைமணிப் பொதுநடஞ் செய் வள்ளால்யான் உனக்கு**
**மகனலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே.**

**திருஅருட்பா - 3803.**

வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் என்று தொடர்ந்து வரும் இம்மரபைத்தான் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு என்று வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார்.

நாயன்மார்கள் ஆழ்வார்கள் சித்தர்கள் முதலியோரெல்லாம் இம்மரபில் வருபவர்களே. வள்ளலாரின் சமகாலத்தவரான இராமகிருஷ்ணரும் இம்மரபில் வருபவரே. வள்ளலாருக்குப் பின் வந்த அரவிந்தர், ரமணர் போன்றோரையும் இம்மரபிற் சேர்க்கலாம். மகாத்மா காந்தியடிகளையும் மகாகவி பாரதியாரையும் ஒருவகையில் இம்மரபில் சேர்த்துக் கூறலாம். காந்தியடிகள் பாரதியார்

இவ்விருவரின் ஆன்மீகம் அவர்களை இவ்வரிசையில் வைத்து எண்ணிப்பார்க்க இடமளிக்கிறது.

வள்ளுவருக்கு முன்னே இவ்வரிசையில் சேர்ப்பதற்குரிய பெருஞானிகள், வடக்கே தோன்றித் தமிழ்நாட்டிலும் பரவி, உலகளாவிய நிலையினரான மகாவீரரையும் புத்தரையும் சேர்க்கலாம். பின்னாளில் கடல் கடந்த நாடுகளில் தோன்றி உலகளாவிய நிலையில் விளங்கும் இயேசுவையும் நபிகளையும் கூட இம்மரபிற் சேர்க்கலாம். உலகில் தோன்றிய ஆன்மிக ஞானிகள் அனைவரும் வாழையடி வாழை, என வரும் திருக்கூட்ட மரபினரே.

ஆயினும் நாம் இங்கு ஒப்பாய்வுக்கென எடுத்துக்கொள்வதில், வள்ளுவர் முதல் வள்ளலார் வரை உள்ளவர்களில் திருவள்ளுவர்-திருமூலர்-சைவ சமயகுரவர் நால்வர்- தாயுமானவர்-என எழுவரை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளோம். வள்ளற்பெருமானது சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளுக்கு ஒத்த, வள்ளற்பெருமானே ஓரிடத்திற் குறிப்பிட்டுப் போற்றியுள்ள மகாவீரர் புத்தர் ஆகிய இருவரையும் வள்ளுவருக்கு முன் வைத்துள்ளோம், வள்ளலாருக்குப் பின் காந்தியடிகளையும் பாரியாரையும் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

எனவே இவ்வாழையடி வாழை ஒப்பாய்வு வரிசை

1. மகாவீரரும் வள்ளலாரும்
2. புத்தரும் வள்ளலாரும்
3. வள்ளுவரும் வள்ளலாரும்
4. திருமூலரும் வள்ளலாரும்
5. சம்பந்தரும் வள்ளலாரும்
6. அப்பரும் வள்ளலாரும்
7. சுந்தரரும் வள்ளலாரும்.
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும்
9. தாயுமானவரும் வள்ளலாரும்
10. வள்ளலாரும் காந்தியடிகளும்
11. வள்ளலாரும் பாரதியாரும்.

எனப் பதினோருநூல்களாக அமைகிறது.

கம்பரும் வள்ளலாரும் என்றொரு நூலை 2003-இல் வெளியிட்டுள்ளோம். சேக்கிழாரும் வள்ளலாரும் ஒரு சமயம் எழுதத் தொடங்கி இன்னும் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

இக்காலம் ஆய்வுக்காலம், அதிலும் ஒப்பாய்வுக் காலம் என்பதைக் கூறவேண்டியதில்லை. ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவற்றை ஒப்பிட்டுப்பார்த்துப் பொதுக் கருத்துக்களையும் அனுபவங்களையும் அறிவது பல்வேறு சமரசங்களுக்கு ஏதுவாக இருக்கும்.

**மகாவீரரும் வள்ளலாரும்**

மகாவீரர் அகிம்சையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர். வள்ளலார் ஜீவகாருண்யத்தின் திருவுருவமாகத் திகழ்ந்தவர். மகாவீரரின் சமண சமயத்திற்கும் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கும் பல வகைகளில் ஒற்றுமை உண்டு.

முதன்மையான ஒற்றுமை, முக்கியமான ஒற்றுமை, பெரிய ஒற்றுமை இரண்டுமே நூற்றுக்கு நூறு புலால் மறுத்தவை, சைவ உணவை(தாவர உணவை) வற்புறுத்துபவை என்பதாகும். எல்லா உயிரையும் தம் உயிரைப் போலக் கருதி ஒழுகவேண்டும். என்பது வள்ளலாரின் கொள்கை. இதே ஆன்மநேய ஒருமைப்பாடு சமணத்திலும் காணப்படுகிறது.

சமண சமயத்தில் அன்னதானம், ஔடததானம், சாத்திர தானம், (ஞான தானம்), அபயதானம் என்னும் நான்கு தானங்கள் முக்கியமாகக் கூறப்பெறுகின்றன. வள்ளலாரின் சன்மார்க்கத்திலும் இந்நான்கும் உள்ளன. அன்னதானத்திற்காக, சத்திய தருமச்சாலை என்றொரு அமைப்பையே வள்ளலார் ஏற்படுத்தினார். அதில் அணையா அடுப்பை ஏற்றி இன்றும் பல்லாயிரக் கணக்கான ஏழை எளியவர்களின் பசிப்பிணியைப் போக்க ஏற்பாடு செய்துள்ளார். உடற்பிணிக்கு மருத்துவ உதவியும் வள்ளலார் செய்தருளினார். திருவருட்பா வள்ளலாரின் ஞானக்கொடை ஆகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பாடலில் நடராசப் பெருமானது பெயர்களைக் கூறும்போது அருகர் புத்தர் என்பேன் என்று பாடியுள்ளார். **மகாவீரரும் வள்ளலாரும்** என்னும் இந்நூலில் இருவரது கொள்கைகளும் ஒப்பாய்வு செய்து விளக்கப் பெறுகின்றன.

அவ்வப்போது எமது பணிகளில் உதவிவரும் **திரு குறிஞ்சி ஞான செல்வநாதன்,** எமது தனிப் பணியாளர் **திரு.இரா.இராஜேந்திரன்** ஆகிய இருவரும் இரவு பகல் பாராது இந்நூல்களின் உருவாக்கத்தின்போது உடனிருந்து பல வகைகளில் உதவினர். நமதன்பர் ஆர்க்காடு நல்லாசிரியர் **புலவர் திரு. ச. சுந்தரேசனார்** அவர்கள் நன்கு மெய்ப்புத் திருத்தி உதவினார். எமது நூல்களை வழக்கமாக அச்சிடும் சிதம்பரம் சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர்
**திரு.இரா.கௌதம சங்கர் மற்றுமவர் தம் துணைவியார் திருமதி ஜெயநந்தினி** அவர்களும் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவினார். இவர்களுக்கு நம் அன்பான பாராட்டும் வாழ்த்துக்களும் உரிய.

அன்பர்கள் இவ்வரிசை நூல்களை வாங்கிப் பயின்று பயன் பெறுவார்களாக.

வாழ்க! வாழ்க!

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

22/05/2005 **ஊரன் அடிகள்**

## சன்மார்க்க மகா மந்திரம்

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

### சமணர்களின் பஞ்ச நமஸ்கார மந்திரம்

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆஇரீயாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ ளோ ஏஸவ்வ ஸாஹுணம்
அருகர் என்பேன்

**வள்ளலார் திருஅருட்பா**

பெருகிய பேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
 பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல் என்கின்றாய்
அருகர் புத்தர் ஆதிஎன்பேன் அயன் என்பேன் நாரா
 யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதாசிவம் என்பேன் சத்திசிவம் என்பேன்
 பரமம் என்பேன் பிரமன் என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரிய நிறைவென்பேன்
 சத்திசிவம் என்பென் இவை சித்து விளையாட்டே

-திருஅருட்பா-5801

### மகாவீரரும் வள்ளலாரும்

### தோற்றுவாய்

மகாவீரர் அகிம்சையின் திருவுருவம்
வள்ளலார் ஜீவகாருண்யத்தின் திருவுருவம்

சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தரைக் கூறுமிடத்தில் "ஞானத்தின் திருவுரு" என்று கூறுகிறார். திருஞானசம்பந்தர் ஞானத்தின் திருஉரு என்றால், மகாவீராரை அகிம்சையின் திரு உரு என்றும் **வள்ளலாரைச் சீவகாருண்ணியத்தின் திரு உரு என்றும் கூறலாம்.**

**மகாவீரரின் சமயம் சமணம்**

**வள்ளலாரின் சமயம் (மார்க்கம்) சமரச சுத்த சன்மார்க்கம்**

மகாவீரரின் **சமணத்துக்கும்** வள்ளலாரின் **சமரச சுத்த சன்மார்க்கத்துக்கும் அடிப்படை ஒற்றுமை**, மிகப் பெரிய ஒற்றுமை ஒன்று உண்டு. இவ்விரண்டும் **100-க்கு 100 புலால் மறுத்தவை** என்பதே அது.

உலக சமயங்களில் புலால் மறுத்தலைச் சமயக் கொள்கையாகவே கொண்ட ஒரே சமயம், ஒரே ஒரு சமயம், மகாவீரரின் சமணமே, அதைப் போலவே வள்ளலாரின் சன்மார்க்கமும் புலால் மறுத்தலைத் தனது கொள்கையாகவே கொண்டது.

வாழையடி வாழை என வரும் திருக்கூட்ட மரபில் 2600 ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர் வர்த்தமான மகாவீரர். 200 ஆண்டுகளுக்கு உள்ளிட்ட அண்மைக் காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வந்தவர் வள்ளலார். இவ்விருவர்து கொள்கைகளில் உள்ள ஒற்றுமையை ஆராய்ந்து விளக்குவதே மகாவீரரும் வள்ளலாரும் என்னும் இவ் ஒப்பாய்வு நூல்.

**சமணம் - பெயர் விளக்கம்**

சமண சமயத்திற்குத் தத்துவப் பெயர்கள் பல உண்டு என்றாலும் சமணம் ஜைனம் என்ற இவ்விருபெயர்களே பெரிதும் வழங்கி வருகின்றன.

சமணம்-தமிழ்ப்பெயர் ஜைனம்-சமஸ்கிருதப் பெயர்.

புலன்களையும் கர்மங்களையும் ஜயித்தவர்(வென்றவர்)ஜினர். ஜினரை வழிபடும் சமயம் ஜைனம்.

சமணம் என்பது ஸ்ரமண(சிரமண) என்ற வடசொல்லின் திரிபு. சமணத் துறவிகளுக்கு ஸ்ரமணர்(சிரமணர்) என்று பெயர். ஸ்ரமம்(சிரமம்) மேற்கொள்வோர் ஸ்ரமணர்(சிரமணர்) சிராமணரின் சமயமாகிய சிரமணம் தமிழில் சமணமாயிற்று.

தீர்த்தங்கரர்களுக்கு ஜினர் என்றும் அருகர் என்றும் பெயருண்டு. அருகனை வழிபடுவோர் ஆருகதர். சமணத்திற்கு ஆருகதம் என்றும் ஒரு பெயருண்டு.

நிகண்ட (வாத) மதம், அநேகாந்தவாத மதம், ஸியாத்தவாத மதம் என்ற பெயர்கள் தத்துவ உலகில் சமணத்திற்கு வழங்கும் பெயர்கள். இப்பெயர்கள் அறிஞரிடையே தத்துவ உலகில் வழங்குகின்றனவே தவிரப் பொதுமக்களிடையே வழக்கத்திலில்லை. பொதுமக்கள் வழக்கில் பெருவழக்காக உள்ள பெயர்கள்

ஜைனம் சமணம் ஆகிய இரண்டுமே. ஜைனம்-உலகம் முழுவதிலும் வழங்கும் பெயர். சமணம் தமிழ்நாட்டில் மட்டுமே தமிழில் மட்டுமே வழங்கும் பெயர்.

### சமண சமயத்தின் தொன்மை

இந்து சமயம் போன்றே சமண சமயமும் மிகப் பழமையான சமயம். வேத காலத்திலேயே சமண சமயம் இருந்திருக்கிறது. வேதங்களிலும் பதினெண் புராணங்களுள் சிலவற்றிலும், இராமாயணத்திலும், பாகவதத்திலும் சமண தீர்த்தங்கரர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

### பொருளடக்கம்

1.இடப்பெருக்கல், எல்லைமறத்தல், கீழ்மேலொடு.....................................28
2.தூய உணவு சமைத்தல்......................................................................50
3.அட்டாது பாத்து உண்டல் அடகு உண்டல் அட்டது.............................60
4.நூற்றுக்கு நூறு 100%.........................................................................61
5.கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே.......................................72
6.மூவகைத் தேகங்கள்...........................................................................73
7.அருகர் என்பேன் புத்தர் என்பேன்.........................................................74

புத்தரும் மகாவீரரும் சம காலத்தவர்கள். மகாவீரர் மூத்தவர். புத்தருக்குச் சில ஆண்டுகள் முற்பட்டவர். இவ்விருவர் காலமும் கி.மு. ஆறாம் நூற்றாண்டு.

புத்தர் பௌத்த சமயத்தை தோற்றுவித்தவர்.

மகாவீரர் சமண சமயத்தித் தோற்றுவித்தவரல்லர்.

மகாவீரருக்கு முன்பே சமண சமயம் இருந்தது. அதன் இருபத்து மூன்று தீர்த்தங்கரர்களும் இருந்தனர். இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராகிய மகாவீரர், புத்தர் காலத்தில், சமண சமயத்தை வளர்க்க வந்தவர். எனவே பௌத்த சமயத்திற்கு முற்பட்டது சமணம்; காலப் பழமையில் இந்து சமயத்தை அடுத்து வருவது சமணம்.

### இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள்

1. ரிஷபதேவர் (விருஷப தேவர்; ஆதிநாதர்)
2. அஜித நாதர்
3. சம்பவநாதர்
4. அபிநந்தனர்
5. சுமதிநாதர்
6. பத்மப்பிரபர்
7. சுவார்சுவநாதர்
8. சந்திரபிரபர்
9. புஷ்பதந்தர் (சுவிதிநாதர்)
10. சீதளநாதர்
11. சிரேயேம்சநாதர்
12. வாசுபூஜ்யர்
13. விமலநாதர்
14. அநந்தநாதர்
15. தர்மநாதர்
16. சாந்திநாதர்
17. குந்துநாதர்
18. அரநாதர்
19. மல்லிநாதர்
20. முனிசுவ்ரதர்
21. நமிநாதர்
22. நேமிநாதர்
23. பார்சுவநாதர்

24. மகாவீரர் (வர்த்தமானர்)

தீர்த்தம் என்பது நீர்நிலை. கரர் என்பதற்குக் கரை ஏறியவர் கரை ஏற்றுபவர் என்று பொருள், தீர்த்தங்கரர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேற்றிவயர்கள், மக்களைக் கரையேற்ற வந்தவர்கள்.

முதல் தீர்த்தங்கரராகிய விருஷபதேவர் ஆதிநாதர் என்றும் பெயர் பெறுவார். ஆதிநாதராகிய அவரே சமண சமயத் தாபகர் எனலாம். ஆதிநாதர் முதலாக 21 தீர்த்தங்கரர்களின் காலக்கணக்கு வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டது. 22-வது தீர்த்தங்கரராகிய நேமிநாதர் பாரத காலத்தவர், கண்ணபிரானுக்கு உறவினர். தாயாதி முறையில் ஒன்றுவிட்ட தம்பி, 23-வது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர் கி.மு. எட்டாம் நூற்றாண்டினர் மகாவீரருக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகள் முற்பட்டவர். 24-வது தீர்த்தங்கரராகிய மகாவீரர் கி.மு. 599-இல் பிறந்து 527-இல் முக்தி பெற்றார்.

காலம், உத்ஸர்ப்பிணி என்றும் அவஸர்ப்பிணி என்றும்இரண்டு பிரிவுகளாக மாறி மாறிவரும் என்பது சமண தத்துவம். உத்ஸர்ப்பிணி காலத்தில் உலகம் தாழ்விலிருந்து உயர்வை நோக்கிச் செல்லும். அவஸர்ப்பிணி காலத்தில் உயர்விலிருந்து தாழ்வை நோக்கிச் செல்லும். உத்சர்ப்பிணியை ஏறுகாலம் என்றும் அவசர்ப்பிணியை இறங்குகாலம் என்றும் கூறலாம். உத்சர்ப்பிணி காலத்தில் மக்களின் ஆயுள் அறிவு ஆற்றல் அனுபவம் முதலியவை வளர்ந்து கொண்டே செல்லும், அவசர்ப்பிணி காலத்தில் அவை தாழ்ந்து கொண்டே வரும். வளர்பிறைக் காலத்தில் சந்திரன் வளர்வதையும் தேய் பிறைக் காலத்தில் தேய்வதையும் போன்று எனலாம். வளர்பிறையும் தேய்பிறையும் மாறி மாறி வருவது போன்று உத்சர்ப்பிணியும் அவசர்ப்பிணியும் மாறிமாறி வரும்.

இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் ஆறு பிரிவுகள் உண்டு. உத்சர்ப்பிணி காலத்தின் ஆறு பிரிவுகள்:

1. தீத்தீக்காலம், 2. தீக்காலம், 3.தீநற்காலம், 4.நல்தீக்காலம், 5.நற்காலம் 6.நன்னற்காலம், அவசர்ப்பிணியில் 1. நன்னற்காலம், 2. நற்காலம், 3.நல்தீக்காலம், 4.தீநற்காலம், 5. தீக்காலம், 6. தீத்தீக்காலம்.

அவசர்ப்பிணியின் முதல் பிரிவு நான்கு கோடா கோடி கடற்காலம். இரண்டாம் பிரிவு மூன்றுகோடா கோடி கடற்காலம். மூன்றாம் பிரிவு இரண்டு கோடா கோடி கடற்காலம். நான்காம் பிரிவு நாற்பத் திரண்டாயிரம் ஆண்டுகள் குறைந்த ஒரு கோடா கோடி கடற்காலம். ஐந்தாம் பிரிவு இருபத்தோராயிரம் ஆண்டுகள். ஆறாம் பிரிவும் இருபத்தோராயிரம் ஆண்டுகளே. இந்த ஆறும் சேர்ந்து பத்து கோடா கோடி கடற் காலம் கொண்டது ஒரு அவசர்ப்பிணி. இதைப் போன்றே பத்து கோடா கோடி கடற்காலம் கொண்டது ஒரு உத்சர்ப்பிணி. உத்சர்ப்பிணி அவசர்ப்பிணி இரண்டும் சேர்ந்து இருபது கோடாகோடி கடற்காலம் ஒரு கற்பம். கடற்காலம் என்பது எத்தனை ஆண்டுகள் கொண்டதென்ற கணக்கு சாதாரணப் பொதுமக்களின் அறிவுக்கு எட்டாதது. சமண தத்துவப் பெருநூல்களில் அவை விரிவாகக் கூறப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு உத்சர்ப்பிணி காலத்திலும் அவசர்ப்பிணி காலத்திலும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுவார்கள். இப்படி எண்ணிறந்த இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றியுள்ளனர். இறுதியாகத் தோன்றிய 24-ஆம் தீர்த்தங்கரர் மகாவீரர் அவசர்ப்பிணியின் நான்காம் பிரிவான தீநற்காலத்தின் இறுதியில் கி.மு.599-இல் தோன்றினார். இப்போது அவசர்ப்பிணியின் ஐந்தாம் பிரிவு தீக்காலம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

வருங்காலத்திலும் இவ்வாறு எண்ணற்ற இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுவார்கள். வருங்காலத்தில் தோன்றவிருக்கும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரராகக் கண்ணபிரானே வரவிருக்கிறார் என்பது சமணர்களின்கொள்கை.

பௌத்தத்திலும் இவ்வாறு எண்ணற்ற புத்தர்கள் காலந்தோறும் வந்திருக்கிறார்கள் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. "இறந்த காலத்து எண்ணில் புத்தர்களும் சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது" என்பது மணிமேகலை(30.14.15) இறந்த காலத்தில் எண்ணில்லாத புத்தர்கள் வந்தது போன்றே இனி வருங்காலத்திலும் எண்ணற்ற புத்தர்கள் வருவார்கள். கடைசியாக வந்தவர் கௌதமபுத்தர். இனி வரவிருக்கும் புத்தர் மைத் ரேய புத்தர். இந்து சமயத்தில் பத்து அவதாரங்களில் ஒன்பது அவதாரங்கள் நிகழ்ந்துவிட்டன. இனி வரவிருக்கும் பத்தாவது அவதாரம் கல்கி அவதாரம் என்பர்.

தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலச்சினை(சின்னம்) உண்டு,

| <u>பெயர்</u> | <u>சின்னம்</u> |
|---|---|
| 1. ரிஷபதேவர் | எருது |
| 2. அஜிநாதர் | யானை |
| 3. சம்பவநாதர் | குதிரை |
| 4. அபிநந்தனர் | குரங்கு |
| 5. சுமதிநாதர் | சக்கரவாளப் பட்சி |
| 6. பத்மப்பிரபர் | வெண்தாமரை |
| 7. சுவார்சுவநாதர் | ஸ்வஸ்திகம் |
| 8. சந்திரபிரபர் | பிறைச்சந்திரன் |
| 9. புஷ்பதந்தர் | முதலை |
| 10. சீதளநாதர் | கற்பகவிருட்சம் |
| 11. சிரேயாம்சநாதர் | காண்டாமிருகம் |

| | | |
|---|---|---|
| 12. | வாசுபூஜ்யர் | எருமை |
| 13. | விமலநாதர் | பன்றி |
| 14. | அநந்தநாதர் | முள்ளம்பன்றி |
| 15. | தர்மநாதர் | வஜ்ஜிர்தண்டம் |
| 16. | சாந்திநாதர் | மான் |
| 17. | குந்துநாதர் | ஆடு |
| 18. | அரநாதர் | மீன் |
| 19. | மல்லிநாதர் | கலசம் |
| 20. | முனிசுவ்ரதர் | ஆமை |
| 21. | நமிநாதர் | நீலத்தாமரை |
| 22. | நேமிநாதர் | சங்கு |
| 23. | பார்சுவநாதர் | பாம்பு |
| 24. | வர்த்தமான மகாவீரர் | சிங்கம் |

தீர்த்தங்கரர்களின் உருவச் சிலைகளெல்லாம் ஒன்றைப் போன்றே மற்றவையும் இருக்கும், ஒரே அமைப்பில்தானிருக்கும். வேறுவேறு முகச்சாயல் முதலியன இராது. அவரவர்களின் பீடத்திலுள்ள இலச்சினை (சின்னங்)களைக் கொண்டுதான் அடையாளங் காணமுடியும். பீடத்தில் பிறைநிலா இருந்தால் சந்திரப்பிரபர்; சங்கு இருந்தால் நேமி நாதர்; தலைக்குமேல் ஐந்தலை நாகம் இருந்தால் பார்சுவநாதர்; பீடத்தில் சிங்கம் இருந்தால் மகாவீரர். இவ்வாறு தீர்த்தங்கரர்களின் சிலைகளை அவற்றிலுள்ள சின்னத்தைக் கொண்டே அறிய வேண்டும்.

தீர்த்தங்கரர்களின் சிலைகள் நின்றகோலம், இருந்த (அமர்ந்த)கோலம் ஆகியஇருகோலங்களிலும் இருக்கும். கிடந்த கோலம் இல்லை. புத்தர் சிலைகள் நின்ற கோலம், இருந்த கோலம், கிடந்த கோலம் ஆகிய மூன்று கோலங்களிலும் இருக்கும்.

**<u>சமணத்தில் 63 மகாபுருஷர்கள்</u>**

சைவத்தில் 63 நாயன்மார்களைப் போன்று சமணத்திலும் 63(மகாபுருஷர்கள்) பெரியோர்கள் உண்டு. இவர்கள் "திரிஸஷ்டி ஸலாகா புருஷர்" என வழங்கப் பெறுவர். திரிஸஷ்டி - அறுபத்து மூன்று. ஸலாகா புருஷர் - மகா புருஷர்;

**பெரியோர்.**

| | |
|---|---|
| தீர்த்தங்கரர் இருபத்துநால்வர் | 24 |
| சக்கரவர்த்திகள் பன்னிருவர் | 12 |
| பலதேவர் ஒன்பதின்மர் | 9 |
| வாசுதேவர் ஒன்பதின்மர் | 9 |
| பிரதிவாசுதேவர் ஒன்பதின்மர் | 9 |
| ஆக மகாபுருஷர் அறுபத்துமூவர் | 63 |

இவ்வறுபத்துமூவர் வரலாறுகளைக் கூறும் "ஸ்ரீபுராணம்" என்ற நூல் ஒன்று சமணத்தில் உண்டு. அது மணிப் பிரவாள நடையில் அமைந்தது. சைவத்தின் பெரியபுராணம் திருவொற்றியூர்க் கல்வெட்டு ஒன்றில் ஆளுடைநம்பி ஸ்ரீ புராணம் குறிப்பிடப் பெற்றுள்ளது.

**மகாவீரர்**

வட இந்தியாவில், பீகார் மாநிலத்தில், குண்டலபுரம் என்னும் நகரில் அரச வம்சத்தில் மகாவீரர் பிறந்தவர். புத்தரும் அரச வம்சத்தில் பிறந்தவரே. அரச வம்சத்தில் பிறந்த மகாவீரரும் புத்தரும் அரசபோகத்தைத்துறந்து, அனைத்தையுமே துறந்து முற்றுந்துறந்து முனிவர்களாகி, காட்டில் கடுந்தவம் இயற்றி, ஞானம் பெற்று இருபெரும் சமயங்களை நிறுவினர்.

மகாவீரர் தோன்றிய மாநிலத்தை இன்று "பீகார்" என்று வழங்குகிறோம். பிகார் என்பதே சரியான பெயர். புத்த விகாரங்கள்(விகார்) நிறைந்த பகுதியாதலின் "விகார்" என்ற பெயர் ஏற்பட்டு, விகார் பிகார் என மாறி, அதுவும் பீகார் என இன்று வழங்குகிறது. பிகார் மாநிலத்தில்தான் பௌத்தத் தலங்கள் மிகுதி.

மகாவீரரின் தந்தை வைசாலி ராஜ்யத்தின் லிச்சவி குல மன்னன் 'சித்தார்த்தன்" தாய், மகாராணி திரிசலாதேவி.

மகாவீரர் பிறந்தநாள் கி.மு.599 மார்ச் 30, சித்திரை சுக்கிலபட்சத்துத் திரயோதசி (சைத் ர சுக்ல திரயோதசி).

குழந்தைப் பருவத்தில் மகாவீரருக்கு இடப்பெற்ற பெயர், பிள்ளைத் திருநாமம் வர்த்தமானர்.

இளமை முதலே பிரமச்சாரியாக இருந்த வர்த்தமானர் முப்பதாம் (30) அகவையில் துறவு பூண்டார்.

பன்னிரண்டு(12) ஆண்டுகள் கடுந்தவமியற்றினார்.

நாற்பத்துமூன்றாம் அகவையில் ஞானம் பெற்றார்.

அதன்பின் முப்பது ஆண்டுகள் நாடெங்கும் பல இடங்களுக்குச் சென்று, தாம் பெற்ற ஞானத்தை சமண சமயக் கொள்கைகளைப் பரப்பினார்.

எழுபத்திரண்டாம் (72-ஆம்)அகவையில் பாவா (புரி)நகரில் கி.மு.527-அக்டோபர் 15கார்த்திகை அமாவாசையன்று முத்தி எய்தினார்.

| | | |
|---|---|---|
| பிறப்பு | .. | குண்டலபுரம் |
| முத்தி | | ,, பாவாபுரம்(பாவாபுரி) |
| பிறப்பு | .. | 30.03.599 |
| தீட்சை(துறவு) | .. | 11.11.570 |
| ஞானம் | .. | 26.04.557 |
| முத்தி | .. | 15.10.527 |
| அகவை | .. | 72 ஆண்டுகள் |

இது, மாகாவீரரின் மிகச் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு.

மகாவீரருக்குத் திருமணம் ஆகவில்லை. இளமை முதலே பிரமச்சாரியாக இருந்துதுறவுபூண்டார் என்றொரு கருத்தும், திருமணம் ஆயிற்று, யசோதைஎன்னும் அரச குமாரியை மணந்து கொண்டார், ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையும் ஆனார் என்றொரு கருத்தும், ஆக இருவேறு கருத்துகள் சமணிரிடையே நிலவுகின்றன. திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது திகம்பர சமணர்களின் கொள்கை. திருமணம் செய்து கொண்டு பெண் மகவைப் பெற்றார் என்பது சுவே தாம்பர சமணர்களின் கொள்கை.

மகாவீரருக்குத் திருமணம் ஆகவில்லை, இளமை முதலே பிரமச்சாரியாக இருந்து துறவு பூண்டார் என்ற திகம்பரரின் கருத்தே சரியானது, பொருத்தமானது, உண்மையானது. மகாவீரருக்கு அது கடைசிப் பிறவி. அப்பிறப்பில் அவருக்குத் திருமணமும் இல்லறமும் ஏற்படுவதற்கு இடமில்லை. திருமணம் இல்லை யாதலின் மக்கட்பேறு என்ற பேச்சுக்கே இடமில்லை. மகாவீரருக்குத் திருமணம் இல்லை, பிரமச்சரிய நிலையிலிருந்தே அவர் துறவு பூண்டார் என்பதே எமது கருத்து.

**சமண சமயம் தமிழ்நாட்டுக்கு வந்த வரலாறு**

மகாவீரர் வீடுபேறடைந்தபின் அவரது சீட பரம்பரையினர் தலைமையில் சமண சமயம் வளர்ந்தது.

மகாவீரர்
இந்திரபூபதி
சுதர்மன்
சம்புசுவாமி
விஷ்ணுநந்தி
அபராசிதர்
கோவர்த்தனர்

பத்திரபாகு

எனச் சீட பரம்பரை வளர்ந்து சமண சமயத்தை வளர்த்து வந்தது. இவர்களெல்லாம் கணாதரர் என்று வழங்கப்பெறுவர். பத்திரபாகு முனிவரின் காலத்தில் சமணம் தென்னாட்டுக்குவந்தது. வடநாட்டில் பஞ்சம் வரப் போவதை அறிந்த பத்திரபாகு முனிவர் பன்னீராயிரம் சீடர்களுடன் தென்னாட்டுக்கு வந்தார். மகத மன்னன் சந்திரகுப்தனும் பத்திரபாகு முனிவரின் சீடனாகி அவருடன் வந்தான். எல்லாரும் இன்றைய கர்நாடக மாநிலத்தில் சிரவண பௌகொளா என்னும் இடத்திற்கு வந்தனர். சிரவணபௌ கொளா என்பதற்குச் சமணர் வெள்ளைக் குளம் என்று பொருள். சிரவணபௌ கொளா மலையில்தான் உலகிலேயே மிக உயரமான கோமதேசுவரர் சிலை இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலிருந்து பத்திரபாகு முனிவரின் சீடர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து சமண சமயத்தைப் பரப்பினார்கள். பத்திரபாகு முனிவர் தென்னாட்டுக்கு வந்த காலம், சமணம் தமிழ்நாட்டுக்கு வந்து பரவத் தொடங்கிய காலம், கி.மு.மூன்றாம் நூற்றாண்டென்பர்.

**சமண சமயத்தின் உட்பிரிவுகள்**

தொடக்கதில் ஒன்றாக இருந்த சமயங்கள் கால அடைவில் தத்துவக் கொள்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் (மரபுகள்) முதலியன வளர வளர இரண்டாகவோ அல்லது இரண்டுக்கும் அதிகமாகவோ பிரிகின்றன.

தொடக்கத்தில் ஒன்றாக இருந்த பௌத்தம் பின்னாளில் மகாயானம், ஹீனயானம் என இரண்டாகப் பிரிந்தது.

கிறித்துவம், ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவம், புராடஸ்டண்ட் கிறித்துவம் என இரண்டாகப் பிரிந்தது. இஸ்லாமியம், சன்னி, ஷியா, என இரண்டாகப் பிரிந்தது.

இந்து மதம் சைவம் வைணவம் என இரண்டாயிற்று.

சைவம், சித்தாந்த சைவம், வீர சைவம் என இரண்டாயிற்று.

அண்மைக் காலத்தில் அரசியல் கட்சிகளெல்லாம் இரண்டிரண்டாகவும் அதற்கு மேலும் பிரிவதைக் காண்கிறோம்.

பிரிவும் வளர்ச்சி வகையில் ஒன்று போலும், பிரிவுகள் சிலவாகவோ பலவாகவோ இருந்தாலும் அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமையிருப்பதைக் காண்கிறோம். வேற்றுமையில் ஒற்றுமை என்று சொல்வதைக் கேட்கிறோம்.

ஆதியில், தொடக்கத்தில் ஒன்றாக இருந்த சமணம் பின்னாளில் திகம்பரம் சுவாதாம்பரம் என இரண்டாகப் பிரிந்தது. இப்பிரிவு கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்டதென்பர். திகம்பர், சுவாதாம்பரம் என்ற பெயர்களிலேயே அவற்றின் பொருள் பொதிந்துள்ளது. திகம்பரர் ஆடை அணியார், திக்குகளையே அம்பரமாக, ஆடையாகக் கொண்டவர் என்பது பொருள். சுவேதாம்பரர் வெள்ளாடை அணிவர். சுவேதம்-வெள்ளை, அம்பரம்-ஆடை

இவ்விருபெயர்களாலும் பொதுவான ஓர் உண்மை விளங்குகிறது. இரண்டிலுமே காவி (கல்லாடை) இல்லை என்பதே அவ்வுண்மையாகும். காவி உடை பின்னாளில் சமணத்திலும் புகுந்தது. பௌத்தத்திலிருந்தே அது சமணத்துக்கும் வேதாந்தத்துக்கும் இன்னும் பின்னாளில் சைவ வைணவங்களுக்கும் வந்திருக்க வேண்டும். சைவ சமய குரவர்களும் ஆழ்வார்களும் வெள்ளாடையினரே. சைவ சந்தானாசாரியரும் வைணவ மடங்களின் தொடக்ககால குரவர்கள் வெள்ளாடையினரே. சைவ வைணவ மடங்களில் பின்னாளில்தான் கவி உடைப் பழக்கம் ஏற்பட்டது. வள்ளலார் வெள்ளாடைத் துறவி. வள்ளலாரின் சன்மார்க்கத்தில் சுவேதாம்பரமே உண்டு.
திகம்பரமும் காவியும் இல்லை. வள்ளலாரும் திகம்பர இந்துத் துறவி ஒருவரும் திருவொற்றியூரில் சந்திக்க நேர்ந்த வரலாறு வள்ளலார் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

மகாவீரர் திகம்பரர். ஆடை எதுவுமே அணியாதவர். இவ்வுடம்புக்கு ஒரு கந்தையும் மிகை என்று ஆடையின்றித் திகம்பரமாகவே இருப்பது ஒரு நிலை. இந்நிலையில் நின்றவர் மகாவீரர். இவ்வுடம்பை எப்படி வெளியே காட்டுவேன் என்று முக்காடிட்டு உச்சி முதல் உள்ளங்கால் வரை போர்த்திக் கொள்வது ஒருநிலை. இந்நிலையில் நின்றவர்வள்ளலார். உடையால் இருவரும் இருவேறு நிலையினர் எனினும் உணவுக் கொள்கையால், அகிம்சையால், ஜீவகாருண்யத்தால் ஒரே நிலையினர்.

மகாவீரர் ஆடை உடுத்தாதவர், திகம்பரர் என்பதில் ஐயமில்லை. பின்னாளில் சமணத்துறவிகள் ஆடை உடுத்தும் வழக்கத்தைக் கொண்டனர். சமண இல்லறத்தார் அனைவரும் உடையால் சுவாதாம்பரரே. இந்நாளில் ஆடை அணியாமல் திகம்பரராக இருக்கும் சமணத்துறவியரும் உளர்.

திகம்பரம் சுவேதாம்பரம் ஆகிய சமணத்தின் இரு பிரிவுகளில் திகம்பரப் பிரிவே தென்னாட்டில் மிகுதி. சுவேதாம்பரப் பிரிவு வட இந்தியாவில் மிகுதி. தமிழ்நாட்டுத் தமிழ்ச் சமணர் அனைவரும் திகம்பரப் பிரிவினரே.

சுவேதாம்பரப் பிரிவில், ஸ்தானகவாசி, தேராபந்தி என மேலும் இரு பிரிவுகள் உண்டாயிற்று. திகம்பரம் சுவேதாம்பரம் ஆகிய இரு பிரிவினருக்கும் உருவ வழிபாடு உண்டு. சுவேதாம்பரரில் ஸ்தானகவாசிகளுக்கும் தேராபந்திகளுக்கும் உருவ வழிபாடு கிடையாது.

தீர்த்தங்கரரின் திருவுருவங்கள் ஆடையின்றியே இருக்கும். திகம்பர சமணத் துறவிகள் ஆடையின்றி நிர்வாணமாக இருப்பர்.

சுவேதாம்பர சமணத் துறவிகள் வெண்ணிற ஆடை அணிவர். சுவேதாம்பர சமணர்களில் உருவ வழிபாட்டைச் சார்ந்தவர்கள். தம் ஆலயங்களிலுள்ள தீர்த்தங்கரர்களின் திரு உருவங்களுக்கும் ஆடை அணிவித்து அலங்காரங்கள் செய்வர்.

ஸ்தானகவாசிகளுக்கும் தேராபந்திகளுக்கும் உருவ வழிபாடே இல்லையாதலின் அவர்கள் ஆகம நூல்களையும் சாதுக்களையும் வணங்குவர்.

1. **திகம்பர சமணர்கள்**

2. **சுவேதாம்பர உருவ வழிபாட்டு சமணர்கள்**

3. **சுவேதாம்பர ஸ்தானகவாசி சமணர்கள்**

4. **சுவேதம்பர தேராபந்தி சமணர்கள்**

ஆகிய நான்கு பிரிவினரும் தமிழகத்தின் பல நகரங்களிலும் கிராமங்களிலும் இன்று வசிக்கின்றனர்.

**சமண சமய தத்துவங்கள்**

**சமணரின் கடவுட் கொள்கை:**

இந்து சமயத்தில் கடவுள் ஒருவர் இருப்பது போலச் சமண சமயத்தில் தனியாகக் கடவுள் என்று ஒருவரும் இல்லை. ஆன்ம சாதனை செய்து பிறப்பு இறப்பு ஆகிய கட்டுகளிலிருந்து விடுபட்டு வீருபேறு பெற்ற தீர்த்தங்கரர்களையே கடவுள் நிலையில் வைத்து வழிபடுவது சமணர் கொள்கை.

**பஞ்சபரமேடிகள் வழிபாடு**

அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகிய ஐவகையினரையும் பஞ்சபரமேடிகள் என்று சமணர் வழிபடுவர். இவ்வைவர்களையும் வழிபடுவதே பஞ்ச நமஸ்கார மந்திரம். பஞ்ச நமஸ்கார மந்திரம் இந்நூலின் முகப்பில் கொடுக்கப் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையின் நூறாவது அடியாகிய "மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை ஆகென" என்பது பஞ்ச நமஸ்கார மந்திரத்தைக் குறிப்பது.

**மொழிப்பொருட்டெய்வம்-மொழியாகிய தெய்வம்;**
**பொருண்மொழி-உபதேச மந்திரம்: பஞ்சமந்திரம்**

என்பது அரும்பதவுரை.

மொழிப்பொருட்டெய்வம்-பொருண்மொழியாகிய
தெய்வம்; ஆவது பஞ்ச மந்திரம்; ஆ ஸி ஆ உ ஸா=அ சி ஆ உ சா

என்பது அடியார்க்குநல்லார் உரை.

பஞ்சபரமேடிகளது பெயர்களின் முதலெழுத்துகளே சமணர்களின் (பஞ்சாக்கர-மாக)பஞ்ச மந்திரமாக அமைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அருகர் | .. | முதலெழுத்து | அ |
| சித்தர் | .. | முதலெழுத்து | சி |
| ஆசாரியர் | .. | முதலெழுத்து | ஆ |
| உபாத்தியாயர் | .. | முதலெழுத்து | உ |
| சாதுக்கள் | .. | முதலெழுத்து | சா |

சமணர்களது பஞ்சமந்திரம் சைவர்களின் பஞ்சாக்கரத்தை எமக்கு நினைவூட்டுகிறது. பரமேட்டி என்ற சொல் வழக்கு சைவத்திலும் உண்டு. சிவபெருமானைப் பரமேட்டி என்பர். சைவ சமய குரவர் நால்வரின் பெயரும் பக்த பஞ்சாக்கரம். வள்ளலார் பெயரும் பக்க பஞ்சாக்கரமாவே அமைந்துள்ளது.

பஞ்சபரமேட்டிகளின் அருகரும் சித்தரும் ஒருநிலையினர். தீர்த்தங்கரர்களெல்லாரும் அருக நிலையினரே. அருகர் கோயில்களில் வைத்து உருவ வழிபாடு செய்யப்பெறுவோர். சித்தர் கட்புலனாகாத அருவநிலையினர். ஏனைய ஆசாரியர் உபாத்தியாயர் சர்வசாதுக்கள் ஆகிய முத்திறத்துவரும் ஒருநிலையினர். ஆக இவ்வைவருமே சமணர்களால் கடவுளாக வழிபடப் பெறுகின்றனர்.

சமண சமய தத்துவம்
நவபதார்த்தங்கள்

சமண சமய தத்துவத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்பெறுகின்றன.

உயிரும்(1) உயிரல்லதும்(2) புண்ணியம்(3)பாவம்(4) ஊற்றும்(5) செயிர்தீர் செறிப்பும்(6) உதிர்ப்பும்(7) கட்டும்(8) வீடும்(9) உற்ற துயர்தீர்க்கும் தூய நெறியும் சுருக்காய் உரைப்பன் மயல் தீர் காட்சி யுடையோய்! இதுகேண் மதித்தே என்னும் மேருமந்தர புராணச் செய்யுள்(68) ஒன்பது பொருள்களையும் கூறுகிறது. இவ்வொன்பதையும் நவபதார்த்தம் என்பர். ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம் ஆஸ்ரவம், ஸம்வரை, நிர்ஜரை,பந்தம்,மோட்சம் என்பன இவ்வொன்பதன் வடமொழிப்பெயர்கள்.

| | | |
|---|---|---|
| 1. உயிர் | .. | ஜீவன் |
| 2. உயிரல்லது | .. | அஜீவன் |
| 3. புண்ணியம் | .. | புண்ணியம் |
| 4. பாவம் | .. | பாவம் |
| 5. ஊற்று | .. | ஆஸ்ரவம் |
| 6. செறிப்பு | .. | ஸம்வரை |
| 7. உதிர்ப்பு | .. | நிர்ஜரை |
| 8. கட்டு | .. | பந்தம் |
| 9. வீடு | .. | மோக்ஷம் |

## 1. உயிர் (ஜீவன்)

உயிர்கள் எண்ணிறந்தன.
அழிவில்லாதன.
அநாதியாகவே உள்ளன.
யாரலும் படைக்கப்படுவதில்லை.

1. பிராணன்களுடன் கூடியது

2. உபயோகம் என்னும் பண்பை உடையது

3. உருவமற்றது

4. எவ்வுடலைக் கொண்டதோ அவ்வுடலின் அளவு பரந்து நிற்பது

5. வினைகளைச் செய்வது,

6. வினைப்பயனை அனுபவிப்பது

7. பிறவியில்(சம்சாரத்தில்) உழல்வது.

8. சித்தநிலையைப் பெறுவது

9. மேல்நோக்கி எழும் பண்புடையது

ஆகிய ஒன்பது பண்புகளைத் திரவிய சங்கிரகம் என்ற நூல் கூறுகிறது.

ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர், மூவறிவு உயிர், நான்கறிவு உயிர், ஐந்தறிவு உயிர், ஆறறிவு உயிர் என உயிர்கள் ஆறு வகைப்படும்.

மனித கதி, தேவகதி, விலங்கு கதி, நரக கதி என நான்கு கதிகளில்(பிறப்புகளில்) உயிர்கள் பிறந்தது இறந்தது உழலும்.

நரக, தேவ விலங்கு கதிகளில் உயிர்களுக்கு வீடுபேறு(முத்தி)இல்லை. மக்களாகப் பிறந்த உயிர்களுக்கு மட்டுமே - மக்கட் பிறப்புக்கு மட்டுமே - வீடுபேறு உண்டு. அதிலும் பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு வீடு பேறு இல்லை. ஆணாகப் பிறந்தவர்களுக்கே வீடு பேறு உண்டு. அதிலும் இல்லறத்தார்களுக்கு வீடுபேறு இல்லை. துறவறத்தினரே-துறவிகளே-வீடுபேறு பெறுவர்.

உயிர் சம்சார ஜீவன், மோட்ச ஜீவன் என இரு வகைப்படும். சம்சார ஜீவன் பிறவியில் கிடந்து உழல்வது.மோட்ச ஜீவன்(முத்தி உயிர்) வினையின் நீங்கி வீடுபெற்றது.

## <u>2. உயிரல்லது(அஜீவன்)</u>

உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தும் உயிரில்லாத அஜீவப் பொருள்கள். அவை ஐந்துவகை. 1.புத்கலம்,2. தர்மம், 3. அதர்மம், 4. ஆகாயம், 5.காலம், இவ்வைந்தில் காலம் தவிர ஏனைய நான்கும் அத்திகாயம் எனப்பெறும். அஸ்தி+காயம்=அஸ்திகாயம்; அத்திகாயம். அத்தி-எப்போதும் இருப்பது. காயம் - இடப்பரப்புடையது. உயிரும் ஒரு அத்திகாயம்தான். உயிரும், உயிரல்லனவற்றுள் முதல் நான்கும் ஆக ஐந்தும் ஐந்து அத்திகாயங்கள் என்று சமண தத்துவத்தில் கூறப்பெறும். ஐந்து அத்தி காயங்களுடன் ஆறாவதாகக் காலத்தைச் சேர்த்தால் திரவியம் ஆறு. ஷட்திரவியம் என்பர்.

உயிர்களைப் போன்றே உயிரல்லாத பொருள்களும் அநாதியாகவே உள்ளன. இவற்றை யாரும் படைப்பதில்லை.

**புத்கலம்:**

உயிர் தங்கியிருப்பதற்குரிய உடம்பு புத்கலம். உடம்பு மட்டுமின்றி, அணு முதல் சிறிய பெரிய பொருள்கள் அனைத்தும் புத்கலங்களே.

**தர்மம்; அதர்மம்:**

தர்மம் அதர்மம் என்னும் இவ்விரு அத்திகாயங்களும், இந்து மதத்தில் கூறப்படும் புண்ணிய பாவங்கள் அன்று, சமண தத்துவத்தில் இவை வேறு பொருளில் வழங்குகின்றன. தர்மாத்திகாயமும் அதர்மாத்திகாயமும் உலகெங்கும் பரவியுள்ள உருவமற்ற பொருள்கள். தர்மாத்திகாயமும் உயிர்களின் இயக்கத்துக்கு உதவுவது. மீன்கள் இருக்கவும் இயங்கவும்(நீந்தவும்) நீர்நிலை உதவுவது போல உயிர்களின் இயக்கத்துக்கு ஆதாரமாக இருப்பது தர்மாத்திகாயம்.

தர்மாத்திகாயம் இல்லாவிட்டால் உலகத்தில் உயிர்கள் இயங்க இயலாது. இயக்கத்திற்கு தர்மாத்திகாயம் உதவுவது போல், நிற்பதற்கு உதவுவது அதர்மாத்தி காயம். நடத்தல் ஓடுதல் முதலிய இயக்கங்களுக்கு தர்மாத்திகாயம் ஆதாரமாவது போல, நிற்றல் இருத்தல் கிடத்தல் போன்றவைக்கு அதர்மாத்திகாயம் ஆதாரமாகும்.

**ஆகாயம்:**

ஆகாயாத்திகாயம் ஏனைய எல்லாவற்றுக்கும் இட மளிப்பது. உயிர்களுக்கும் உயிர்களல்லாத புத்கலம் தர்மம் அதர்மம், காலம் ஆகியவற்றுக்கும் தங்குவதற்கு இடங்கொடுத்துத் தானும் நிலைத்திருப்பது ஆகாயம்.

ஆகாயம், லோகா காயம்(உலக ஆகாயம்)அலோகா காயம் (அலோகா ஆகாயம்) என இருவகைப்படும். லோகாகாயம் எல்லாவற்றுக்கும் இடங்கொடுப்பது. அலோகா காயம் லோகாகாயத்திற்கும் இடங்கொடுப்பது.

உலகப்பொருளின் விவகார எல்லைக்குள் உள்ள பகுதி உலகாகாயம். இதற்கு அப்பால் பெருவெளியில் முடிவில்லாமல் இருக்கும் ஆகாயப்பகுதி அலோக ஆகாயம்.

**காலம்**

காலம் அருவப்பொருள். கணம் முதல் அனந்தம் வரை நீளும். காலம் அளவற்றது. எல்லையற்றது. ஆகாயம் போன்றே காலமும் வியவகார காலம் நிச்சய காலம் என இருவகையாகக் கூறப்பெறும். உலகவியவகாரங்களுக்கு உட்பட்ட பகுதி வியவகார காலம், அதற்கு அப்பாற்பட்ட எல்லையற்ற நெடுங்காலம் நிச்சயகாலம்.

**3.புண்ணியம்(நல்வினை)**

மனம், வாக்கு, காயம், ஆகிய மூன்றாலும் செய்யப்பெறும் நற்செயல்கள் அவற்றின் பயனாகிய புண்ணியங்கள். புண்ணியம் உயிர்களுக்கு மனிதப் பிறப்பையும் தேவப்பிறப்பையும் தரும். இன்பந்தரும். எல்லாப் புண்ணியங்களிலும் சிறந்த புண்ணியங்களாக அன்னதானம், ஔடதானம், சாத்திரதானம், அபயதானம் என்னும் நான்கு தானங்கள் சமண சமயத்தில் சிறப்பித்துக் கூறப்பெறும்.

**4. பாவம்(தீவினை)**

மனத்தால், வாக்கால், காயத்தால், செய்யப்பெறும் தீயசெயல்கள். அவற்றின் விளைவாகிய பாவம், பாவம் உயிர்களுக்கு நரகப்பிறப்பையும் விலங்குப் பிறப்பையும் தரும். துன்பத்தைத் தரும். எல்லாப் பாவங்களிலும் மிகப் பெரிய பாவம் கொலைப்பாவம்.

**5.ஊற்று(ஆஸ்ரவம்)**

கர்மவினைகள் வந்து உயிரில் கலப்பது ஊற்று.

**6.செறிப்பு(ஸம்வரை):**

கர்மங்கள் வந்து சேரும் வழியைத் தடுப்பது செறிப்பு.

**7. உதிர்ப்பு(நிர்ஜரை):**

அனுபவித்துக் கழிக்காமல் எஞ்சி நிற்கும் வினைகளை களைதல் உதிர்ப்பு.

**8. கட்டு(பந்தம்):**

உயிர்களை அநாதியே பற்றி இருப்பது கர்மக் கட்டு.

9.<u>வீடு(மோட்சம்)</u>

கட்டு நீங்கப் பெறுதல், கர்மங்களின் அழிவு வீடு(முத்தி)

## முத்தி வழி - மோட்ச மார்க்கம்

## சமணரின் மும்மணிகள்

நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்னும் மூன்றும் மும்மணிகள்(இரத்தினத்திரயம்) என்றும், முத்திக்குரிய வழிகள்,

**நற்காட்சி** :தத்துவங்களின் உண்மைப் பொருளை உணர்ந்து நம்புதல்

**நன்ஞானம்** : அவ்வாறு உணர்ந்தபின் அவற்றை அலசி ஆராய்தல்.

**நல்லொழுக்கம்** : மேற்கூறிய இரண்டையும் பெற்று, மேலோர் கூறிய ஒழுக்க நெறியில் நடத்தல்.

நற்காட்சி, நன்ஞானம், நல் ஒழுக்கம் இம்மூன்றும் தொக்க அறச்சொற் பொருள் -2 என்பது அருங்கலச் செப்பு.

**மெய்வகை தெரிதல் ஞானம், விளங்கிய பொருள்கள் தம்மைப்**
**பொய்வகை இன்றித் தேறல் காட்சி, ஐம்பொறியும் வாட்டி**
**உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம், மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்.**

என்பது சீவகசிந்தாமணி ( கேமசரியார் இலம்பகம், 25)

நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றையும் காண்டல், கருதல், அனுபவம் என்று கூறலாம். காட்சியும் ஞானமும் ஒழுக்கத்தால் நிறையவேண்டும்.

சமணம் ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்தும் சமயம். இல்லறத்தாருக்கு என்றும் துறவறத்தருக்கு என்றும் கடுமையான ஒழுக்க விதிகளை வகுத்த சமயம்.

நல்லொழுக்கத்தை அணுவிரதம், மகாவிரதம் என இரு பெரும் பிரிவுகளாகச் சமண சமயம் பிரித்துக் கூறுகிறது. அணு விரதம்

இல்லறத்தாருக்குரியது. மகாவிரதம் துறவிகளுக்குரியது. இவற்றை அடுத்துக் காண இருக்கிறோம்.

# சமண சமயத்தில் இல்லற ஒழுக்கம்

## சிராவக தருமம்

சமணர்களில் இல்லறத்தார் சிராவகர் எனப்படுவர். அவர்களுக்குரிய தருமமும் சிராவக தருமம் எனப்படும். யதிகளாகிய துறவிகளுக்குரிய தருமம் யதிதருமம் எனப்படும்.

**அணுவிரதம் 5**

**குண விரதம் 3**

**சிட்சாவிரதம் 4**

ஆகப் பன்னிரண்டும் இல்லறத்தாருக்குரிய ஒழுக்கங்களாம்

**அணுவிரதம்-5**

1. **கொல்லாமை**
2. **பொய்யாமை**
3. **கள்ளாமை**
4. **பிறனில் விழையாமை**
5. **மிகுபொருள் விரும்பாமை**

**குணவிரதம் 3**

1. திசைவிரதம்

2. அனர்த்த தண்டவிரதம்

3. போகோபபோக பரிமாண விரதம்

<u>சிட்சா விரதம்-4</u>

1. சாமாயிகம்
2. புரோஷதோபவாசம்
3. தேசாவகாசிக விரதம்
4. அதிதி சம்விபாக விரதம்

இனி, இப்பன்னிரண்டையும் ஒவ்வொன்றாகக் காண்போம்,

துறவிகளுக்கு விதிக்கப்பெற்ற விரதங்கள் எண்ணிக்கையால் மிகுதியானவை. தன்மையாலும் கடுமையானவை. ஆதலின் துறவிகளுக்குரிய விரதங்கள் மகா விரதம் எனப் பெயர் பெற்றன. மகாவிரதம் - பெரியவிரதம் இல்லறத்தாருக்கு விதிக்கப்பெற்றதைவிட எண்ணிக்கையில் குறைந்தவை. ஆதலின் குறைந்த என்ற பொருளில் அணுவிரதம் எனப் பெயரிடப்பெற்றது. அணு விரதம்-எனப் பொருள் கொள்ள வேண்டும்.

<u>அணுவிரதம் 1: கொல்லாமை</u>

அணு விரதம் ஐந்தில் கொல்லாமையே முதல் விரதம். இல்லறத்தாருக்குரிய அணு விரதங்களிலும் சரி, துறவறத்தாருக்குரிய மகாவிரதங்களிலும் சரி முதலில் வைக்கப்பட்ட விரதம் கொல்லாமையே. எல்லா விரதங்களிலும் மிகப்பெரிய விரதம் கொல்லாமையே. இது இல்லறத்தார் துறவறத்தார் ஆகிய இருதிறத்தார்க்கும் பொது.

அணு விரதம் ஐந்தையும் அருங்கலச் செப்பு ஒரு குறட்பாவில் கூறுகிறது. அது வருமாறு.

**பெரிய கொலை, பொய், களவாடு, காமம்**
**பொருளை வரைதலோடு ஐந்து -66**

இவ்வருங்கலச் செப்புக் குறட்பா, கொலையைப் "பெரிய கொலை" என்று கூறியுள்ளதைக் காண்க. கொலையில் கூடப் பெரிய கொலை, சிறிய கொலை என்று இரண்டு வகை உண்டா என்றால் உண்டு. மகாவிரதத்தைக் கூறும் இன்னொரு பாடலில் (86) "சிறிய கொலை" என்று கூறப் பெற்றுள்ளது.

பெரிய கொலை - **ஓர் அறிவுள்ள தாவரம் தவிர ஏனைய ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு ஐயறிவு, ஆறறிவு, உயிர்களைக் கொல்வது.**

**சிறிய கொலை - ஓரறிவுள்ள மரம் செடி கொடி முதலிய தாவரங்களைக் கொல்வது.**

மக்கட் கொலை, விலங்குக் கொலை, பறவைக் கொலை, ஊர்வனவற்றைக் கொல்வது, நீர்வாழ்வனவற்றைக் கொல்வது இவை பெரிய கொலை. அதாவது இயங்கும் உயிர்களை (ஜங்கம உயிர்களைக்)கொல்வது.

தாவரங்களைக் கொல்வது, மரங்களை வெட்டுவது, செடிகளைப் பிடுங்குவது, கொடிகளை அறுப்பது, இலைகளைக் கிள்ளுவது போன்றவை யெல்லாம் சிறிய கொலை. அதாவது நிலைத்திணை உயிர்களைக் கொல்வது.

சமண இல்லறத்தார் பெரிய கொலைகளில் ஈடுபடலாகாது. துறவறத்தார் பெரிய கொலையோடு சிறிய கொலையிலும் ஈடுபடலாகாது.

**இயங்கு உயிர் கொல்லாமை ஏவாமை ஆகும்**
**பெருங் கொலையின் மீட்சி எனல்**

**- அருங்கலச் செப்பு 67**

தானே கொல்லாது, கொலை புரியப் பிறரை ஏவுவதும் கொலையைச் சேரும்.

**அறுத்தல், அலைத்தல், அடைத்தலோடு, ஆர்த்தல்,**
**இறப்பப்பொறை, இறப்பு ஓர் ஐந்து -68**

அறுப்பது, அலைப்பது(அலைக்கழிப்பது-வருத்துவது) அடைத்து வைப்பது. கட்டி வைப்பது, அளவுக்கு அதிகமாகச் சுமையை ஏற்றுவது ஆகிய இவ்வைந்தும் கொலையின் அதிசாரங்களாம்.

**<u>அணு விரதம் 2 : பொய்யாமை</u>**

கொல்லாமை முதலில் வைக்கப் பெற்றது. அதற்கு அடுத்ததாகப் பொய்யாமை பொய் கூறாமை- இரண்டாவதாக வைக்கப்பெற்றது.

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று -323**

என்னும் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு முற்றிலும் பொருத்தமாக உள்ளது. கோள் சொல்லுதல், மறைக்க வேண்டிய இரகசியங்களை வெளிப்படுத்துதல், தன்னிடம் கொடுக்கப்பட்ட பொருள்களை இல்லை என்று கூறுதல், புறங்கூறுதல், பொய்க்கடிதம் எழுதல், பொய்யான ஆவணங்களை உண்டாக்குதல் ஆகியவையும் பொய்யைச் சேர்ந்த அதிசாரங்களாம்.

**குறளை, மறைவிரி, இல்லடைவெளவல்**
**புறவுரை, பொய் ஓலை, கேடு -70**

என்பது அருங்கலச் செப்பு, கள்ளக் கையொப்பம், போலி ஆவணம் முதலியவை பெருகி வரும் இக்காலத்தில் அருங்கலச் செப்பு கூறும் "பொய் ஓலை" போன்றவை எண்ணத்தக்கவை.

**அணுவிரதம் 3: கள்ளாமை**

களவு செய்யாமை, பொருள்களை விற்கும்போது குறைவாகக் கொடுத்தல், வாங்கும்போது மிகுதியாக வாங்குதல், அதிக விலைக்கு விற்றுக் கொள்ளையடித்தல், கலப்படம் செய்தல், திருடரோடு சேருதல், திருட்டுப் பொருளை வாங்குதல் ஆகியனவும் திருட்டைச் சேர்ந்தனவாம். கள்ளாமையின் அதிசாரங்களாம்.

**விதித்த வழியின்றிக் காமம் நுகர்தல்**
**மதிப்பின்மை நான்காம் வதம். 74**

**அனங்க விளையாட்டு, வேட்கை மிகுதி**
**மனங் கொள்விலார் இணை, கேடு 75**

**பிறர்மனை கோடல், பிறர்க்குச் செல்வாளை**
**திறவதின் கோடலோடு ஐந்து 76**

என்னும் அருங்கலச் செப்புப் பாடல்கள் நான்காவது அணுவிரதத்தையும் அதன் ஐந்து அதிசாரங்களையும் கூறுவதாம்.

**அணுவிரதம் 5: மிகுபொருள் விரும்பாமை**

மிகுபொருள் விரும்பாமை - அதிகம் பொருள் சேர்க்க ஆசைப்படாமை இப்படியும் ஒரு விரதம் உண்டா? உண்டு சமண சமயத்தில்தான் உண்டு.

**பொருள் வரைந்து, ஆசை சுருக்கி, ஏவாமை**
**இருள்தீர்ந்தாருக்கு ஐந்தாம் வதம் 77**

| | | |
|---|---|---|
| பொருள் வரைந்து | -- | பொருளை வரையறை செய்து |
| ஆசை சுருக்கி | -- | பொருளாசையைக் குறைத்து கொள்வதும் |
| ஏவாமை | -- | அதிகம் சம்பாதியுங்கள் என்று பிறரை ஏவாமையும் |
| இருள்தீர்ந்தார்க்கு | -- | அறியாமை இருளிலிருந்து நீங்கியவர்களுக்கு |
| ஐந்தாம் வதம் | -- | ஐந்தாவது அணு விரதம் |

இவ்வளவு எனக்குப் போதும், இவ்வளவுக்கு மேல் வேண்டாம், இதற்கு மேல் நான் சம்பாதிக்க மாட்டேன். என்று பொருளீட்டுவதில் ஒரு வரையறை செய்து கொள்வது பொருள் வரைதல், மிகுபொருள்விரும்பாமை.

இப்படி ஒரு விரதம், ஒரு ஒழுக்கம் யாமறிந்த வரையில் சமண சமயத்திலேதான் சொல்லப்படுகிறது. கருப்புப் பணத்தைக் கணக்கு வழக்கில்லாமல் சேர்த்து வைத்துக் கொள்வோர் மலிந்த இந்நாளில் சமண சமயத்தின் பொருள் வரைதல் அறம் அனைவரும் அறியத்தக்கது, கடைப்பிடிக்கத் தக்கது.

ஒவ்வொரு விரதத்திற்கும் ஐந்து அதிசாரங்கள் கூறப்பெறுவதைப் போன்று இதற்கும் ஐந்து அதிசாரங்கள் கூறப்பெற்றுள்ளன.

**இயக்கமோடு, ஈட்டம் பெருக்கலும், லோபம்**
**வியப்பு, மிகைக் கோடலோடு ஐந்து.** 78

இயக்கம் என்பது கால்நடை, வாகனங்களில் சவாரி செய்தல், ஈட்டம் பெருக்கல் என்பது சேமிப்பைப் பெருக்குதல், பொருள்களை வாங்கி நெடுநாள் சேமித்து வைத்தல், லோபம்-பிறருக்கு ஈயாது உலோபியாக இருத்தல். வியப்பு-பிறருடைய செல்வநிலையைக் கண்டு வியந்து அழுக்காறடைதல், மிகைக்கோடல் பொருளாசையால் செய்ய இயலாத பணிகளையும் மேற்கொள்ளல்.

அணுவிரதங்கள் ஐந்துக்கும், ஐந்து ஐந்து அதிசாரங்கள் 5X5= 25 சொல்லப்பட்டன. இவ்வைந்தைந்து (இருபத்தைந்து) இறப்புகளையும் (அதிசாரங்களையும்) நீக்கி ஐந்து விரதங்களையும் கடைப்பிடித்தல் சுவர்க்கச் சுகம் கிட்டும் என்று ஒரு பாடல் தொகுத்துக் கூறுகிறது.

**ஐ ஐந்து இறப்பு இகந்து, ஐந்த வதங்களும்**
**செய்யும் சுவர்க்கச் சுகம்,** -79

அணுவிரதம் ஐந்தோடு, கள் உண்ணாமை, தேன் உண்ணாமை, புலால் உண்ணாமை ஆகிய மூன்றையும் சேர்க்க, சமண இல்லறத்தாருக்குரிய மூலகுணங்கள் எட்டாகும் மூலகுணம் - அடிப்படை ஒழுக்கம்.

**கள்ளொடு தேன் புலைசு உண்ணாமை ஐவதமும்**
**தெள்ளுங்கால் மூல குணம்** - 83

என்பது அருங்கலச்செப்பு, அணுவிரதம் ஐந்துடன், கள், தேன், புலால் உண்ணாமைகளைச் சேர்க்க, மூலகுணம் எட்டு.

**<u>கள்ளுண்ணாமை</u>**

கள்ளுண்ணாமை என்றே திருவள்ளுவர் திருக்குறளில் ஓர் அதிகாரத்தை இயற்றினார். கள்ளுண்பார் நஞ்சுண்பார் என்கிறார் திருவள்ளுவர். கள்ளுண்பார் வறுமையுறுவார். அவரது குடும்பத்தில் அமைதி குலையும். மனைவி மக்கள்

துன்புறுவர். குடிகாரர் வீடு நரகம் போன்றது. திருவள்ளுவர் கள்ளைக் கடிவதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே மகாவீரர் கள்ளைக் கடிந்துள்ளார்.

## தேன் உண்ணாமை

தேன்கூட்டைக் கலைத்துத் தேன் எடுப்பது பாவம், கூட்டிலிருந்து தேனை எடுக்கும்போது தேனீக்கள் அழிக்கப்படுகின்றன. ஜீவகாருண்யத்துக்கு விரோத மானதால் சமணத்தில் தேன் உண்ணும் பழக்கம் இல்லை. அறவே கடியப்பட்டது. சமண முனிவர்கள் பலர் மருத்துவத்திலும் வல்லவராவர். சமணத்தில் போற்றப்பெறும்
நான்கு தானங்களுள் மருத்துவதானமும் ஒன்று. மருத்துவத்திலும் தேனை அனு பானமாகப் பயன்படுத்துவதில்லை. வெல்லம் சர்க்கரைப்பாகு போன்றவற்றையே அனுபானத்திற்குப் பயன்படுத்துவர். மருந்துக்குக் கூடத் தேனைப் பயன் படுத்தாமை சமண சமயத்தின் தனித்தன்மையில் ஒன்று.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி கவுந்தியடிட்கள், இம்மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியில் கவுந்தியடிகள் கூறுவதாக.

**கரும்பில் தொடுத்த பெருந்தேன் சிதைந்து**
**சுரும்பு சூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்**
**அடங்கா வேட்கையின் அறிவஞர் எய்திக்**
**குடங்கையின் நொண்டு கொள்ளவும் கூடும்**

என்ற வரிகள் வருகின்றன(10-82; 85) கரும்பு வயலிலுள்ள கரும்பில் வைக்கப்பட்ட தேனடை முற்றிச் சிதைந்து பொகை நீருடன் கலந்து வரும், அடங்காத நீர் வேட்கையால் தேன் கலந்து வரும் அந்நீரை அகங்கையால் முகந்து அருந்தவும் கூடும் என்று கவுந்தியடிகள் எச்சரிக்கிறார். இவ்வடிகளுக்கு உரை வரையும் அடியார்க்கு நல்லார் "நமது தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க வென்றதாம். எனவே ஊனையும் உடம் கூரிற்றாம். மேலும் இவ்வாறு வருவன கொள்க" என்றெழுதுகின்றார். தேனுண்டலைச் சமண சமயம் கடிகிறது என்பது இதனாற் போதரும். நமது தரிசனத்து என்பதால் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சமணர் என்பதும் பெறப்படும். தேனுண்டலைப் பரிகரிக்க என்றது ஏதோ ஒரு செஞ்சொற் கட்டளை போன்று இன்னோசையுடன் அமைந்துள்ளது. சமணம் மருந்துக்குக்கூட, தேனைக் கடிகிறது, பரிகரிக்கிறது. கடுந்தாகத்துக்குக் கூட தேன் கலந்த நீரை பரிகரிக்கிறது.

## ஊன் உண்ணாமை

உலக மதங்கள் அனைத்திலும் சமண மதம் ஒன்றே ஊன் உண்ணாமையை மதக் கொள்கையாகவே கொண்டது. ஊன் உண்போர் சமணர் ஆகார். வள்ளலாரின் சன்மார்க்கமும் ஊன் உண்டலை முற்றிலும் கடிவது. ஊன் உண்போர் சன்மார்க்கர் ஆகார். ஊன் உண்ணாமையைப் பற்றித் தனியாகவே பின்னோரிடத்தில் இந்நூலில் வருதலின் இவ்விடத்தில் சுருக்கமாகவே கூறினோம்.

ஐந்து அணுவிரதங்களோடு, கள் உண்ணாமை, தேன் உண்ணாமை, ஊன் உண்ணாமை ஆகிய மூன்றையும் சேர்த்து மூலகுணம் எட்டெனக் கூறப்பட்டது. இவற்றோடு இரவு உண்ணாமையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**இரவு உண்ணாமை**

சமணர்களின் மிக முக்கிய கொள்கைகளில் ஒன்று இரவு உண்ணாமை. இல்லறத்தார், துறவிகள் ஆகிய இருவருக்குமே இது உரியதாகும். சூரியன் காலையில் உதிப்பது முதல் மாலையில் மறைவது வரை பகல், சூரியன் மறைவதிலிருந்து மறு நாள் காலை உதிப்பது வரை இரவு என்பது சாதாரணமாகப் பொதுவாக வழங்குவது. சமணர்களின் இரவு உண்ணாமைக்குக் காலக் கணக்கு வேறு. சூரிய உதயத்திற்கு இரண்டு நாழிகைக்கு (48 நிமிடங்களுக்கு)முன்னரே உணவு கொண்டுவிட வேண்டும். நீர் அருந்தலும் அவ்வாறே, இந்தக்கணக்கில் இரவு உண்ணாத, நீர் கூடப் பருகாத சமண இல்லறத்தாரை நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் இல்லத்தில் உண்டும் இருக்கிறோம்.

**பரமேட்டி வணக்கம்**

பஞ்சபரமேட்டிகளை வணங்கித் துதிப்பதும் இல்லறத்தாரின் நாட்கடமைகளுள் ஒன்றாகும். ஐந்து அணுவிரதங்கள், கள், தேன், ஊன் உண்ணாமைகள், இரவுண்ணாமை, பரமேட்டி வணக்கம் இப்பத்தையும் கூறும் பழம் பாடல் ஒன்று வருமாறு:

**கொல்லாமை,. பொய்யாமை, கள்ளாமை, காமத்தை**
**ஒல்லாமை, ஒண்பொருளை வரைதலோ டிவைபிறவும்**
**பொல்லாத புலைதேன்கள் இருளுண்ணு நிலைமையொடு**
**நல்லாரைப் பணிவதுதும் நாமுறையே பயனுரைப்பாம்.**

உதீசித் தேவர் இயற்றிய திருக்கலம்பகப் பாடலொன்றிலும் இப்பத்து ஒழுக்கங்கள் கூறப்பெருகின்றன.

**"விரையார் மலர்மிசை வருவார் திருவறம்**
**விழைவார், கொலையினை விழையார்; பொய்**
**உரையார்; களவினை ஒழுகார்; பிறர்மனை**
**உவவார்; மிகுபொருள் உவவார்; வெம்**
**சுரையால் உணர்வினை அழியார்; அழிதசை**
**துவ்வார்; விடமென வெவ்வாறும்**
**புரையார்; நறவினை நுகரார்; இரவுணல்**
**புகழார்; குரவரை இகழாரே"**

சயங்கொண்டார் என்னும் சமணப் புலவரை நுமதூர்யாது என்று கேட்டபோது அவர் பாடியதாக ஒருபாட்டு உண்டு. அதிலும் இச் சிராவக தர்மங்கள் தொகுத்துக் கூறப்பெறுகின்றன.

**" செய்யும் விளையும் இருளு உண் பதுவும்**
**தேனும் நறவும் ஊனும் களவும்**
**பொய்யும் கொலையும் மறமும் தவிரப்**
**பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்**
**கையும் முகமும் இதழும் விழியும்**
**காலும் நிறமும் போலும் கமலங்**
**கொய்யும் மடவார் கண்வாய் அதரங்**
**கோபங் கடியுந் தீபங் குடியே"**

இதுகாறும் அணுவிரதம் ஐந்தினையும் அவற்றைச் சார்ந்து கூறப்பெறும் ஐந்தினையும் கண்டோம். இனி குணவிரதங்கள் மூன்றையும் காண்போம்.

<u>குணவிரதம்1; திசை விரதம்:</u>

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, கீழ் மேல் ஆகிய பத்துத் திசைகளிலும் இவ்வளவு தூரத்திற்குமேல் செல்வதில்லை, இவ்வளவு தூரத்துக்குள்தான் நம்முடைய நடைமுறைகளை வியவகாரங்களை வைத்துக்கொள்வது என்று ஒரு வரையறை செய்து கொள்ளுதல் திசை விரதம். பொருள் வரைதல் போன்று இது இடம் வரைதல் ஆகும்.

**வரைப திசைபத்தும் வாழும் அளவும்**
**புரைவுஇல்திசை விரதம்.**

ஆறு, மலை, கடல், காடு இவற்றை எல்லையாகக் கொண்டு இடப்பரப்பை வரைந்து கொள்ள வேண்டும்.

**ஆறும் மலையும் கடலும் அடவியும்**
**கூறுப எல்லை, அதற்கு.**

திசை விரதத்தை மீறுதலும், அதிசாரங்களும் ஐந்து வகை

**இடப்பெருக்கல், எல்லைமறத்தல், கீழ்மேலொடு**
**உடன்இறுத்தல், பக்கம் இறப்பு, - 88**

வரையறுத்துக் கொண்ட எல்லையை மேலும் அதிகமாக வளர்த்தல், வரைந்து கொண்ட எல்லை மறந்து செல்லல், வரைந்து கொண்ட எல்லை மறந்து செல்லல், வரைந்து கொண்ட எல்லைகுக் கீழே இறங்குதல், மேலே ஏறுதல், பக்கங்களில் அகன்று செல்லல் ஆகிய ஐந்தும் திசை விரதத்தின் அதிசாரங்களாம். கீழ் இறங்குதல் - கிணறு முதலியவற்றில் குறிப்பிட்ட ஆழத்திற்கும் கீழே இறங்குதல். இக்காலத்தில் சுரங்கம் போன்றவற்றையும் கொள்ளலாம்.

**மேலே ஏறுதல் - மலை ஏறுதல்**

<u>குண விரதம் 2: அனர்த்ததண்ட விரதம்</u>

திசை வரையறை செய்து கொண்ட போதிலும், அவ்வெல்லைக்குள்ளேயே வீணாகப் பயனின்றிச் செயல்படலாம். அவ்வாறெல்லாம் இல்லாமல் பயனுள்ள செயல்களில் நல்லொழுக்கத்தோடு செயற்பட வேண்டும். இதுவே அனர்த்ததண்ட விரதம். இவ்விரதத்தைக் கூறும் அருங்கலச் செப்புச் செய்யுள்.

**எல்லையகத்தும், பயம் இல மீண்டு ஒழுகல்**
**நல்அனந்த தண்டவதம். - 89**

பாவந்தரும் ஐவகைச் செயல்களைச் விலக்குவதன் மூலம் இவ்விரதம் காக்கப்படும். அவ் ஐவகைச் செயல்கள் தீயசிந்தை, பாபோபதேசம், பயனில் சொல், கொலை கொடுத்தல், பாவச் சுருதி என்பனவாம்.

ஆசையையும் கோபத்தையும் உண்டாக்கும் நினைப்புகள் தீயசிந்தை ஆகும்.

**ஆர்வமொடு செற்றத்தை ஆக்கும் நினைப்புகள்**
**தீவுறு தீச்சிந்தை யாம். .. 91**

**ஆர்வம்-ஆசை, செற்றம்-கோபம்**

கால்நடைகள், பணியாள்கள் முதலியவற்றை குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்வதும், பிறர் வாங்கிக் கொள்ள வழிகூறுவதும் பாப உபதேசங்களாகும். புண்ணிய உபதேசம் நல்லது: செய்ய வேண்டியது. பாப உபதேசம் செய்யலாமா? பாவத்தை உபதேசிக்கலாமா?

**சே ஆள் விலை கொளல், கூறுதல் கூட்டுதல்**
**பாபோபதேசம் எனல். .. 92**

மரம் செடி கொடி புல் பூண்டு ஆகியவற்றை வீணாக வெட்டுவதும், கிள்ளி எறிவதும், பூமியைத் தோண்டுவதும் இன்னும் இவை போன்றனவும் பயனற்ற செயல்களாம். இது பிரமாதசர்யம் எனப்படும். அடுத்தது கொலை கொடுத்தல் (இம்சாதானம்)கொலைத் துன்பத்திற்கு ஏதுவான நெருப்பு அரிவாள் கத்தி போன்ற கருவிகள், விஷம், கயிறு, தடி(நீண்ட கழி) முதலியவற்றைக் கொடுத்தல் கொலை கொடுத்தலாம். கொலை கொடுக்கும் இத்தீச்செயல் ஆயுதகலாசாரம் அதிகமாகப் பரவி வரும் இந்நாளில் சமண சமயம் கூறும் இவ்வறம் சமுதாயத்தின் கவனத்திற்கு மிகவும் உரியதாகும்.

**தீ,கருவி, நஞ்சு, கயிறு, தடி நார்கள்**
**ஈத்தல் கொலை கொடுத்தல் ஆம்,**

கொலை செய்தல் தாமே செய்வது, கொலை கொடுத்தல் பிறர் செய்ய உதவுவது, உடந்தையாயிருப்பது. கொலை கொடுத்தல் என்ற பெயரே எவ்வளவு பொருள் பொதிந்ததாக உள்ளது என்பதை சிந்திக்க!

பாவச்சுருதி (துஸ்ருதி)என்பது தீயன கேட்டல், காமத்தை உண்டாக்கி தவத்தை அழிக்கும் நூல்களையும் செய்திகளையும் காதால் கேட்டல் பாவச் சுருதி.

**மோகத்தை ஈன்று, தவம் அழிக்கும் சொல்கேட்டல்**
**பாவச் சுருதி எனல், - 95**

புண்ணியச் சுருதிகளைக் கேட்க வேண்டும். பாவச் சுருதிகளைக் கேட்கலாமா? இன்றைய பத்திரிகை உலகமும் வானொலி, தொலைக்காட்சி ஆகிய செய்தி ஊடகங்களும் பெரும்பாலும் பாவச் சுருதியாக அன்றோ உள்ளன?

இவ் அனர்த்த தண்ட விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்;

**நகையே நினைப்பு, மொழியின்மை கூறல்**
**மிகை நினைவு நோக்கார் செயல் -96**

**ஐந்து அனர்த்து தண்ட விரதர்க்கு இறப்பு இவை**
**முந்து உணர்ந்து காக்க முறை . 97**

நகை - எள்ளி நகையாடுதல்

நினைப்பு - தீய நினைப்புகள்

மொழியின்மை கூறல்- இன்னாத சொற்கூறல்; மொழியாற் கூறாமல் கை, கால், கண் சைகைகளால் (ஜாடைகளால்) கூறல்.

மிகை நினைவு-அதிகப்படியான ஆசை நினைவுகள், (இக்கால ஆசைக்கனவுகள்) நோக்கார் செயல்-நன்று இது தீது என்று நோக்காத செயல்.

<u>குணவிரதம் 3:போகோப போக பரிமாண விரதம்</u>

இது போக-உபகோ பரிமாண விரதம். அனுபவிக்கும் பொருள்களை அளவோடு அனுபவித்தல். உணவப் பொருள்கள், வெற்றிலை பாக்கு, மாலை, மலர் முதலியன ஒரே முறை அனுபவித்து, அதையே மறுமுறை அனுபவிக்க இயலாதவை. இவை போகப்பொருள்கள். உபயோகப்பொருள். மறுமுறை அதையே மீண்டும்மீண்டும் அனுபவிக்கக் கூடியவை. ஆடைகள், அணிகலன்கள், வீடு கட்டில், மெத்தை, பெண்டிர், குடை, செருப்பு, முதலானை. இவற்றையெல்லாம் அனுபவிப்பதற்கு ஒருவரையறை செய்து கொள்ளுதல், அளவோடு அனுபவித்தல் போக உபயோகப் பரிமாண விரதம்.

**போ கோப போகபரிமாணம் என்று உரைப்பர்**
**வாயிற் புலன்கள் வரைந்து ..98**

**துய்த்துக் கழிப்பன போகம்; உபயோகம்**
**துய்ப்பாம் பெயர்த்தும் எனல். ..99**

ஒரே முறை அனுபவித்துக் கழிப்பன போகப் பொருள்கள். மீண்டும் மீண்டும் அனுபவிக்க இலய்வன உபபோகப் பொருள்கள், மேற்காட்டிய அருங்கலச் செப்புக் குறள் எவ்வளவு அழகாக இதனை சுருங்கக் கூறி விளங்க வைக்கிறது.

**மயக்கம் கொலை அஞ்சி, கள்ளும் மதுவும்**
**துயக்கில் துறக்கப் படும். ..100**

மேற்குறளில் கள்ளும் மதுவும் என்றதை நோக்குக. இக்காலத்தில் நாம் கள்ளையே மது என்கிறோம். மதுவிலக்கு என்றால் இன்று கள் விலக்கு ஆனால் அன்றோ அது தேன் விலக்கு. தேனுக்கு மது என்று ஒரு பெயர். மிகப் பழம் பெயரே. தேனீக்கள் பூக்களில் மதுவுண்டு களிக்கின்றன. கள் மயக்கந்தரும். தேன் எடுக்கும்போது தேனீக்கள் கொலை செய்யப்படுகின்றன. மயக்கத்திற்கு அஞ்சிக் கள்ளும், கொலைக்கு அஞ்சித் தேனும் சமணர்களால் முழுமையாகத் துறக்கப்படும்.

**வேப்பமலர், இஞ்சி, வெண்ணெய்,அதம்பழம்**
**நீப்பர்இவை போல்வன. ..101.**

வேப்பம்பூ, இஞ்சி, வெண்ணெய், அத்திப்பழம், ஆகியவற்றையும் இவை போன்றனவற்றையும் நீக்கவேண்டும். இவை நுண் கிருமிகளுக்கும் கண்ணுக்குத் தெரியாத மிகச்சிறிய பூச்சிகளுக்கும் இடமாவன.

முற்றிலும் நீக்க வேண்டிய இவை போன்ற இயமங்களுக்கு ஒரு கால் வரையறை இல்லை. அளவோடு அனுபவிக்க கூடிய நியமங்களுக்கு ஒரு கால வரையறை வகுத்துக் கொள்ள வேண்டும்.

**இயமங்கள் கால வரையறை இல்லை**
**நியமங்கள் அல்லா வதம் .. 102**

**உடுப்பன, பூண்பன, பூ, சாந்தும், ஊர்தி**
**படுப்ப, பசிய நீராட்டு. .. 103**

**கோலம், இலை, கூட, நித்த நியமங்கள்**
**கால வரையறுத்தல் நற்கு. .. 104**

| | | |
|---|---|---|
| உடுப்பன | .. | உடுக்கும் உடைகள |
| பூண்பன | .. | அணியும் அணிகள் |
| பூ,சாந்து | .. | மலர் சந்தனம் போன்ற நறுமணப்பொருள்கள் |
| ஊர்தி | .. | வண்டி வாகனங்கள் |
| படுப்ப | .. | படுக்கை வசதிகள் |

| | | |
|---|---|---|
| பசியநீராட்டு | .. | குளிர்ந்த நீரில் நீராடல் |
| கோலம் | .. | அழகு செய்து கொள்ளல் |
| இலை | .. | வெற்றிலை பாக்கு (தாம்பூழம்தரித்தல்) |
| கூட | .. | மகளிரோடு கூடல் |
| நித்த நியமங்கள் | .. | இன்னும் இவை போன்ற நாட் கடமைகளில் |
| காலவரையறுத்தல் | .. | காலவரையறை செய்து கொள்ளுதல் |

எவ்வாறு வரையறை செய்து கொள்ள வேண்டும். அடுத்து வரும் குறட்பா கூறுகிறது.

**இன்று பகல், இரா, இத்திங்கட்கு, இவ்ஆண்டைக்கு**
**என்று நியமம் செயல்.** ...105

இன்றைய பகல், இன்றைய இரவு, இந்த மாதத்துக்கு, இந்த வருடத்துக்கு என்று நியமம் செய்து கொள்ள வேண்டும்.

மேலே கூறிய போக உபயோக பரிணாம விரதத்திற்கு அதிசாரங்கள் ஐந்து.

**வேட்கை, வழிநினைப்பு, துய்ப்பு, மிகநடுக்கு**
**நோக்கு இன்மை ஐந்தாம் இறப்பு.** -106

| | | |
|---|---|---|
| வேட்கை | .. | வரையறை செய்து விலக்கிய பொருள்களின் மீது திரும்பவும் ஆசைப்படுத்தல். |
| வழிநினைப்பு | : | அவற்றைச் அனுபவிப்பதற்கான வழிகளை நினைத்தல். |
| துய்ப்பு | .. | அனுபவித்தல் |
| மிகநடுக்கு | .. | அனுபவிக்கத் துடித்தல் |
| நோக்குஇன்மை | .. | வரையறுத்த விரதத்தின் மேல் உறுதி இன்மை. |

அணுவிரதங்கள் ஐந்தும் அவற்றோடு சார்ந்தனவும் குணவிரதங்கள் மூன்றும் இதுகாறும் சுருங்கக் கூறப் பெற்றன. இனி சிக்கா விரதம் நான்கையும் காண்போம்.

## சிட்சா விரதம் 1 - சாமாயிகம்

கொலை புலை முதலானவற்றை நீத்து நாள்தோறும் காலை, பகல், மாலை ஆகிய முப்போதும் பஞ்சபரமேட்டிகளைத் தியானித்தலும் ஆன்ம சிந்தனையில் ஈடுபடுதலும் சாமாயிக விரதமாகும். தியான, சிந்தனைகளைத் தன் வீட்டிலேயே தகுந்த ஓரிடத்திலோ, கோயில்களிலோ, சோலை போன்ற இடங்களிலே செய்யலாம். குறைந்தது இரண்டு நாழிகையாவது (இரண்டு கடிகை - 48 நிமிடங்கள்)தியான சாதனை செய்யவேண்டும். ஆழ்ந்த தியானத்தின்போது உடலுக்கு ஏதேனும் துன்பங்கள் ஏற்பட்டால் பொறுத்துக் கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் செய்த தீமைகளை எண்ணி இரங்க வேண்டும். தீயவை எல்லாம் இனிச் செய்யேன் என்று உறுதிகொள்ள வேண்டும்.

**தீயவை எல்லம் இனிச் செய்யேன் என்று அடங்கித்**
**தூயவழி நிற்றலும் அற்று.** .. 114

**ஒன்றியும் ஒன்றாதும் தான் செய்த தீவினையை**
**நின்று நினைந்து இரங்கற் பற்று.** .. 115

தனக்கும் பிறருக்கும் நல்லன நினைக்க வேண்டும். கேடு நினையாமை வேண்டும் திருந்தார் பொருள் வரவும் தீயார் தொடர்பும் பொருந்தாமை வேண்டும். நல்லறச் சார்பையும் நவை அறநீக்குதலையும் பல்வகையாலும் கடைப்பிடிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் போல் இதற்கும் ஐந்து அதிசாரங்கள் உண்டு. அவற்றைக் கூறும் அருங்கலச் செப்புக் குறட்பா.

**உள்ளம், மொழி, செய்கை, தள்ளல், விருப்பு இன்மை**
**உள்ளார் மறத்தல் இறப்பு.** ... 121

## சிட்சாவிரதம் 2: புரோஷ தோபவாசம்

அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை பௌர்ணமி நாள்களில் உபவாசம் இருப்பது இவ்விரதம். இந்த நாள்களில் முழு உபவாசம் இதற்கு முன் பின் நாள்களில் ஒருவேளை உணவு. உபவாசத்தில் உணவோடு நீரும் சேரும் நீரும் அருந்துவதில்லை. ஆடவரைவிடப் பெண்டிரும் ஏனையோரைவிட திகம்பரரும் இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பதில் அதிக உறுதி காட்டுகின்றனர் என்பது ஈண்டறியத்தக்கது.

பொருள்களை வைக்கும்போதும் எடுக்கும்போதும் பிற உயிர்களுக்குத் தீங்கு நேராவண்ணம் வைத்தல் எடுத்தல், மலம் மூத்திரம் கழிக்கும்போதும் அவ்விடத்தில் தரையில் இருக்கக்கூடிய உயிர்களைக் கவனியாது இருத்தல், படுக்கும்போது படுக்கையில் ஏதேனும் உயிரினங்கள் உள்ளனவா என்று கவனியாது படுத்தல், பசி உறக்கம் போன்றடனற்றில் விரதத்தை மறந்து வீட்டு வேலைகளிலும் வெளிவேலைகளிலும் ஈடுபடுதல் ஆகிய ஐந்தும் புரோஷதோபவாசத்தின் ஐந்து அதிசாரங்களாம்.

## சிட்சா விரதம்: 3 தேசாவகாசிகம்

பொருள் வரைதல், இடம் வரைதல் (திசை வரைதல்) போன்று, இது தேசம் (நாடு) வரைதல், இன்ன தேசத்திற்கு (நாட்டிற்கு) அப்பால் இவ்வளவு காலம்வரை செல்வதில்லை என்று தேசவரையும் அதற்குக் கால வரையறையும் செய்து கொள்ளுதல் வேசாவகாசிக விரதம்.

**தேசம் வரைந்து ஒழுகல், கால வரையறையில்**
**தேசாவகாசிகம் என் ..129**

இன்னவீடு வரை, இன்ன சேரி வரை, இன்ன ஊர் வரை, இன்ன நிலை வரை, இன்ன ஆறு வரை, இன்ன காடுவரை, இத்தனைக் காதம் வரை என்று எல்லை வரையறை செய்து கொள்ளுதல்.

இத்தனை ஆண்டு, இத்தனை மாதம், இத்தனை நாள் என்று அதற்குக் காலவரையறையும் செய்து கொள்ளுதல்.

**மனை, சேரி, ஊர், புலம், ஆறு, அடவி, காதம்**
**இனைய இடம் வரைதல் என். .. 130**

**ஆண்டொருநாள் திங்கள் இத்துணை என்று உய்த்தல்**
**காண்தகு காலம் அதற்கு .. 131**

வரையறுத்துக்கொண்ட எல்லைக்கு அப்பால் நிகழும் பாவங்கள் நமக்கு வந்து சேர்வதற்கின்மையால், தேசம்வரையும் இவ்விரதத்தை நாளும் விரும்பி ஏற்க.

**எல்லைப்புறத்து அமைந்த பாவம் ஈண்டாமையின்**
**புல்லுக நாளும் புரிந்து ..132**

இவ்விரதத்திற்கும் ஐந்து அதிசாரங்கள் உண்டு. வரையறுத்துக் கொண்ட எல்லைக்கு அப்பால் இருப்பவர்களுக்குச் செய்தி அனுப்புதல்; அவர்களை இங்கு அழைத்தல், அங்கிருந்து செய்திகளையும் பொருள்களையும் கொணர்வித்தல்; அங்கு ஏவலர்களை அனுப்பிப் பணியை நிறைவேற்றல், எல்லைக்கு உட்புறம் உயரத்தில் இருந்து கொண்டு தன் உருவத்தைக் காட்டுதல்.

எல்லைக்கு அப்பால் ஏதாவது ஒன்றை விட்டெறிந்து அறியச் செய்தல், அதன் மூலம் தொடர்புகொள்ளல் ஆகிய ஐந்தும் இவ்விரதத்தின் அதிசாரங்களாம்.

## சிட்சா விரதம்4: அதிதி சம்விபாகம்

முனிவர்களுக்கும் விரதிகளுக்கும் விருந்தினர்களுக்கும் உணவு, மருந்து, இருப்பிடம், தேவையான பொருள்கள் ஆகியவற்றைக் கொடுத்து உதவுதல்.

**உண்டி மருந்தொடு உறையுள் உபகரணம்**
**கொண்டு உய்த்தல் நான்காம் வதம் - 134**

உணவைப் பச்சை இலைகளில் பரிமாறுதல், பச்சை இலையால் மூடுதல் பழைய உணவை அது தெரியா வண்ணம் மறைத்துக் கொடுத்தல், விருப்பமின்றிக் கொடுத்தல் தேவையான அளவுக்குக் கொடாமல் குறைத்துக் கொடுத்தல் ஆகிய ஐந்தும் இவ்விரதத்தின் அதிசாரங்களாம்.

**இப்பகுதியின் நிறைவுரை**

வேறு எச்சமயமும் இல்லற வாழ்க்கைக்கு இவ்வளவு கடுமையான விதிகளையும் விரதங்களையும் விதிக்க வில்லை.

சமணத்துறவிகள் கடுந்துறவிகள் என்றால்சமண இல்லறத்தார், சிராவகர், கடுநோன்பிகள். சமண இல்லறத்தார் (சாவகர்) தரிசனிகன'1 விரதிகன்2, சாமாயிகன்3, புரோஷதோபவாசன்4, ஸச்சித்தவிரதி5, இராத்திரி அபுக்தன்6, பிரமசாரி7, அநாரம்பன்8, அபரிக்கிரகன்9, அன்னுமதன்10, உத்திண்டபிண்டன்11, எனப் பதினொரு நிலைமையர் உண்டு.

விரதங்களை மட்டும் மேலே விளக்கினோம். விதிகளைப் பற்றி விரிவாக விளக்க ஈண்டு இடம்போதாது. விரிந்த சமண தத்துவ நூல்களிற் காண்க.

## சமண சமயத்தில் துறவற ஒழுக்கம்

## யதி தர்மம்

சமணத் துறவிகள் (முனிவர்கள்) ஒழுகவேண்டிய ஒழுக்கங்கள் (மூல குணங்கள்) இருபத்தெட்டாகும்.

| | | |
|---|---|---|
| மகாவிரதங்கள் ஐந்து (5) | - | 1 - 5 |
| சமிதிகள் ஐந்து (5) | - | 6-10 |
| ஐம்புலன் அடக்கம் ஐந்து(5) | - | 11-15 |
| ஆவஸ்யகம் ஆறு (6) | - | 16-21 |
| லோசம் | - | 22 |
| திகம்பரம் | - | 23 |
| நீராடாமை | - | 24 |
| பல்துலக்காமை | - | 25 |

| | | |
|---|---|---|
| தரையிற் படுத்தல் | - | 26 |
| நின்றுண்ணல் | - | 27 |
| ஒரேவேளை உண்ணல் | - | 28 |

என இருபத்தெட்டாகும். இவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

## மகா விரதங்கள் ஐந்து

மகாவிரதங்கள் என்ற பெயரையே முதலில் நன்கு ஊன்றி நோக்க வேண்டும் இல்லறத்தாருக்கு அணுவிரதம், துறவிகளுக்கு மகாவிரதம், அணு சிறியது. மகா-பெரியது. அணு விரதம் அளவுக்குட்பட்ட விரதம். மகாவிரதம் முழுமையான விரதம். மகாவிர்தங்கள் ஐந்தாவன;

1. அகிம்சை (கொல்லாமை)
2. வாய்மை
3. கள்ளாமை
4. துறவு
5. அவா அறுத்தல்

இவற்றை ஒவ்வொன்றாகச் சிறிது விளங்கக் காணலாம்.

### 1.அகிம்சை (கொல்லாமை)

சமணம் அகிம்சைச் சமயம், "அகிம்சா பரமோதர்ம" என்பது சமணத்தின் அடிப்படை அறம்.

அகிம்சை என்பது எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை எல்லா உயிர்களையும் தம்மைப் போல் கருதி ஒழுகுதல். மகாவீரர் அகிம்சையின் வடிவமாகவே விளங்கினார். "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி" என்றார் வள்ளலார்.

ஈ எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்குக் கூடத் தீங்கு செய்யக்கூடாது. தீங்குசெய்ய மனத்தாலும் எண்ணலாகாது. உயிர்களுக்குச் செய்யக் கூடியா தீங்குகளில் இம்சைகளில் கொலையே பெரிய இம்சை. ஆதலின் கொல்லாமை முதன்மையாகக் கொள்ளற்பெற்றது. கொல்லாமை அறம் இல்லறத்தார் துறவறத்தார் ஆகிய இரு சாரார்க்கும் பொது. ஈ எறும்பு முதலியவற்றிற்குச் சிற்றுயிர்கள் என்று

பெயர். இரண்டறிவையுடைய சிற்றுயிர்கள் முதலாக ஆறறிவுள்ள மனிதர்வரை எந்த உயிரையும் கொல்லக் கூடாது என்பது இல்லறத்தார்க்குரிய கொல்லாமை விதி. துறவறத்தாரோ தாவர உயிர்களைக்கூடக் கொல்லக் கூடது. ஓர் இலையைக் கூட கிள்ளக்கூடாது. ஒரு பூவைக் கூடப் பறிக்கக் கூடது. அஜாக்கிரதையால் கூட எந்த உயிருக்கும் சிறு தீங்கும் செய்யலாகாது. அப்படிச் செய்ய நேர்ந்தால் அதுவும் இம்சையாகும்.

திருவள்ளுவர் தம் நூலாகிய திருக்குறளில் கொல்லாமை என்றே தனி ஒரு அதிகாரத்தைச் செய்தார்.

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று. -323**

என்றார் திருவள்ளுவர். சமண சமயம் கொல்லாமை அறத்தை எல்லாவற்றினும் மேம்பட்டதாக, முதலாவதாகக் கொண்டது.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும் .. 260**

என்ற திருக்குறல் சமணசமயத்துக்கே முற்றிலும் பொருந்தும். சமணர் அனைவருமே கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் கடைப் பிடிப்பவர்கள். சமணத்தில் நூறு விழுக்காடு 100% கொல்லாமை, 100 விழுக்காடு 100% புலால் மறுத்தல், ஏனைய சமயங்களில் இவ்வாறு முழுமையாக இல்லை. இது சமண சமயம் ஒன்றுக்கே உரிய தனிச்சிறப்பு.

இச்சிறப்பு வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கும் உண்டு. வள்ளலாரின் சன்மார்க்கமும் நூறு விழுக்காடு 100% கொலை புலை அற்றது.

**2. <u>வாய்மை</u>**

**வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை இலாது சொலல். -291**

என்பது திருக்குறள். இதில் இல்லறத்தாரைவிடத் துறவிகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இருப்பர். உண்மையும் கூடச் சில சமயங்களில் உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்க நேரலாம், அத்தகைய சமயங்களில் சமணத் துறவிகள் உண்மையும் பேசாது மௌனமாக இருந்துவிடுவர்.

**3. <u>கள்ளாமை</u>**

மற்றொரு துறவி வைத்திருக்கும் சாத்திர நூலைக்கூட அவருக்குத் தெரியாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது. பிறர் யாரும் உரிமை கொண்டாடாது வழியின் கிடக்கும் சிறுபொருளையும் கூடச் சமணத் துறவிகள் தீண்டலாகாது. எடுத்தால் அதுவும் திருட்டாகும்; கண்டெடுத்ததாகாது.

## 4.துறவு (பிரமசரியம்)

துறவு என்றாலே ஆசையைத் துறப்பதுதான். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற ,மூவாசைகளில் பெண்ணாசையே வலிவானது. மண்ணாசையும் பொன்னாசையும் உள்ளத்தால் அனுபவிக்கப்படும் ஆசை, பெண்ணாசை உள்ளத்தால் மட்டுமின்றி உடம்பாலும் அனுபவிக்கப்படும் ஆசை, துறவிகள் இவ்வாசையை அறவே விலக்கவேண்டும். கனவிலும் பெண்ணாசை கூடாது என்கிறார் வள்ளலார். சமணத்துறவிகள் ஏனைய எல்லாவற்றையும்விட இதில் பிரமசரியத்தில் மிகவும் விழிப்பாக இருப்பர். துறவறத்தார்க்கு மற்றொன்றின் உடலுறவு அறவே விலக்கப்பட்டது. துறவிகள் திருமணங்களுக்குச் செல்லக்கூடாது. திருமணக் காட்சியைக் காணக் கூடாது. தெருவில் செல்லும்போது திருமண ஊர்வலம் வந்தால், அதனைப் பாராது அப்புறம் திரும்பிக் கொள்ள வேண்டும், இது சமணத்துறவிக்கு மட்டுமன்று, இந்து துறவிகளுக்கும் பொருந்தும். வேதாந்தத் துறவி சித்பவானந்தர் 'துறவி' என்ற நூலில் இதையெல்லாம் எழுதுகிறார். ஆனால் இன்றோ நம் துறவிகள் (இந்து துறவிகள்) திருமணங்களுக்குத் தலைமை வகிக்கிறார்கள். முன்னிலை வகிக்கிறார்கள். கிறித்துவப் பாதிரியார்கள் திருமணமே செய்து வைக்கிறார்கள். அது அவர்கள் வழக்கம். அதைப் பற்றி இங்கு பேச்சில்லை. இவையெல்லாம் சமணத்தில் நடவாது.

இல்லறத்தில் இருந்து பின்பு துறவு பூண்ட துறவி பூர்வாசிரம இல்லறத்தை மனத்தால் எண்ணியும் (நினைத்தும்) பார்க்கமாட்டார். எவ்வளவு அழகான, எவ்வளவு அன்பான மனைவியைத் துறந்தோமே இதுவன்றோ துறவு என்றுகூட எண்ணிப்பார்க்க மாட்டார். இவ்வாறு இருப்பது உத்தம பிரமசரியம் என்று சமண சாத்திர நூல்களிற் கூறப்பெற்றுள்ளது. துறவிகள், நூறு வயதான பெண்களின் அருகில்கூட இருக்கக் கூடாது என ஆசாரங்கம் என்ற சமண ஆகமம் கூறுகிறது.

**மாதரைப் புகழ்தல் பார்த்தல்**
**மற்றவர் அட்ட தென்றல்**
**ஆதரித்து உண்டல் புக்கு**
**அவ்வகத்து உறைதல் அம்சொல்**
**மேதகக் கேட்டல் மேவிச்**
**சிரித்திடல் விழைவு நோக்கல்**
**ஏதமின்று இவற்றின் நீங்கி**
**இலங்கும் உள்ளத்தார் ஆனார்.**

என்பது மேருமந்தர புராணம், இம்மேருமந்தர புராணச் செய்யுளுடன் நம் சைவத்துறவி குமரகுருபரர் பாடிய நீதிநெறி விளக்கத்தில் உள்ள

**பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்**
**கண்ணோடு நெஞ்சுறைப்ப நோக்குறார்-பண்ணொடு**
**பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டர்**
**வீடில் புலப்பகை யினார் ..84**

என்ற பாடலும் ஒப்பு நோக்கிக் காணத்தக்கது.

சமணத் துறவிகள் பெண்களை ஏறெடுத்துப் பாரார். மேற்காட்டிய மேரு மந்தரப் பாடலுக்கும் நீதிநெறி விளக்கச் செய்யுளுக்கும் இலக்கணமாக விளங்குவார்.

## 5. அவாஅறுத்தல்

ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்றார் புத்தர். அவா பிறப்பீனும் வித்து என்றார் திருவள்ளுவர். அவா பிறப்பைக் கொடுக்கும். அவா அறுத்தல் பிறப்பை அறுக்கும். அவா அறுத்தல் பிறப்பை அறுப்பதாகும். திரு வள்ளுவர் அவா அறுத்தல் என்றே ஒரு அதிகாரத்தைச் செய்தார்.

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து. ..361**

என்று அவாஅறுத்தல் அதிகாரத்தை தொடங்கி

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும். ..370**

என்று முடித்தார். ஆரா இயற்கை அவாவை நீத்துப் பேரா இயற்கை பெற்றார்கள் தீர்த்தங்கரர்கள். அவா ஆரா இயற்கையுடையது. அதை அறுப்பது எளிதன்று.

ஆசைகளைத் துறப்பதே துறது. சமண முனிவர்கள் ஆசைகள் அனைத்தையும் முற்றுந் துறந்தவர்கள்.

கொலை, களவு, பொய், கள், விபசாரம் ஆகிய ஐந்தும் பஞ்சமா பாதகங்கள் என்று பொதுவாக எல்லாச் சமயத்தாராலுமே கூறப்பெறும். இந்து சமயமும் கூறும். சமண சமயத்தில் இவையனைத்தையும் விலக்குவது அணு விரதம், மகாவிரதம் ஆகிய இரண்டிலுமே முதலில் வைக்கப்பெற்றுள்ளது. இல்லறத்தார் துறவறத்தார் ஆகிய இருவருக்குமே விதிக்கப்பெற்றுள்ளது. இல்லறத்தார் ஆசைகளை வரையறுக்கிறார்கள். துறவறத்தார் அறவே அகற்றுகிறார்கள்.

கொலை, பொய், களவு, காமம், அவா ஆகிய ஐந்தையும் அகற்றுவதைப் பற்றிச் சீவக சிந்தாமணியில்

**ஐவகைப் பொறியும் வாட்டி, ஆமையின் அடங்கி, ஐந்தின்**
**மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கு நின்றெரிய விட்டுப்**
**பொய் கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றிச்**
**செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.**

**- சிந்தாமணி. 2824**

எனக் கூறப்பெற்றுள்ளது. நீலகேசியில்

**கோறல் பொய்த்தல் கொடுங்களவு நீக்கிப் பிறர்ம னைகண்மேல்**
**சேற லின்றிச் செழும்பொருண்மேல் சென்ற சிந்தை வேட்கையினை**

**ஆறுகிற்பின் அமருலகம் நுங்கட்கடிய தாமென்றான்.**
**நீறும் ஓடும் நிழன்மணியும் பொன்னும் நிகரா நோக்குவான்,**

என்று சொல்லப் பெற்றுள்ளது.

**<u>சமிதிகள் ஐந்து</u>**

1. ஈர்யா சமிதி
2. பாஷா சமிதி
3. ஏஷானா சமிதி
4. ஆதார நிகேஷபணா சமிதி
5. உத்சர்க்க சமிதி

**<u>1.ஈர்யா சமிதி</u>**

நடமாடும் காலங்களில் எறும்பு புழு பூச்சி முதலிய சிற்றுயிர்களுக்கும் துன்புறாமல் நசுங்கிவிடாமல் பார்த்து நடத்தல். சமணத்துறவிகள் புல்வெளியில் நடக்க மாட்டார்கள். நடந்து நடந்து தேய்ந்த பாதையில் தான் நடப்பார்கள். இரவு இருட்டு வேளையில் நடக்க மாட்டார்கள். பகல் நேரத்திலேயே நடப்பர். அக்கம் பக்கம் பாராமல் நேர் எதிரே பாதையை நுகத்தடி தூரம் பார்த்து நுண்ணுயிர்கள் காலில் மிதிபட்டு நசுங்கித் துன்புறாதவாறு மிகவும் விழிப்பாக(ஜாக்கிரதையாக) நடந்து செல்வர். விரைந்து கடு நடையாக நடக்கமாட்டார்கள். மெல்லென மெதுவாக நடப்பர். நுண்ணுயிர்கள் காலில் மிதிபடாதபடி ஒதுக்குவதற்காக கையில் மயிற்பீலிக் குஞ்சத்தை ஏந்திச் செல்வர்.

**2.<u>பாஷா சமிதி</u>**

இன்னா கூறாது இனியவற்றையே கூறுதல் கடுஞ்சொல் முதலியவற்றை அறவே தவிர்த்தல், வாக்கால் பிறருக்கு இன்னா செய்யாமை, இனியவே செய்தல்.

**3. ஏஷணா சமிதி**

குற்றமற்ற உணவைக் கொள்ளுதல் சமணத் துறவிகள் நாற்பத்தாறு வகைக் குற்றங்கள் இல்லாத உணவையே யாசித்துப் பெற்று அளவோடு உண்ண வேண்டும் என்பது விதி. 46 குற்றங்களையும் பின்னர் ஓரிடத்திற் கூறுவோம்.

**<u>4.ஆதார நிகேஷபணா சமிதி</u>**

மயிற்பீலிக்குஞ்சம், கமண்டலம், சாத்திர நூலகள் ஆகிய இம்மூன்றுமே சமணத்துறவிகளின் கைப் பொருள்கள். இவற்றை வைக்கும் போதும் எடுக்கும் போதும் அங்கிருக்கக்கூடிய எறும்பு முதலிய சிற்றுயிர்கள் துன்புறாதவாறு பார்த்து மெல்ல வைத்தலும் மெல்ல எடுத்தலும் இச்சமிதியாகும்.

## 5. உத்சர்க்க சமிதி

மல சலங்கழிக்கும் போது அவ்விடத்தில் ஏதேனும் சிற்றுயிர்கள் இருக்கின்றனவா என்று பார்த்து, அவற்றுக்குத் துன்பம் நேராதவாறு கழித்தல், அவற்றை இலேசாக அப்புறப்படுத்திவிட்டோ அல்லது அவை இல்லாத இடத்திலோ கழித்தல்.

## ஐம்புல அடக்கம்

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளாலுமிவற்றின் புலன்களாலுமே நாம் உலகத்தை அனுபவிக்கிறோம். துறவிகள் புலன்களின் வழியே போகாது ஐம்புலன்களையும் அடக்கி ஆளவேண்டும். புலனடக்கம் துறவறத்துக்கு இன்றியமையாதது.புலனைந்தும் வென்றால்தான் வீரமே வீரம் என்றார் ஔவையார். புலனைந்தையும் வென்றதால்தான்வர்த்தமானர் மகாவீரர் ஆனார். ஐம்புல வெற்றி அவரை மகாவீரராக்கிற்று.

புலனடக்கத்தை வள்ளலார் இந்திரிய ஒழுக்கம் என உபதேசித்திருக்கிறார். இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்று வள்ளலார் உபதேசித்த நான்கு ஒழுக்கங்களில் முதலாவதான (முதன்மையான) இந்திரிய ஒழுக்கம் புலனடக்கமே.

**மெய்வாய்கண் மூக்குச் செவி எனப் பேர்பெற்ற**
**ஐவாய வேட்கை அவாவினை-கைவாய்**
**கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்**
**விலங்காது வீடு பெறும் -6.துறவு.9 (59)**

என்பது சிறந்த சமண நீதி (அற)நூலாகிய நாலடியார்

## ஆவஸ்யகம் ஆறு (6)

1. சாமாயிகம்
2. சதுர்விம்சதிஸ்தவம்
3. வந்தனம்
4. பிரதிக்ரமணம்
5. காயோத்சர்க்கம்
6. பிரத்யாக்யானம்

**1.சாமாயிகம்**

இன்பத்தையும் துன்பத்தையும் ஒப்பக் கருதும் சமநிலை, நாள்தோறும் முப்போதும் செய்யும் ஆத்ம சிந்தனையால் இச்சமநிலையை உண்டாக்கி வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**2. சதுர்விம்சதிஸ்வதம் (துதி)**

இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் பெயர்களைச் சொல்லிப் போற்றித் துதித்தல்.

**3. வந்தனம்**

ஆசாரியர்களையும் சாதுக்களையும் வணங்குதல்

**4. பிரதிக்ரமணம்**

விரதங்களிலிருந்து வழுவ நேர்ந்தால், தக்கவகையில் கழுவாய்(பிராயசித்தம்) தேடிக் கொள்ளுதல், மீண்டும் வழுவாதிருக்கும் வகை நாடல்.

**5. காயோத்சர்க்கம்**

உடலுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களை பொறுத்தல்

**லோசம்**

மயிர் களைதல், தலைமயிரை மழித்துக் கொள்ளல், நீளமாக வளரவிடல் என இருவகைப் பழக்கவழக்கம் மக்களிடையே வழங்குகிறது. மழித்தலும் நீட்டலும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். மழித்தல் தலைமயிரைச் சிரைத்துக் கொண்டு மொட்டைத் தலையராய் இருத்தல். நீட்டல், தலைமயிரை நீளமாக வளரவிடல். இயற்கை வளர்ச்சி போதாதென்று ஓட்டுச்சடை புனைந்து கொள்வதும் சிலரிடையே உண்டு. இந்து வேதாந்திகள் நீள வளர விடுவர். பௌத்தர் வளரவிடாது மழித்துக் கொள்வர். கத்தியால் சிரைத்துக் கொள்வார். சமணத் துறவிகள் கத்தி கொண்டு மழிக்காது தம் கைகளாலேயே தலைமயிரைப் பறித்துக் கொள்வர். தலைமயிரைப் பிடுங்கிக் கொண்டு மொட்டைத் தலையுடன் இருப்பர். இது சமணம் தவிர வேறெங்கும் இல்லாத பழக்கம். லோசம் என்பது தலைமயிரை கைகளாலேயே பறித்துக் களைதல். உலோச்சனார் என்ற சங்ககாலப் புலவரின் பெயர் லோசம் என்பதைக் கொண்டு அமைந்தது. அவர் சமணர் என்றதோர் கருத்துண்டு. லோசத்தின்போது ஏற்படும் துன்பத்தை (வலியை)ப் பொறுத்துக் கொள்வர். பொறுத்துக் கொள்ளும் அளவுக்கு சமண முனிவர்கள் மனப்பக்குவம் உடற்பக்குவம் பெற்றிருப்பர். துறவு கொள்ளும்போது நிகழும் தீட்சையில் லோசம் இன்றியமையாதது. அதன்பின் வாழ்நாள் முழுவதும் அவ்வப்போது லோசம் செய்து கொள்வர்.

**திகம்பரம்**

ஆடையின்றி நிர்வாணமாக இருத்தல், சமணத் துறவிகள் ஆடை அணியாமல் நிர்வாணமாகவே இருப்பர். திசைகளையே ஆடையாகக் கொண்டவர் என்ற பொருளில் திகம்பரர் என்று பெயர் வந்தது இதனால்தான் பழங்காலத்தில் இலை, மரவுரி, தோல் ஆகியவற்றால் உடலை மூடிக்கொள்வது, குறைந்த அளவு இடுப்புப் பகுதியையாவது மறைத்துக் கொள்வது வழக்கம். நெய்தல் தொழில் ஏற்பட்ட பின் துணி உடுத்தும் பழக்கம் ஏற்பட்டது. சமண முனிவர்கள் இதில் எந்த வகையாலும் உடம்பை மூடார், மறையார். பிறந்த மேனியராகவே, திறந்த மேனியராகவே இருப்பர். மானத்தைக் காக்க உடை உதவுவதோடு குளிர் வெப்பம் ஆகியவற்றிலிருந்தும் காத்துக் கொள்ள உதவும். கொசுக்கடி முதலிய வற்றிலிருந்தும் காத்துக் கொள்ள உதவும். சமண முனிவர் மான அவமானம் பார்ப்பதில்லை. தட்பவெப்பங்களைப் பொருட்படுத்துவதில்லை. கொசுக்கடி முதலிய வற்றால் உண்டாகும் துன்பங்களையும் பொறுத்துக் கொள்வர். 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை" என்ற திருக்குறள் சமண முனிவர்களுக்கே முற்றிலும் பொருந்துவது.

ஆடை அணியாத திகம்பரநிலை இந்து சமயத்திலும் உண்டு. அவதூத சந்நியாசம் என்று பெயர். அவதூத சந்நியாசிகள் ஆடையின்றி நிர்வாணமாகவே இருப்பர். சதாசிவப் பிரமேந்திரர் முதலியோர் அவ்வாறிருந்தவர்கள். வள்ளலாரைத் தரிசிப்பதற்காகத் திருவொற்றியூர் சந்நிதி வீதியில் இந்து அவ தூதத்துறவி ஒருவர் காத்திருந்து தரிசித்த வரலாறு உண்டு.

உள்ளம் நிர்வாணமாக இருந்தால் உடம்பும் நிர்வாணமாக இருக்கலாம் உள்ளத்தை நிர்வாணமாக வைத்துக் கொள்பவர்கள் உடம்பையும் நிர்வாணமாக வைத்துக் கொள்ளலாம். யாருடைய நிர்வாணக்கோலம் பார்ப்பவர்களுக்கு அருவருப்பையும் கூச்சத்தையும் தருவதில்லை. அவர்கள் நிர்வாணமாக இருக்கலாம். சமணத் துறவிகளும் இந்து அவதூதத் துறவிகளும் அப்படி இருந்தனர். பெண்களும் அவர்களைக் கண்டு கூசியதில்லை.

இன்றும் வடஇந்தியாவில் நாகசந்நியாசிகள் நிர்வாணமாகவே உள்ளார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வடக்கே திரிவேணி சங்கமத்தில் நிகழும் கும்பமேளா விழாவில் நூற்றுக்கணக்கான நாக சந்நியாசிகளை நிர்வாணக் கோலத்திலேயே காணலாம். முன்னாளில் ஆயிரக்கணக்கில் இருந்தனர். நேருவின் ஆட்சிக்காலத்தில் கும்பமேளா விழாவுக்கு நாகசந்நியாசிகள் நிர்வாணக் கோலத்தில் வருவதைத்தடை செய்யப்போவதாகக் கூறினார். பின்பு இது சமயப் பிரச்சனை, இதில் தலையிட வேண்டாம் என்று இருந்துவிட்டார்.

சமணத்துறவிகள் ஊருக்குள் வசிப்பதில்லை. ஊருக்கு வெளியே காடுகளிலும் மலைகளிலுமே வசிப்பர். மலைச்சரிவுகள், மலைக்குகைகள் போன்றனவே அவர்கள் வாழிடம், உணவுக்குப் பிச்சை ஏற்பதற்கு மட்டுமே ஊருக்குள் வருவர். அப்போதும் அவர்களைக் கண்டு யாரும் நாணார், நகையார், இனிது உபசரித்து அனுப்புவர். சமணத்துறவிகளின் திகம்பரம் அப்பேர்ப்பட்டது.

அக்கலாத்தில் தென்னாட்டில் தமிழ்நாட்டில் திகம்பர சமணர்களே மிகுதி. சுவேதாம்பரம் (வெள்ளை ஆடை அணியும் பிரிவு) பிர்காலத்தில்தான் ஏற்பட்டது. இக்காலத்தில் திகம்பரமாக இருப்பவர்கள் மிகவும் குறைவு. மிகச்சில முனிவர்களே திகம்பரராக உள்ளனர். அவர்களையும் வெளியில் காண்பது அரிது.

பகவான் மகாவீரர் திகம்பராகவே திகழ்ந்தார். தீர்த்தங்கரர்களின் திரு மேனிகளெல்லாம் திகம்பரமாகவே (நிர்வாணமாகவே) இருப்பதாகச் சமணக் கோயில்களிலும், மலைகளில் உள்ள பாறைச் சிற்பங்களிலும் காணலாம். மோட்சத்திற்கு நிர்வாணம் என்று ஒரு பெயர். சமண பௌத்தங்களில் மிகுதியாக வழங்குவது. மோட்சம் புகும்போது மட்டுமல்ல, மோட்ச சாதனையின் போதும், மோட்ச சாதனையின் தொடக்கத்திலிருந்தே சமணத்துறவியர்கள் நிர்வாணமாக இருப்பர்.

இந்து சமயத்தில் நிர்வாணக்கோலம் மிகமிக அரிதாக வழங்கும். சமணத்தில் அது மிகப் பெரிதாக வழங்கும். வேறு எச்சமயத்திலும் இவ்வழக்கம் இல்லை. நிர்வாணக்கோலம் சமணத்துறவிகளுக்கே உரிய சிறப்பு. அவர்களது திறந்த மேனிகள் சிறந்த திருமேனிகள்.

**நீராடாமை**

சமண முனிவர்கள் நீராடுவதில்லை. வியர்வை அழுக்கு முதலிய அவர்களின் உடலில் அவ்வளவாகத் தோன்றுவதும் சேர்வதும் இல்லை. "புறந்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும்"என்ற திருக்குறள் சமண முனிவர்களுக்கே முற்றும் பொருந்துவது. புறந்தூய்மையினும் அகந்தூய்மையே அவர்கள் விரும்புவது. அகந்தூய்மை உடையார்க்குப் புறந்தூய்மை தானாகவே அமையும்.

அண்மைக்காலத்தில் வேலூர் மாவட்டம் திருவலம் ஊரில் திருவலம் சுவாமிகள் என்று ஒருவர் இருந்தார். பலரும் தெரிந்திருக்கக் கூடும். கிணற்றில் நீர் இறைக்கப் பயன்படுத்தும் தாம்புக்கயிற்றின் அளவுள்ள தடித்த தென்னைநார்க் கயிற்றை அரை நாணாக அணிந்திருப்பார். சணல் சாக்கால் கோவணம் கட்டியிருப்பார். அவ்வளவே அவரது உடை, நீராடார். பல்துலக்கார். அவர் மேனியில் எந்த நாற்றமும் ஏற்படுவதில்லை. அருகில் சென்றாலும் நாம் அரு வருப்பதற்கு ஒன்றுமில்லை. அவரிடம் நமக்குப் பழக்கமுண்டு. நம் மெய்யன்பர்களில் அவரும் ஒருவர். நாளும் ஒருவேளை உச்சிப் போதில் கேழ்வரகுக்கூழ் அருந்துவார். மல சலம் கழிவது குறைவு. சிறிதளவே கழியும். அவருடைய பழக்க வழக்கங்கள் யாவும் தனித்தன்மையன. பிறரால் பின் பற்றக்கூடாதன. திருவோட்டில் நாயுடம் உண்பார். நாய் ஒருபக்கம் உண்ணும் இவர் ஒருபக்கம் உண்பார். மரத்தடியில் அமர்ந்திருப்பார். அருகில் மரப்பொந்தில் பெரிய பெரிய வண்டுகள்(கதண்டுகள்) இருக்கும். வெளிவந்து உலவும். இவரை ஒன்றும் செய்யா. இவரும் ஒன்றும் செய்யார். மிகப்பெரிய ஜீவகாருண்யவாதி. திருவலம் சந்தையில் இவர் காலத்தில் மீன், கருவாடு, இறைச்சி, விற்பனை இல்லை. மீன்வலைகளை எல்லாம் இளைஞர்களே தீயிட்டுக் கொளுத்திவிட்டனர். இவர் காலம் அதிலும் சிலகாலம் ஊரே சைவமாக இருந்தது. சைவத்தலம், உணவாலும் சைவத்தலமாக இருந்தது.

**பல்துலக்காமை**

நீராடாமை போன்ற பல்துலக்காமையும் சமண முனிவர்களுக்குரியது. உண்மைத் துறவிகளின் பற்கள் துலக்காமலே துலங்கும். திருமேனியும் அவ்வாறே.

உணவைப் பெரும்பாலும் துறந்தவர்கள். மிகச்சிறிதளவே உண்பவர்கள். அதுவும் நாற்பத்தாறு குற்றங்களற்ற உணவு. அவர்களுக்குப் பல் துலக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை.

**தரையிற் படுத்தல்**

படுக்கைச் சுகத்தை அறவே துறந்தவர், முற்றுந்துறந்தவர் சமண முனிவர்கள். துறவுக்கு அயிற்சுவை துயிற்சுவை இவ்விரண்டும் ஆகாதது என்று சைவத் துறவி குமரகுருபரர் கூறுகிறார்.

**துயிற் சுவையும் தூநல்லார் தோட் சுவையு மெல்லாம்**
**அயிற் சுவையின் ஆகுவேன் றெண்ணி - அயிற்சுவையும்**
**பித்துணாக் கொள்பவர்போற் கொள்ப பிறர்சிலர்போல்**
**மொத்துணாமொய்ம்பி னவர். .. 85 (291)**

என்பது குரகுருபரர் அருளிய நீதிநெறி விளக்கம்

துயிற்சுவை - தூக்கத்தின் இன்பம்,
அயிற்சுவை - உணவின் சுவை
தூநல்லார் தோள் சுவை - காம இன்பம்

அயிற்சுவை துயிற்சுவைகளைத் குமரகுருபரர் இன்னோரிடத்திலும் கூறுகிறார்.

**" அயிற்சுவை பெறாஅன் துயிற்சுவை உறாஉன்"**

என்பது சிதம்பர மும்மணிக் கோவை இருபத்தாறாம் செய்யுளின் பத்தாவது அடி இவ்வோரடியிலேயே அவர் பெரும்பொருள் உணர்த்துகிறார். புரிய வைக்கிறார். அயிற்சுவை துயிற்சுவைகளைப் பெறாஅன், உறாஅன் என்று அளபெடுத்துக் கூறுகிறார். சுவையாகக் கூறுகிறார்.

சமணத்துறவிகள் அயிற்சுவை துயிற்சுவைகளை அறவே துறந்தவர்கள். துயிற்சுவை துறந்த அவர்களுக்குப் படுக்கையும் தலையணையும் எதற்கு? சமணத் துறவிகள் படுக்கை விரித்துப் படுப்பதில்லை. பாய்விரித்துப் படுப்பதில்லை. திகம்பரம் தவிர்ந்துபோன பின்னாளில் பாய் உடுப்பதுண்டு. ஆனால் பாயிற் படுப்பதில்லை. வெறுந்தரையிற் படுப்பர். கட்டாந்தரையில் படுப்பர். கற்றரையில் (கல்தரையில்) படுப்பர். **புதுக்கோட்டை அருகிலுள்ள சிற்றன்னவாயில் மலையில் சமணமுனிவர்கள் படுக்க, கற்பாறைகலில் சில இடங்களில் சமதளப் படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம், இக்கற்படுக்கைகள் சமண முனிவர்களுக்காக அக்கால மன்னர்கள் செய்த திருப்பணி.** இப்படிப்பட்ட கற்படுக்கைகளை மலை தோறும் காணலாம்.

**நின்றுண்ணல்**

சமணத்துறவிகள் ஆசனத்திலோ தரையிலோ அமர்ந்து உணவு உண்ணார். நின்று கொண்டே உண்பர். இல்லறத்தார் வீட்டில் இடும் உணவைக் கைகளாலே

ஏற்பர். இலைமுதலியவற்றில் வைத்து உண்பதில்லை. கைகளிலிருந்து நின்ற நிலையிலேயே உண்பர். பாத்திரம் எதுவும் வைத்துக் கொள்வதில்லை.

இந்து சமயத்திலும் இவ்வாறு ஒரு மரபு உண்டு. ஆயின் மிகச்சிறுபான்மை, கரதலபிட்சை என்று பெயர். சென்னையில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் என்றொருவர் இருந்தார். கரமே பாத்திரமாகப் பிச்சை ஏற்றுண்டதால் அப்பெயர் பெற்றார். சமணத்துறவிகள் ஓரிடத்தில் அமர்ந்து நிதானமாக ஆர அமர உண்பதில்லை. சிறதளவு உணவை நின்ற நிலையிலேயே புசிப்பர். பௌத்தர்கள் இருந்து உண்பவர்கள். சமணர்கள் நின்று உண்பவர்கள்.

**ஏகபுத்தம்**

ஒரு நாளைக்கு ஒரே வேளை உண்ணுதல், பகலில் உச்சிப்பொழுதில் ஒரேவேளை உண்பர். இரண்டு நாள்களுக்கு ஒருமுறை மூன்று நாள்களுக்கு ஒரு முறை உணவு கொள்ளும் விரதம் பூண்டவர்களும் உண்டு. எட்டு நாள்களுக்கு ஒருமுறை உணவு கொண்ட அட்டோபவாசிகள் கல்வெட்டிற் கூறப்பெறுகின்றனர். ஒரு நாளுக்கு ஒருவேளை உண்ணும் உணவும் சுவையாக இருக்க வேண்டும் என்பதில்லை. சுவையாலும் அளவாலும் குறைந்த உணவையே உண்பர்.

**ஆக 28 மூலகுணங்கள்**

கொல்லாமை(அகிம்சை) முதலாக நின்றுண்ணல் ஈறாக மேற்கூறிய இருபத்தெட்டு ஒழுக்கங்களும் சமணத் துறவிகளுக்குரிய மூலகுணங்களாகும்.

சமணர்கள், இல்லறத்தாரும் துறவிகளும் ஆகிய இருவகையினருமே கடுநோன்பிகள்.

நீலகேசி உரையில் சமய திவாகரவாமன முனிவர்

**உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திரு உரு.** ..261

என்ற குறட்பாவை எடுத்துக்காட்டி "என்பது எம் ஒத்து ஆதலின்" என்று கூறுகிறார். உற்ற நோய் நோன்றலும்(வரும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்வதும்) உயிர்க்கு உறுகண் செய்யாமையும் (உயிர்களுக்கு எவ்வித சிறு இடையூறும் செய்யாதிருத்தலும்) சமணத் துறவிகளின் இருகண்கள்.

## சமணத்தின் நான்கு தானங்கள்

சமண சமயத்தில் நான்கு தானங்கள் மிகச்சிறந்தனவாகக் கூறப்பெறுகின்றன.

1. அன்னதானம்
2. ஔடததானம்(மருத்துவதானம்)
3. சாத்திரதானம்(ஞானதானம்)
4. அபயதானம்

**1.அன்னதானம்**

**எல்லா தானங்களிலும் சிறந்தது அன்னதானமே.** நான்கு தானங்களில் அன்னதானமே. நான்கு தானங்களில் அன்னதானமே முதலில் வைக்கப் பெற்றுள்ளது. உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது. உணவு இல்லாவிட்டால் உடம்பில் உயிர் தரித்திராது.

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

என்பது சங்க இலக்கியமாகிய புரநானூற்றிலும் சங்க மருவிய கால இலக்கியமாகிய மணிமேகலையிலும் கூறப்பெறுகிறது. உண்டி, கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் இவ் ஒருவரி, ஒப்பற்ற வரி, பழந்தமிழ் நூல்கள் இரண்டில், ஒன்றை ஒன்று அப்படியே படி எடுத்தாற்போற் கூறப்பெறுகிறது.

பசி உயிர்போகிறது. பசி உயிரை எடுக்கிறது என்று **ஏழை எளியவர்கள்** கூறக்கேட்கிறோம். **பசி உயிரை எடுக்கும்போது அதற்கு உணவு கொடுப்போர் உயிர் கொடுப்போர்தானே!**

சமணத்தில் நான்கு தானங்களில் முதல்தானம் அன்னதானம், அன்ன தானத்திற்குப் பின்னரே ஞானதானம்.

<u>வள்ளலாரும் அன்னதானத்தையே முதன்மையாகக் கொண்டார்.</u> **உலகில் அன்னதானத்தை விளங்க வைப்பதற்காகவே வந்தவர் வள்ளலார்.** அன்னதானத்தைப் பற்றிப் பேசினார், எழுதினார், பாடினார், இவற்றோடு மட்டும் நின்றாரில்லை. காலம் காலமாகக் தொடர்ந்து அன்னதானம் நடந்து கொண்டிருப்பதற்கென்றே வடலூரில் சத்திய தருமச்சாலை என்றொரு அன்னசாலையைக் கட்டினார். அதில் அணையா அடுப்பை ஏற்றினார். **138 ஆண்டுகளுக்குமுன் வள்ளலார் ஏற்றியருளிய அணையா அடுப்பு இன்றும் எரிந்துகொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஏழை எளியோர்கள் பசித்தீயை அவித்து வருகிறது.**

**வள்ளலார் சத்திய தருமச்சாலையைத்தான் முதலில் அமைத்தார்** (1867) சாலையை அமைத்து **ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே ஞானசபையை அமைத்தார் (1872) வள்ளலாரின் அன்னதானம் முன் ஞானதானம் அதன்பின்.**

**2. மருத்துவ தானம்**

உயிரின் நோய் பிறவிநோய். உடலுக்கு உண்டாகும் நோய்கள் பல்வேறு நோய்கள். உடல் நோயற்று இருந்தால்தான் அவ்வுடலைக் கொண்டு ஆன்ம சாதனைகளை முறையாகச் செய்ய இயலும். எல்லா நலங்களிலும் உடல் நலம் மிகவும் முக்கியமானது. மக்கள் நோயுற்றுத் துன்புறுத்துவதைக் கண்ட சமண முனிவர்கள் மருத்துவ தானத்தையும் ஒருதானமாகக் கொண்டனர். சமண முனிவர்களே மருத்துவப் புலமை பெற்று மருத்துவர்களாகவும் விளங்கினர். பதினெண்கீழ்கணக்கு நூல்களில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், பெரும்பஞ்சமூலம் என்ற நூல்கள் மருத்துவப் பொருள்களாற் பெயர் பெற்றவை, இவற்றில் திரிகடுகம் தவிர்த்த ஏனைய மூன்றும் சமணர்களார் இயற்றப்பெற்றவை.

வள்ளலாரும், நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும். எனை அடுத்தல் சுகம் வாய்ந்திடல் வேண்டும் என்று பாடினார். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும் என்பது போல இவ்வுடம்பைக் கொண்டுதான் முத்தி சித்திகளைப் பெறவேண்டும். ஆதலின் உடலை நன்னிலையிற் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்றும் உடம்பின் அருமையும், அதனை நோயின்றிப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாமையும் பல உபதேசங்களில் கூறியுள்ளார். தமிழ்ச் சித்தர்கள் பலரும் மருத்துவராகத் திகழ்ந்தவர்கள். சித்த மருத்துவம் என்ற ஒரு மருத்துவமே சித்தர்களால் உண்டாயிற்று. **வள்ளலார் மருத்துவம் அறிந்த சித்தராகவும் ஞானியாகவும் விளங்கினார். தாமே மருந்துகள் பலவற்றைச் செய்து பிணியுற்றவர்களுக்கு அளித்து நோய் தீர்த்தார். வடலூரில் ஒரு மருத்துவமனையும் கட்டுவதற்கு திட்டமிட்டிருந்தார்.**

### 3. சாத்திர தானம்

சாத்திர தோத்திர நூல்களைப் பாடஞ் சொல்லுவது ஞானதானம். படி எடுத்துப் பலருக்கும் வழங்குவது ஞானதானம். சிந்தாமணி சமணர்களின் பாராயாணநூல். அதனைப் பலபடிகள் எடுத்துத் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் விரும்புவோருக்கு அளிப்பது சமணப் பெருமக்களிடையே வழக்கமாக இருந்த தென்பதைத் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் கூறுகிறார். இருநூறு முந்நூறு ஆண்டுகளுக்கு முன் நூல்களை அச்சிடும் வசதி இல்லை. அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பெறாத காலம். கண்டுபிடிக்கப்பெற்று வழக்கத்திற்கு வந்த பின்னும் ஐரோப்பியர் தவிர ஏனையோர்க்கு அச்சுரிமை இல்லாத காலம் அக்காலத்தில் ஓலைச்சுவடிகள் தான். சீவக சிந்தாமணி போன்ற பெருநூல்களை ஓலைச் சுவடிகளில்,ஏடெழுதுவோர்களைக் கொண்டு பல படிகள் எழுதச் செய்து ஞானதானமாக வழங்குவதென்றால் அதற்குக் காலச் செலவும் பொருட் செலவும் எவ்வளவு ஆகும். செய்தார்கள்! இது பெரியவர்களுக்குச் செய்யப்படும் பெருநூல்தானம் என்றால், இளஞ்சிறுவர்களுக்குப் பள்ளிக் கூடங்கள் வைத்துப் பாடம் நடத்தினார்கள். சமண முனிவர்கள் உறைந்தவை பள்ளிகள் என்றால் சமணர்கள் சிறுவர்களின் கல்விக்காக நடத்தியவை பள்ளிக்கூடங்கள். பண்டைக் காலத்தில் நாடெங்கும் சமணப் பள்ளிகள்(முனிவர்கள் வாழிடங்கள்) பலவாக இருந்ததைப் பழந்தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. பள்ளிகளும் பல. பள்ளிக் கூடங்களும் பல. பள்ளிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஞானதானம் நன்கு நிகழ்ந்தது. பள்ளிப்பிள்ளைகளுக்கு வேண்டிய அடிப்படை நூல்களான வாய்ப்பாடு, கணிதம் போன்றவை சமணப்புலவர்களால் செய்யப்பெற்று விளங்கின.

வள்ளலாரின் ஞானதானம் திருவருட்பா ஆறு திருமுறைகளும், உரைநடை நூல்களும், உபதேசங்களும் பிறவுமாம். ஜோதிவழிபாட்டுக்காக அமைத்தருளிய சத்திய ஞானசபையும் ஞானதானமே. சன்மார்க்க விவேக விருத்து என்றொரு திங்கள் இதழையும் வள்ளற்பெருமான் தொடங்கினார். "சாஸ்திர சாலை" என்றொரு நூலகத்தைத் தொடங்கவும் திட்டமிட்டிருந்தார். சன்மார்க்க போதினி சமரச வேதபாடசாலை என்று இரண்டு பாடாசாலைகளைத்தொடங்கினார். சன்மார்க்க போதினி பாடசாலை மும்மொழிப்பாடசாலை தமிழ் சமஸ்கிருதம். ஆங்கிலம் ஆகியமூன்று மொழிகளையும் பயிற்றுவிப்பது. பாலர் முதல் விருத்தர் வரை அனைவருக்கும் கற்பிப்பது. **தமிழ்நாட்டில் முதன் முதலில் முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர் வள்ளலாரே. இவை எல்லாம் வள்ளலாரின் ஞானதானங்கள்.**

### 4. அபயதானம்(அடைக்கல தானம்)

அஞ்சி வந்தவர்களுக்குப் பாதுகாப்பளித்தல் அபயதானம். அடைக்கலதானம் என்றும் இது கூறப்பெறும். குடும்பத்தினருக்கோ, உற்றார் உறவினர்களுக்கோ. பகைவர்களுக்கோ அஞ்சிப் பாதுகாப்புத் தேடி வரலாம். தீராப்பிணி முதலியவற்றிற்கு அஞ்சி வருபவர்களுக்கு ஆதரவளிப்பதே அபயதானம். அஞ்சினான் புகலிடம் என்ற பெயர் கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது. நாட்டில் பல இடங்களில் அஞ்சினான் புகலிடங்கள் இருந்ததாகக் கல்வெட்டுகளால் அறிகிறோம். இக்காலத்திய முதியோர் இல்லங்கள் ஒருவகையில் அஞ்சினான் புகலிடம் போன்றனவே எனலாம். ஆதரவின்றி ஆதரவு தேடி வருவோர்க்கு ஆதரவளிப்பதை அபயதானம் என்று ஓர் அறமாகவே சமண சமயம்கொண்டுள்ளது போற்றத்தக்கது.

கல்விப்பணியும் மருத்துவப்பணியும் தொண்டு நிறுவனங்களின் பணியாக (மிஷனரி வேலைகளாக)க் கிறித்துவ சமயத்தில் இன்றும் சிறந்து விளங்குவதைக் காணலாம். கிறித்துவம் பரவுவதற்கு இதுவும் ஒரு காரணம். ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே சமண சமயம் இந்த மிஷனரிப் பணிகளைத் தொடங்கிவிட்டது. கல்விப் பணி மருத்துவப் பணி இரண்டையும் தவிர, அன்ன மளிப்பது, அபயமளிப்பது ஆகிய வற்றையும் செய்திருக்கிறது. மிஷனரிப் பணிகளை மிகப் பழங்காலத்திலேயே முதன் முதலில் தொடங்கியது சமண சமயம் எனலாம். இலக்கியச் சான்றுகளும் சாத்திரச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. சைவத் திருக்கோயில்களிலும் ஆதுலர்சாலை காணார், கேளார்(குருடர் செவிடர்)பள்ளிகள் அந்நாளில் நடத்தப் பெற்றன.

சமணத்தின் நான்கு தானங்களில் முதலாவதான அன்னதானம் வள்ளலாருக்கு உரிய ஓர் அடையாளமாகவே ஆகிவிட்டது. வள்ளலர் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க நெறி அவர் வழங்கிய ஞானதானமே ஆகும். மருத்துவ தானமும் வள்ளலார் செய்ததே. வள்ளலாரிடம் நோயாளர் சிலர் பலர், ஆதரவற்றோர் சிலர் பலர் அடைக்கலம் புகுந்திருந்ததும், வள்ளலார் அவர்களுக்கு அடைக்கலமளித்து ஆதரித்தது வள்ளற் பெருமானது வரலாற்றில் காணப் பெறுவதாகும்.

## சமணர்களின்

## உணவுப் பழக்க வழக்கங்கள்

சமணர்களின் உணவுப் பழக்க வழக்கங்களிப் பற்றி இன்னும் எவ்வளவோ எழுதவேண்டும். நாமே எழுதுவதைவிடச் சமண அன்பர் ஒருவர் எழுதியுள்ளதை அப்படியே எடுத்துக்காட்டினால் மிகவும் பொருத்தமாக அமையும் என்ற எண்ணத்தால் வந்தவாசிக்கு அருகிலுள்ள ஆசாரியர் குந்தகுந்தர் கல்வி நிறுவனம் 1988-இல் வெளியிட்ட இந்திர த்வஜ ஆராதனை விழா மலரிலிருந்து தூய உணவு சமைத்தல் என்ற கட்டுரையை அப்படியே எடுத்துக் கொடுக்கிறோம். அது பின்வருமாறு:

### தூய உணவு சமைத்தல்

சிராவகன் வீட்டில் என்றும் நூல் விதிப்படியே உணவு சமைக்கப்படுகிறது. அது எளிதாயிருப்பினும் தூயதாக உள்ளதாகையால் தூயோருக்கு (ஸத்பாற்றங்களுக்கு)அளிக்கலாம். சுவை முதன்மை அல்ல; தூய்மையே முதன்மையாகும்.

ஆடம்பரமும் ஆரம்ப தோஷங்களும், அதிக செலவும் அதிப பரிகிரஹமும், இத்தனையும் உள்ள பொருட்களைத் தரக் கூடாது. கட்டாயப்படுத்தி ஏற்கவும் செய்யக்கூடாது, ஏற்பதும் தவறு.

இயற்கையான முறையை விட்டு ஆடம்பர முறையைப் பின்பற்றுவதால் தான முறை கெட்டு விரதி முதலானோர் அகப்புறச் சாரித்திரத்தில் பிரமாதம் முதலிய பல குற்றங்களுக்கு ஆளாகின்றனர்.

திரவ்ய, கேஷத்திர, கால, பாவம் இந்நான்கையும் நன்குணர்ந்து அதற்கேற்ப உணவு, மருந்து, நூல், அடைக்கலம் மற்றும் வேண்டிய பொருள்களை அளிக்க வேண்டும். இதனால் சம்யுக்த்வ பூர்வம் ஸம்யக்ஞான சாரித்திரம் முறையாக விருத்தி அடையும்.

கிணறு, நடப்பாய் கிணறு, குளம், நதி, சுனை இவற்றின் நீரை கத்தறி துணியை இருமடிப்பாகச் செய்து வடித்து எடுத்துக்கொண்டு மீதி நீரை அதே நீரில் கொட்டி விடவேண்டும். இந்த நீர் 48 நிமிடம் வரை தூயதாக இருக்கும்.

**வடித்த நீரை நல்ல கொதி நீராக்கி வைத்தால் 24 மணி வரை தூய்மையாக இருக்கும்.**

**ஆவி வந்ததும் இறக்கி வைப்பின் 12-மணி நேரம் தூய்மையாக இருக்கும்.**

இலவங்கம் போன்ற மணப்பொருள்களைப் போட்டு வைப்பின் 6-மணி நேரம் தூய்மையாக இருக்கும், பின்னர் சுவை, மணம், நிறம் முதலியன மாறிவிடும். அப்போது தூய்மை கெடும்.

வெயிலில் நன்கு சூடான நீர், ஆறும் வரை உபயோகமாகும். மற்ற வகை நீர் கைகால் சுத்தம் செய்யவும் மிருகங்கள் குடிப்பதற்கே தகுதியானது.

மாவு, கோதுமை, கடலை, சோளம், தினை, பயிறு, உளுந்து, அரிசி முதலியவற்றைப் பகலில் கழுவி சுத்தம் செய்து தன் கையால் அல்லது பிற ஜைனர், பிராமணர், வைசியர் முதலியை தாவர உணவுக்காரர்களால் அரைத்து-குத்தி உபயோகிக்க வேண்டும்.

உபயோகிக்கும் தானியங்கள் புதியாதாக இருக்க வேண்டும் இன்றேல் சாதுர்மாதங்கட்கு பின்னர் புழுத்திருக்கக்கூடும். திரிகை(ஏந்திரம்) நன்கு சோதிக்கப்பட்டு ஈரத்துணியால் துடைத்து காய வைக்கப்படவேண்டும். பகலிலே அரைத்து பின்னர் திரி கையை(ஏந்திரத்தை) சுத்தம் செய்து வைக்க வெண்டும். இப்படி தயார் செய்த மாவை குளிர் காலத்தில்- ஏழு நாளும், கோடை காலத்தில் - 5 நாளும் மழைக்காலத்தில் 3 நாளும்(பகல் இரவு) உபயோகிக்கலாம்.

உப்பு, மிளகாய், தனியா, ஜீரகம், மசாலா பகலில் சோதித்து உரல், அம்மி முதலியவற்றில் அரைக்க வேண்டும். இதன் தன்மையும் ஒவ்வொரு பருவத்திலும் மாவைப் போலவேயாம்.

சொந்த கறவை மாடு உள்ளவர்கள் கை , கால், வாய் இவற்றை சுத்தம் செய்து கொண்டு தாங்களோ அல்லது தாவர உணவுக்காரர்களால் தூயநீர் கொண்டு கறவை மாட்டின் மடியைக் கழுவி கறந்து உடனே வடித்துக் காய்ச்ச வேண்டும். இத்தகைய பாலொரு நாள் 24மணி நேரம் கிருமி உற்பத்தியின்றி இருக்கும்.

மேற்சொன்னபடி கறந்த பாலைக் காய்ச்சி தயிர் தோய்ந்து 8 ஜாமத்திற்குள் தூய நீர் கொண்டு கடைந்து கிடைக்கும் வெண்ணெயை முக்கால் மணி நேரத்திற்குள் காய்ச்சி வடித்து வைக்க வேண்டும். இது சிராவகர்கள் வீடு நெய் ஆகும். தாவர உணவாளர் தாயாரிக்கும் நெய் சுத்தமானதாகும்.

மேலே சொல்லிய முறையில் கறந்த பாலைக் காய்ச்சி, புதிய புரை மோரால் தோய வைத்தால் 8 ஜாமத்திற்குள்ளேயே தயிர் பாலேடு, மோர் முதலியன உருவாகிவிடும். இது சுத்த தயிர்.

சாது முதலியோர் உண்ணத்தக்க நாட்டு சர்க்கரையை கழுவி வடிகட்டி சற்று காய்ச்சி பால், நீர் அல்லது நெல்லிக்காய் நீரால் அழுக்கை போக்கி, ஜீராவாக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். இது குளிர் காலத்தில் 1 மாதம், கோடையில் 15 நாட்கள், மழை காலத்தில் 8 தினங்களும் கெடாதிருக்கும், சுத்தமானதாகும்.

நெய், எண்ணெய், தானியம் இவற்றின் குணம் பருவத்திற்கேற்ப மாறுதலடையும்.

ஊறுகாய் 8 ஜாமம், கறிகாய், பருப்பு, சோறு, கிச்சடி முதலியன 2 ஜாமம் தொட்டி, பரோட்டா, அதிக நீருடைய பூரி, இனிப்பான மிட்டாய் பொருள் 4 ஜாமம் அதிக நீரில்லாதது 8 ஜாமம் வரை உண்ணத்தக்கவை.

உணவு உட்கொள்ளும் இடம், சமையலறை, திரிகை, உலக்கை, மனை, உறங்குமிடம், முதலியன பூச்சி, புழு அண்டாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

விறகை சோதித்து உபயோகிக்க வேண்டும்.

அடுப்பை சோதித்து தீ எரிக்க வேண்டும்.

குளிக்காமல் சமையல் தொடர்பான எந்த வேலையும் செய்யக்கூடாது.

மில் துணிகள் கொழுப்பு, பாலிஷும், வண்ண ஆடைகளும் விதேச ஆடைகளும் முட்டை, குருதி, முதலிய வஸ்த்துக்களால் மாலீஷ் செய்வதனால் அபவித்ரமானதாகும்.

பிரசவித்த பெண் 45 நாட்கள், பௌஷ்டிக மானஸ்திரி 4 தினம் வரை சமைக்கக் கூடாது சமையல் பாத்திரங்களை தொடவும் கூடாது(ஆரம்ப வேலை துடப்பம் கொண்டு பெருக்குதல் குத்துதல், அரைத்தல் முதலியன) சூதககாரர் வீட்டிலும் சூதககாரர் கையினாலும் ஆகாரமளிக்கக் கூடாது.

5 மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணி ஆகாரமளிக்கக்கூடாது.

வடிசீலையை உடனே கொடியிலிட்டு உலர்த்தப் படவேண்டும்.

சமையல் பாத்திரம் எதையும் சௌச்ச வேலைக்கு உபயோகிக்கக் கூடாது. மாமிச பகஷிணிகட்கு சமையல் பாத்திரங்களைத் தரக்கூடாது. கொடுத்தால் நெருப்பில் சூடாக்கி உபயோகிக்க வேண்டும்.

பாத சுத்தம் செய்யாமல் உணவு கொள்ளுமிடத்தில் செல்லக்கூடாது, ஏதேனும் பொருளை தள்ளுபடி செய்திருப்பின் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். தள்ளுபடியான பொருட்களுடன் மற்ற பொருள்களைக் கலக்காமல் பார்க்கவேண்டும். வாரதினங்களில் இன்னின்ன தகாது என்று விசாரித்தறிந்து செய்ய வேண்டும். ஆனால் முனி, ஐலக், கஷுல்லக், உத்திஷ்ட தியாகி ஸ்ராவகன் முதலியோர் கேட்டும் சொல்லார்; கேட்கவும் கூடாது சிஷ்யர்கள் மூலமறிவது தகுந்த உபாயமாகும்

உப்பு, பூரா முதலியன விருப்பமறிந்து ஆகாரப் பொருளுடன் கலப்பது நலம்.

**தகவல்: திரு V.N. பொன்னுச்சாமி ஜைன்**

## உணவுக் குற்றங்கள் நாற்பத்தாறு

சமணத் துறவிகள் தாமே சமைத்து உண்ணார். இல்லறத்தாரின் இல்லங்களில் பிச்சை ஏற்றே உண்பர். நாற்பத்தாறு குற்றங்கள் இல்லாத உணவையே சமணத் துறவிகள் ஏற்பர் என்பதை முன்பே கூறியுள்ளோம். நாற்பத்தாறு குற்றங்கள் என்னென்ன என்பதை ஸ்ரீபுராணம் என்னும் நூலிலிருந்து அப்படியே கீழே எடுத்துக் காட்டுகிறோம்.

**உணவுக் குற்றங்கள் நாற்பத்தாறு**

உத்கம குற்றங்கள் பதினாறு (16)

உத்பாத குற்றங்கள் பதினாறு(16)

ஏடாணாகுற்றங்கள் பத்து (10)

சம்யோஜநா குற்றங்கள் நான்கு (4)

**இவற்றில் உத்கம குற்றங்கள் பதினாறாவன**

1.சமைத்த பாண்டத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் உணவை மாற்றி வந்து தானம் செய்தல்.

2.பலியிட்ட தானியத்தால் தானம் செய்தல்

3.காலம் கடந்து தானம் அளிப்பது

4.தீகொழுந்து விட்டெரியும்போது தானம் செய்தல்

5.விலைக்கு வாங்கிய உணவைத் தானம் செய்தல்

6.தீய வழியில் வந்த பொருளால் தானம் செய்தல்

7.உணவு போதாதிருக்கும்போது வேறு வாங்கித் தானம் செய்தல்

8.அமங்கலமான எண்வகைக் குற்றமுள்ள பாத்திரத்தில் தானம் செய்தல்

9. தளத்தின்மேல் சமையல் செய்து இழித்து வந்து தானம்செய்தல்

10.வலிய வாங்கி வந்த பொருளினால் தானம் செய்தல்.

11.முலைகூலி செய்து வந்த பொருளால், தானம் செய்தல்.

12.தூது நடந்த பொருளால் தானம் செய்தல்.

13.தன்னை, புகழ்ந்து தானம் செய்தல்

14. மருத்துவம் செய்து வந்த பொருளால் தானம்செய்தல்

15.சினத்தால் தேடிய செல்வத்தால் தானம் செய்தல்

16.கருவத்தால் தேடிய செல்வத்தால் தானம் செய்தல்

**<u>உத்பாத குற்றங்கள் பதினாறாவன</u>**

1. மாயையினால் தேடிய பொருளால் ஆன உணவு

2. பேராசையால் தேடிய பொருளால் வந்த உணவு

3. ஒருவனைப் புகழ்ந்து வாங்கிய பொருளால் ஆகிய உணவு

4.உண்டபின் தரும் உணவு.

5.மந்திரத்தினால் வாங்கிய பொருளால் வரும் உணவு

6.சூராத்தினால்(பொடியினால்)வாங்கிய பொருளால் செய்யப்பட்ட உணவு

7.கூட்டில் நெடுநாள் நின்ற நெல்லின் உணவு

8.உலர்ந்த பூ இலை முதலியவைகளைத் தொட்ட பின் இடும் உணவு

9.பச்சிலை இட்டு மூடி வைத்த உணவு

10.நன்றாக மூடாத உணவு

11.முன்றானை தரையில் புரண்டுவரக் கொண்டு வந்து இடும் உணவு,

12.குழந்தையைப் பெற்ற பெண்மணி ஒரு மாதத்திற்குள் கொண்டுவந்து இடும் உணவு

13.கள், சாராயம் குடிப்பவன் மனையில் தரப்படு உணவு,

14.நோயாளி தீண்டின உணவு,

15.இடுகாடுவரை பிணத்தின்பின் சென்றவன் தீண்டிய உணவு.

16.பேடி(அலி)தொட்ட உணவு.

<u>ஏடான குற்றங்கள் பத்தாவன</u>

1.ஆறு மாதத்திற்கு மேலான கர்ப்பிணி கையால் இடும் உணவு

2. சந்ததியற்றவர் கையாற் கொள்ளும் உணவு

3. நீராடித் தூய்மை பெறாதார் கையாலிடும் உணவு

4.தவமுனிவர் முன்னே இடறி விழுந்தவரின் கையாலிடும் உணவு

5.ஐவகைப் பொய்க் காட்சியாளர் கையால் கொள்ளும் உணவு

6.நோன்பிற்றாதார் கையாலிடும் உணவு

7.எட்டு வயதுக்குட்பட்ட சிறுவர் கையாலிடும் உணவு.

8.கற்புத் தவறியவளின் கணவனால் இடப்படு உணவு.

9.உறுப்புக்குறைந்தவர் கையாலிடும் உணவு.

10.பல நாட்கள் பெரியோர்களைக் குறைகூறும் மக்கள் கையில் கொள்ளும் உணவு.

**சம்யோஜநா குற்றம் நான்காவன**

1. துறவியர் முன்னே தீ மூட்டியும் அவித்தும் அப்பொழுதே இறக்கி வந்து இடும் உணவு

2.முனிவர்முன் மெழுகுவதும், பெருக்குவதும் செய்து பிள்ளையை அழவிட்டும் இடும் உணவு

3.முனிவர் கீழே இருக்க, தான் மேலே இருந்து இடும் உணவு

4.'கல கல' வெனப் பேசிக்கொண்டே இடும் உணவு,

ஸ்ரீ புராணம் என்றும் சமண சமய நூல் தீர்த்தங்கரர் இருபத்து நால்வரின் வரலாற்றைக் கூறுவது. தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள நடையில் செய்யப்பட்டது. 1943-ல் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்தது. இப்போது கிடைப்பதில்லை. சமண அறிஞர் பேராசிரியர் ஸ்ரீ சந்திரன் அவர்கள் செய்த தமிழாக்கம் இப்போது வழங்குகிறது. வர்த்தமானன் பதிப்பகத்தின் இரண்டாவது பதிப்பு 2003. இப்பதிப்பிலிருந்தே மேற்காணும் நாற்பத்தாறு உணவுக் குற்றப்பகுதியை எடுத்துக் காட்டியுள்ளோம்.

## விலங்குகள் பறவைகள் சுடுகாடு

மக்கட் சுடுகாடு ஊர்தோறும் இருக்கிறது. சுடுகாடு இல்லாத ஊரே இல்லை. சாதிவாரியாகக் கூட இருக்கிறது. ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனி சுடுகாடு இருக்கிறது. மக்களுக்குச் சுடுகாடு இருப்பது போல விலங்குகளுக்கும் (மிருகங்களுக்கும்) பறவைகளுக்கும் சுடுகாடு இருக்கிறதா? விலங்குகள் பறவைகள் புகலிடங்கள் (சரணாலயங்கள்) இருப்பதை நாம் நன்கு அறிவோம். முதுமலை வேதாரண்யம் வேடந்தாங்கல் ஆகிய இடங்களில் விலங்குகள் பறவைகள் புகலிடங்கள் உள்ளதைக் காணலாம். ஆனால், விலங்கு பறவைச் சுடுகாடுகள் உள்ள இடம் பலருக்குத் தெரியாது. மக்கட் சுடுகாடு ஊருக்கு ஒன்று இரண்டு இருக்கிறதென்றால் விலங்குச் சுடுகாடுகளும் பறவைச் சுடுகாடுகளும் பல உள்ளன. ஆயிரக்கணக்கார் உள்ளன. தெருதோறும் உள்ளன. (ஒன்றிரண்டு தெருக்கள் தவிர) வீடுதோறும் உள்ளன. (மிகச் சில வீடுகள் தவிர). அவற்றை எண்ணிக் கணக்கெடுப்பது அருமை. மக்கள் தொகையில் (ஜனத்தொகையில்) 100-க்கு 93 சுடுகாடுகள் உள்ளன. மக்களில் 100-க்கு 93 பேர் விலங்குகள் பறவைகள் சுடுகாடுகளாக உள்ளனர். 100_க்கு 93 பேருடைய வயிறு சுடுகாடாக உள்ளது. விலங்கு மாமிசத்தாலும் பறவை மாமிசத்தாலும் நிரப்பப்படும் வயிற்றை, அவற்றின் சுடுகாடு என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது. நாம் சொல்லவில்லை நாலடியார் சொல்லுகிறது.

**துக்கத்துள் தூங்கித் துறாவின்கண் சேர்கலா**
**மக்கட் பிணத்த சுடுகாடு-தொக்க**
**விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே, புலன்கெட்ட**
**புல்லறி வாளர் வயிறு.** - 121

நாலடியாரில் தீவினை அச்சம் அதிகாரத்தின் முதற் செய்யுள் இது.

துக்கத்துள் தூங்கி -- வாழ்க்கைத் துன்பங்களில் அழுத்தி

துறவின் கண் சேர்கலா -- துறத்தலைச் செய்யாத

மக்கட் பிணத்த -- மக்களின் பிணங்களை உடையவை

சுடுகாடு -- ஊரிலுள்ள சுடுகாடுகள்

தொக்க -- தொகுதியான; எண்ணிறந்த

| | | |
|---|---|---|
| விலங்கிற்கும் | -- | விலங்குகளுக்கும்(மிருகங்களுக்கும்) |
| புள்ளிற்கும் | -- | பறவைகளுக்கும் |
| காடே | -- | சுடுகாடுகள் |
| புலன்கெட்ட | -- | அறிவு கெட்ட; புத்தி கெட்ட |
| புல்லறிவாளர் வயறு | -- | சிற்றறிவாளர்களுடைய |

விலங்குகளையும் பறவைகளையும் உண்போரை புலன் கெட்ட புல்லறிவாளர் என்றார். விலங்குகளையும் பறவைகளையும் உண்போர் புலன் கெட்டவர்கள். அறிவு கெட்டவர்கள், புல்லறிவாளர்கள் அவர்களுடைய வயிறு சுடுகாடு.

1961-ல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படித் தமிழ்நாட்டில் 100-க்கு93 பேர் புலாலுண்பவர்கள். 7 பேரே தாவர உணவினர். இது நாற்பத்தைந்து ஆண்டு களுக்கு முற்பட்ட கணக்கு. இப்போது ஓரளவு மாற்றம் இருக்கலாம். ஏற்றம் இறக்கம் இருக்கலாம். இருந்தாலும் பழைய கணக்கையே வைத்துக் கொள்வோம்.

**இன்றைய சமுதாயத்தில் 100-க்கு 93 பேருடைய வயிறு சுடுகாடாக இருக்கிறது.** 100-க்கு93 பேர் புலன்கெட்ட புல்லறிவாளர்களாக இருக்கிறார்கள். **மக்களில் 100-க்கு 93பேர் புலன்கெட்ட புல்லறிவாளர்களாக இருக்க வேண்டுமா? 93 பேருடைய வயிறுகள் சுடுகாடுகளாக இருக்கவேண்டுமா?** தானியங்களுக்குப் பஞ்சமா? காய்கனிகளுக்குப் பஞ்சமா? கீரை கிழங்குகளுக்குப்பஞ்சமா? பின் ஏன்? வயிற்றைச் சுடுகாடாக வைத்துக்கொண்டிருக்கவேண்டும். புலன் கெட்ட புல்லறிவாளர்கள் சிந்தித்துச் சீர்திருந்த வேண்டும்.

### மாக்கோழி கூவிக்கொண்டு இறந்தது

ஐஞ்சிறுகாப்பியங்கள் ஐந்துமே சமணநூல்கள் என்பதை முன்பே கூறினோம். அவற்றுள் ஒன்று யசோதரகாவியம். வடமொழி நூல்களைத் தழுவித் தமிழில் செய்யப் பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முந்நூற்று முப்பது செய்யுள்களைக் கொண்ட யசோதர காவியத்தில் நல்வினை தீவினைகளால் விளையும் விளைவுகள் நன்கு எடுத்துக்கூறப்பெறுகின்றன. அறிய வேண்டிய மிகப் பல செய்திகள் யசோதர காவியத்தில் காணப்பெறுகின்றன எனினும் இடச்சுருக்கங் கருதியும் இயைபு கருதியும் ஒரே ஒரு செய்தியை மட்டும் ஈண்டெடுத்துக்காட்டுகிறோம்.

யசோதர மன்னன் சண்டமாரி என்னும் அவன் குலதெய்வதிற்குக் கோழியைப் பலியிட்டு வழிபடத் தூண்டப் பெறுகிறான். உயிர்ப்பலியை விரும்பாத அம் மன்னன் மாவினால் கோழி செய்து அதைப் பலியிடுகிறான். அறுக்கும்போது மாக்கோழி கூவிக்கொண்டு வீழ்ந்து சாகிறது. மாக்கொழியைப் பலியிட்ட பின் அதைச் சமைத்து அவனுக்குப் பரிமாறுகிறார்கள். மாக்கோழியைப் பலியிட்ட பாவத்தாலும், சமைத்துத் தின்ற பாவத்தாலும் பின் பிறப்பு ஒன்றில் யசோதர மன்னன் கோழியாகப்

பிறக்கிறான். மாக்கோழி கூவிக்கொண்டு இறந்த வரலாற்றை யசோதர காவியம் சொல்லுகிறது.

சமண சமயத்தில் கொல்லாமையைக் கூறுமிடத்தில் திரவிய இம்சை பாவ இம்சை (இம்சை-ஹிம்சை)என இருவகை இம்சைகள் கூறப்படுகின்றன. ஒன்றைக் கொலை செய்தல் திரவிய ஹிம்சை. கொலை செய்ய நினைத்தல், கொலை செய்து விடுவதாகச் சொல்லுதல் பாவஹிம்சை. கொலைச்செயல் திரவிய இம்சை. மனத்தால் வாக்கால் செய்யப்படும் கொலை, கொலைச்சிந்தனை, கொலைப்பேச்சு முதலியவை பாவ இம்சை.

"மருவாணைப் பெண்ணாக்கி" என்னும் திருவருட்பாப் பாடலில் கருவாள் நையுற இரங்காது உயிர் உடம்பைக் கடிந்து உண்ணுங் கருத்தனேல்" என்று வள்ளலார் கூறுவது பாவ இம்சை எனலாம். உயிரைக் கொலை செய்து அதன் மாமிசத்தை உண்ணும் கருத்து இருந்தாலே அவனை ஞானி எனக் கூறமுடியாது. என்கிறார் வள்ளலார். "உண்ணும் கருத்தனேல்" என்ற தொடர் சமணம் கூறும் பாவ இம்சைக்குப் பொருத்தமாக உள்ளது. பாவ இம்சையே கொடிது என்றால் திரவிய இம்சையை என்னென்று சொல்வது.

பிற்காலத்தில் பௌத்த சமயம் பாவ இம்சையைப் பொருட்படுத்தாத நிலைக்கு வந்துவிட்டது. "மூத்து விளிமாக்களை" வயது முதிர்ச்சியால் இயல்பாக இறந்து போன விலங்குகளின் மாமிசத்தை உண்ணலாம் என்ற அளவுக்கு பிற்கால பௌத்தம் இறங்கிவிட்டது. இன்றுங்கூடப் புலால் மறுத்தல் விடயத்தில் சமணத்தின் கடுமை பௌத்தத்தில் இல்லை.

வைதிக அந்தணர்கள் அண்மைக் காலத்திலும் கூட உயிர்க்கொலை வேள்வியைக் கைவிடவில்லை. தஞ்சை மாவட்டத்தில் விஷ்ணம்பேட்டை என்னும் ஊரில் ஆண்டுதோறும் ஆடுகளைப் பலியிட்டு வாஜபேயயாகம் செய்து வந்தனர். 1973-இல் ஒரு எஸ்.பி.சி.ஏ. இன்ஸ்பெக்டர் போலீஸ் உதவியுடன் அவ்வாண்டு நிகழ இருந்த யாகத்தைத் தடுத்து நிறுத்தினார். பஞ்சாயத்துத்தலைவரின் தலைமையில் கூட்டங்கூடி, இனி ஆடுகளைப் பலியிடுவதில்லை என்றும், கோதுமை மாவால் ஆடு செய்து பலி கொடுப்பதென்றும் தீர்மானித்தார்களாம். இச்செய்தி 22.12.1972 இந்து ஆங்கில நாளிதழில் வெளிவந்தது.

சமணம் கூறும் பாவ இம்சை இதுதான். உண்மை ஆட்டைப் பலி கொடுக்கா விட்டாலும், கோதுமை மாவால் ஆடுசெய்து பலி கொடுத்தாலும், உயிர்ப்பலி கொடுக்கும் புத்தி போகவில்லை.

யசோதர காவியத்தில் பலியிட்ட மாக்கோழி கூவிக்கொண்டு இறந்தது. பலியிட்ட மன்னன் கோழியாகப் பிறந்தான். விஷ்ணம்பேட்டை யாக அந்தணர்கள் ஆடாக பிறப்பார்கள்.

## கொலை புலைப் பாவம்

### <u>யார்யாரைச் சேரும்</u>

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் என்பதும் ஒன்று. பஞ்சமூலம் என்பது ஐந்து வேர்கள் எனப் பொருள்படும். சிறுவழுதுணை, சிறுநெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுமல்லி, பெருமல்லி, ஆகிய ஐந்தின் வேர்களும் சிறுபஞ்சமூலம். சிறுபஞ்சமூலம் போன்றே பெரும்பஞ்சமூலமும் மருத்துவத்தில் உண்டு. வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரை, வாகை இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலம். பெரும் பஞ்சமூலமும் வைத்தியத்தில்மட்டுமே உண்டு. அப்பெயரால் நூல் இல்லை. சிறுபஞ்சமூலமும் என்றொரு நூல் காரியாசான் என்னும் சமணப் புலவரால் இயற்றப் பெற்றுள்ளது.

நான்கு வரிகள் கொண்ட பாடலில் ஐந்து அருமையான நீதிகள் சொல்லப்படுவதால் இந்நூலுக்குச் சிறுபஞ்சமூலம் என்று பெயர் வந்தது. திரிகடுகம் ஏலாதி என்ற நூற்பெயர்களும் மருத்துவப் பொருட்பெயர்களே.

ஓர் உயிரைக்கொன்று அதன் மாமிசத்தை உண்பதால் ஏற்படும் பாவம் யார் யாரைச் சேரும் எனச் சிறுபஞ்சமூலம் பாடல் ஒன்றில் தெளிவாகக்கூறப் பெற்றுள்ளது.

**கொன்றான், கொலையை உடன்பட்டான், கோடாது**
**கொன்றதனைக் கொண்டான், கொழிக்குங்கால்-கொன்றதனை**
**அட்டான், இட உண்டான், ஐவரினும் ஆகும் என**
**கட்டெறிந்த பாவம் கருது.**

கொன்றான் - கொன்றவன்

கொலையை உடன்பட்டான் - கொலைக்கு உடன் பட்டவன் - உடனிருந்து துணைசெய்தவன்.

கொண்டான் - கொண்டவன், விலைக்கு வாங்கியவன்

அட்டான் - சமைத்தவன்

இட உண்டான் - உண்டவன்

கொன்றவன்1, உதவிசெய்தவன்2, (விற்பனையும் கொள்ளலாம்), வாங்கியவன்3, சமைத்தவன்4, சாப்பிட்டவன்5, ஆகியா இந்து பேருக்குமே கொலைப்பாவம் சேரும்.

யாரோ கொன்றார்கள், யாரோ சமைத்தார்கள், நாம் வாங்கித்தானே சாப்பிடுகிறோம் என்று எண்ணக்கூடாது. கொலைபுலைப்பாவத்தில் இப்படி ஆள் ஆளுக்குப் பங்குண்டு. சம்பந்தப்பட்ட எல்லாருக்குமே பங்குண்டு.

**அடையாதாம் ஆண்டைக் கதவு**
**அடைத்தவாம் ஆண்டைக் கதவு**

நாலடியாரில் ஈகை என்னும் அதிகாரத்தின் முதற் செய்யுள்

**இல்லா இடத்தும் இயைந்த அளவினால்**
**உள்ள இடம்போல் பெரிது உவந்து மெல்லக்**
**கொடையோடு பட்ட குணனுடை மாந்தர்க்கு**
**அடையாவாம் ஆண்டைக் கதவு.**

என்றொரு பாடல்.

தன்னிடம் மிகுதியாக இல்லாபோதிலும் இயன்ற அளவு இருப்பதைப் பிறருக்குக் கொடுத்து உதவுவோர்க்கு,அடையாவாம் ஆண்டைக் கதவு-அவ்வுலகக் கதவு அடைக்கப் படாமல் திறந்திருக்குமாம்.

**ஈயாமை என்னும் அதிகாரத்தின் முதற் செய்யுள்**
**நாட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்**
**அட்டாது பாத்து உண்டல் அடகு உண்டல் அட்டது**
**அடைத்து இருந்து உண்டு ஒழுகும் ஆவதில் மாக்கட்கு**
**அடைத்தவாம் ஆண்டைக் கதவு.**

**நட்டார்க்கும் - நட்புறவு உள்ளவர்களுக்கும்**
**நள்ளாதார்க்கும்-புதிதாக வரும் விருந்தினர்களுக்கும்**
**பாத்து உண்டல்-பகுத்து உண்ணுதல்**
**அட்டுண்டல்-அதன்பின் உண்டல்**

அடைத்து இருந்து உண்டு ஒழுகும்-கதவை அடைத்துக் கொண்டு, கதவைச் சாத்திக்கொண்டு, தாமே உண்பார்.

கதவை அடைத்துக்கொண்டு, சாத்திக்கொண்டு, தாமே உண்பவர்க்கு மேலைக்கதவு, அவ்வுலகக்கதவு, ஆண்டைக்கதவு, அடைக்கப்பட்டுவிடும். அடைத்தவாம் ஆண்டைக்கதவு. அடைக்கப்பட்டு விடும். அடைத்தவாம் ஆண்டைக்கதவு. கதவைச் சாத்திக்கொண்டு தானே உண்டால், சுவர்க்கக்கதவும் சாத்தப்பட்டுவிடும்.

ஈபவரை"மாந்தர்" மனிதர் என்றும், ஈயாரை ' மாக்கள்' (விலங்குகள் மிருகங்கள்) என்றும் மேற்பாடல்களில் கூறியுள்ளதையும் காண்க.

**அடையாதாம் ஆண்டைக்கதவு**
**அடைத்தவாம் ஆண்டைக்கதவு**

என்னும் நாலடியார் ஈற்றடிகள் நன்கு கவனிக்கத்தக்கன.

**ஈவோருக்கு,மேலைச் சுவர்க்கக் கதவு அடைக்காது.**
**ஈயோதோருக்கு அடைத்துவிடும்.**

வள்ளலாரும் இதையே சொல்லுகிறார். **ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்கிறார்.**

## உலக சமயங்களுள்சமண சமயம்ஒன்றே

## <u>நூற்றுக்கு நூறு 100%</u>

## சைவ உணவு கொள்வது

உலக சமயங்களுள் சமண சமயம் (ஜைனம்) ஒன்றே புலால் மறுத்தலைச் சமயக் கொள்கையாகக் கொண்டது. சமணர் அனைவரும் புலால் மறுத்த தாவர உணவினரே. நூறு சதவீதம், நூறு விழுக்காடு 100% தாவர உணவினரே. இந்நிலை சமண சமயம் தவிர வேறு எச்சமயத்திலும் இல்லை.

தாவர உணவைச் சைவ உணவு என்று கூறுகிறோம். ஆனால், சைவர் அனைவரும் தாவர உணவினர்-சைவ உணவினர் அல்லர். சைவத்திலும் வவணவத்திலும பொதுவாக இந்து மதத்தில் புலால்மறுத்தல், சைவ உணவு, சமயக் கொள்கையாக இல்லை. சாதிக்கொள்கையாகவே உள்ளது. சமய ஒழுக்கமாக இல்லை. சாதி ஒழுக்கமாகவே உள்ளது. மரபு வழிப் புலாலுண்ணாத சாதியினரே சைவ உணவினராக உள்ளனர். ஏனைய பலரும் புலாலுண்பவர்களாவே உள்ளனர். சிதம்பரம் சீரங்கம் பழனி கோயில்களுக்குச்செல்வோர் அனைவரும் சைவ உணவினரா? இல்லையே!

இந்துக்கள் எல்லாரும் சைவ உணவினர் - தாவர உணவினர் - வெஜிடேரியன் என்று கூற இயலாது. சைவர்கள் எல்லாரும் தாவர உணவினர் என்று கூற இயலாது வைணவர்கள் எல்லாரும் தாவர உணவினர் என்று கூற இயலாது. புத்தர்கள் எல்லாரும் தாவர உணவினர் என்று கூற இயலாது. கிறித்தவர்கள் எல்லாரும் தாவர உணவினர் என்று கூற இயலாது. ஆனால் சமணர்கள் எல்லாரும் தாவர உணவினர் என்று துணிந்து கூறலாம். புலாலுண்பவர்கள் சமணராக இருத்தல் இயலாது சமணர்கள் அனைவரும் தாவர உணவினராகத்தான் இருந்தாக வேண்டும்என்பது சமண சமயத்தின் கொள்கை. இந்தக் கண்டிப்பு பிறசமயங்களில் இல்லை.

சைவத்தை மூன்று வகையாக நாம் கூறுவது வழக்கம்

1. சமயச்சைவம்
2. சாதிச்சைவம்
3. உணவுச்சைவம் ( சாப்பாட்டுச் சைவம்)

### <u>1. சமயச்சைவம்</u>

சைவசமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோர், சிவனை வழிபடுவோர் அனைவரும் சமயத்தால் சைவரே, சமயத்தால் சைவராக இருப்போர் அனைவரும் சாதியால் சைவராக இருக்கவேண்டும் என்பதில்லை. சாதிச்சைவர் அல்லாதரும் சமயச் சைவராக இருக்கலாம். சமயச் சைவர் அனைவரும் சாப்பாட்டில் சைவராக இருப்பதில்லை. சாதிச்சைவர் மட்டுமே சாப்பாட்டில் சைவராக உள்ளனர். ஏனையோர் சமயத்தால் மட்டுமே சைவர், சாப்பாட்டில் அசைவராக் உள்ளனர்.

## 2. சாதிச்சைவம்

மரபு வழி, பரம்பரை பரம்பரையாக, புலால் உண்ணாத சாதியினர், சைவ வேளாளர்(சைவப்பிள்ளை) சைவ முதலியார், சைவச்செட்டியார் போன்றோர். இவர்கள் சமயத்தாலும் சைவம்; சாதியாலும் சைவம்; சாப்பாட்டாலும் சைவம்; மூவகையாலும் சைவம்.

## 3. சாப்பாட்டுச் சைவம்

உணவால் சைவராக இருத்தல், சாதிச்சைவர் அனைவரும் உணவாலும் சைவரே. ஆனால் சமயச் சைவர் அனைவரும் உணவால் சைவராக இருப்பதில்லை. இப்படியும் அப்படியுமாக இருவேறு நிலையில் உள்ளனர். **கிறித்துவர் இஸ்லாமியர் முதலிய பிற சமயத்தாரில்கூட சிலர் பலர் அன்புடைமை அருளுடைமை கருணை முதலியவற்றைக் கருதிச் சைவ உணவினராக உள்ளனர். அவ்வாறானவர் தொகை குறைவு. அவர்கள் பாராட்டப் பெறுவதற்குரியர்.**

சமயச்சைவராக இருப்போர் அனைவரும், சாதிச் சைவராக முடியாது. மரபுகள் (சம்பிரதாயங்கள்) இடங்கொடா. மரபுகள் தடையாக உள்ளன. ஆனால் உணவில் சைவராக இருக்கலாம். இருக்கத் தடையேதுமில்லை. மனம் மட்டுமே இருக்கவேண்டும்.

மீண்டும் கூறுகிறோம், இந்து சமயத்தில் புலால் மறுத்தல், சைவ உணவு, சமய ஒழுக்கமாக (சமய ஆசாரமாக)இல்லை, சாதி ஒழுக்கமாக(சாதி ஆசாரமாகவே) இருக்கிறது. ஆனால் சமண சமயத்திலோ சமய ஒழுக்கமாக (சமயாசாரமாக) இருக்கிறது. இனி வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்திற்கு வருவோம்.

### வள்ளலாரின் சன்மார்க்கமும் 100-க்கு 100<br>புலால் மறுத்தது; சைவ உணவு கொள்வது

சமண சமயத்தில் 100-க்கு 100 புலால் மறுப்பு, சைவ உணவு என்பதைப் போன்றே வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திலும் 100-க்கு 100, புலால் மறுப்பு, சைவ உணவு, 100% சைவ உணவு.

**சன்மார்க்கிகள் எல்லாரும் சைவ உணவினரே. புலாலுண்போர் சன்மார்க்கியாக இருக்க முடியாது.** சமண சமயத்தில் புலால் மறுத்தல் சைவ உணவு சமயக் கொள்கையாக இருப்பது போலவே வள்ளலாரின் சன்மார்க்கத்திலும்

புலால் மறுத்தல் மார்க்கத்தின் கொள்கையாக இருக்கிறது. வள்ளலார் இதில் மிகமிகக் கண்டிப்பாக இருக்கிறார்.

**புலால் உண்பதைக் கண்டித்த அளவுக்கு வள்ளலார் வேறு எதையும் கண்டித்ததில்லை,** புலால் மறுத்தலை வற்புறுத்திய அளவுக்கு வேறு எதையும் வள்ளலார் வற்புறுத்தியதில்லை.

சாதி சமயம் முதலிய எல்லாவற்றிலும் ஒருமைப்பாட்டைக் கண்ட வள்ளலார், புலால் உணபது ஒன்றை மட்டுமே வைத்து மக்களை இரண்டு இனங்களாகப் பிரித்தார்.

1. அக இனம்
2. புற இனம்

புலால் மறுத்தோர் அகவினத்தார்

புலால் உண்போர் புறவினத்தார்

**புலாலுண்ணும் புறவினத்தாரை வள்ளலார் தமது உடன் கூட்டத்திலும் சன்மார்க்க சங்கத்திலும் சேர்த்துக் கொண்டதே இல்லை.**

புலாலுண்ணும் புறவினத்தார் சன்மார்க்க சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப் பெறார்.

**சங்கத்தில் அவர்களுக்கு இடமில்லை எனினும் சாலையில் சாப்பாட்டில் அவர்களுக்கும் இடமுண்டு.** சத்திய தருமச்சாலையில் அகவினத்தார் புறவினத்தார் என்று பாராது அனைவர்க்கும் உணவளிக்கப் பெறும்.

சத்திய ஞானசபையில் புறவினத்தார் புறத்தேயிருந்துதான் வழிபடவேண்டும். ஞானசபைக்குள் அவர்கள் நுழையலாகாது, அவர்களுக்கு இடமில்லை. ***' கொலை புலை தவிர்த்தவர்கள் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும் என்பது ஸ்தாபகர் வள்ளலாரின் கட்டளை.*** இக்கட்டளை அன்றுமுதல் இன்றுவரை அறிவிப்பாக ஞானசபை நுழைவாயில்களில் எழுதிவைக்கப் பெற்றுள்ளதை இன்றும் காணலாம்.

பின்வரும் திருஅருட்பாப் பாடல்கள் மூன்றும் முக்கியமாகக் கவனித்தற்குரியவை

**உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள்**
**உறவினத்தார் அல்லர் அவர் புற இனத்தார் (எல்லாம்**
**பயிர்ப்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக(அவர்க்குப்**
**பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே**
**நயப்புறுசன் மார்க்கம் அவர் அடையளவும் இதுதான்**
**நம் ஆணை என்றெனக்கு நவின்ற அருள் இறையே**
**மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில் நடம் புரியும்**

மாநடத்தென் அரசே என் மாலை அணிந்தருளே.

...4160

வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர் அன் றாதலினால் வகுத்த அவர் அளவில்
அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றிஅருட் செயல் ஒன்றும் செயத்துணியேல் என்றே
இன்புற என் தனக்கிசைத்த என்குருவே எனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயே என் இறையே
துன்புறுமெய்த் தவர்சூழ்ந்து பொற்றுதிரு பொதுவில்
தூயநடத் தரசே என் சொல்லும் அணிந்தருளே.

.. 4161

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்துடும் ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது
படியில்அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்
பயந்தீர்த்து விடுக எனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்குமரே நித்தியரே பிறரே
நின்மலரே என்கின்றோர் எல்லாரும் காண
அடியும் உயர் முடியும் எனக் களித்த பெரும் பொருளே
அம்பலத்தென் அரசே என் அலங்கல் அணிந் தருளே

.. 4162

உறவினம் (அகவினம்) புறவினம் என்ற பிரிவையும் புறவினத்தார்க்குப் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக என்பதையும் முதலிரண்டு பாடல்கள் கூறுகின்றன. ஆபத்தில் உதவியும் செய்யச் சொல்வது மூன்றாவது பாடல்.

ஆணைப் பெண்ணாக மாற்றவும், பெண்ணை ஆணக மாற்றவும், இறந்தவரை எழுப்பவும் வல்ல ஞானியாக ஒருவன் இருந்தாலும் அவன் புலாலுண்ணும் எண்ணமுடையவனாக இருந்தால், அவனை ஞானி எனக் கூறலாகாது என்று குருவின் மீதும் சிவத்தின் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறார் வள்ளலார்.

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில்
கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை
எழுப்புகின்ற உறுவ னேனும்
கருவாணை யுற இரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்த னேல் எங்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை

**ஞானிஎனக் கூறொ ணாதே.**

3027

கருத்தனேல் என்பதைக் கவனிக்க. உண்ணும் கருத்துடையவனாக இருந்தாலே அவன் ஞானியாகான்.

<u>'புலால் உண்ணும் மக்களைக் கண்டு மயங்கி உள்ளம் நடுங்கி ஆற்றாமல் எலும்பெல்லாம் கருக இளைத்தேன்' என்று பாடுகிறார் வள்ளலார்.</u>

**புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில்**
**புகுந்துநான் இருக்கின்ற புணர்ப்பும்**
**என்பொலா மணியே எண்ணி நான் எண்ணி**
**ஏங்கிய ஏக்கம்நீ அறிவாய்**
**வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு**
**மயங்கி உள் நடுங்கி ஆற்றாமல்**
**என்பெலாம் கருக இளைத்தனன் அந்த**
**இளைப்பையும் ஐயநீ அறிவாய்**

..3450

மயங்கி, உள்நடுங்கி, ஆற்றாமல் என்பெலாம் கருக இளைத்தனன் என்று அடுக்கி அடுக்கிச் சொல்வதைக் கவனிக்க.

புலால் உண்ணும் மனிதர்களைக் கண்ட வள்ளலார் மயங்குகிறார் அவரது உள்ளம்நடுங்குகிறது, அவரால் ஆற்றமுடியவில்லை. ஆற்றாமல் எலும்பெல்லாம், கருக இளைக்கிறார். புலாலுண்ணுங் கொடுமையைக் காண்கிற போது வள்ளலாருக்கு எலும்பெல்லாம்கருகுகிறது. 'என்பெலாம் கருக' என்றதை உற்றுநோக்குக. 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்றார் வள்ளுவர்(திருக்குறள்-72) வள்ளலாரே என்பெலாம் கருக இளைக்கிறார்.

வலை, தூண்டில், கண்ணி வகைகள் முதலிய கொலைக் கருவிகளைக் கண்ட போதெல்லாம் வள்ளலாரின் உள்ளம் நடுங்கிற்று, வாள், வேல், துப்பாக்கி, வெடிகுண்டு முதலிய கொலைக் கருவிகளைப் பயன்படுத்துவோரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் வகையுண்டு. ஆனால் வலை, தூண்டில் கண்ணி வகைகள் முதலிய கொலைக் கருவிகளைப் பயன்படுத்துவோருக்குக் கண்டனம் இல்லை, தண்டனை இல்லை. இக்கொலைகளைச் சமுதாயம் கண்டுகொள்வதே இல்லை. மாறாக ஊக்குவிக்கவும் செய்கிறது. சமுதாயம் ஊக்குவிப்பது மட்டுமல்ல, ஆட்சியே இவற்றி ஊக்குவிக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி நடுங்குகிறார் வள்ளலார்.

**துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்**
**தொடங்கிய போதெலாம் பயந்தேன்**
**கண்ணினால் ஐயோ பிற உயிர் பதைக்கக்**

**கண்டகா லத்திலும் பதைத்தேன்**
**மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி**
**வகைகளும் கண்டபோ தெல்லாம்**
**எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்**
**எந்தைநின் திருவுளம் அறியும்**

.. 3473

**புலால் உண்போர் பலரைப் புலால் உண்ணாதவராக வள்ளலார் மாற்றியிருக்கிறார். புலாலுண்போரைச் சைவ உணவினராக மாற்றும் அற்புத ஆற்றல் வள்ளலாரிடம் காணப்பட்டதென்றும், வள்ளலாரின் திருநோக்கம் ஒன்றே புலாலுணவில் ஒருவனுக்குள்ள விருப்பத்தை ஒழிப்பதற்குப் போதுமானதென்றும் தொழுவூர் வேலாயுத முதலியார் குறிப்பிடுகின்றார்.**

வள்ளற்பெருமானின் அறிவுரைப்படி அமாவாசை என்னும் பறையர் செத்த மாடுகளின் மாமிசத்தைத்தின்னும் பழக்கத்தை கைவிட்டுச் சைவ உணவினராகி வள்ளலாரது திருக்கூட்டத்தில் சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்து கொண்டார். சமபந்தி போஜனத்திற்கு அருகரானார்.

புலாலுணவைக் கைவிட்டுச் சைவ உணவினராவது சாதிச்சமரசத்திற்கு சாதி ஒழிப்புக்கு ஒரு வழி. புலாலுணவைக்கைவிட்டால் சமூக அந்தஸ்தால் பிற்பட்டோர் முற்பட்டோராராகாலாம். **புலாலுணவைத் தவிர்ப்பது தனி மனிதனுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கும் நன்மை.**

புலால் மறுத்தல் என்று ஒரு அதிகாரமே செய்தார் வள்ளுவர்.

புலால் மறுத்தலை ஒரு கொள்கையாகவே வகுத்தார் வள்ளலார்.

## சமண சமயத்தில் கர்ப்பூர தேகசித்தி

சமண சமயத் தத்துவ நூல்களில் பதார்த்த சாரம் என்பது ஒரு சிறந்த நூல். மாகநந்தி ஆசாரியர் என்பவரால் அருளப்பெற்றது. மணிப்பிரவாள நடையில் கிரந்த எழுத்தில் உள்ள மூல நூலின் தமிழாக்கம் முதன் முதலாக 1992-இல் தஞ்சாவூர் கரந்தட்டாங்குடி அறங்கூறும் அன்னை திருமதி இராஜலெட்சுமி ஜிநகுமார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று தஞ்சாவூர் சரஸ்வதி மகால் வெளியீடாக வெளிவந்துள்ளது.

பதார்த்தசார நூலில் மோட்ச தத்துவம் கூறப்பெறுமிடத்தில் கர்ப்பூர தேகசித்தி கூறப்பெற்றுள்ளது, நூல் நடை தூய தனித் தமிழன்று. வடசொற் கலப்பு மிகுந்தது. இத்தகைய நூல்களை அவ்வாறுதான் அவ்வளவுதான் தமிழாக்கஞ் செய்ய இயலும். தூய தனித் தமிழாக்கம் என்ரு செய்யப் புகுந்தால் பொருட் சிறப்பு மிகவும் குன்றிவிடும், மாறிவிடும்.

பதிப்பாசிரியர் அறங்கூறும் அன்னையார்,நூலறிமுகம் நூற்குறிப்புச் சுருக்கம் என்று நூறுபக்கங்கள் எழுதி, நூல் மூலத்திற்கு முன்னர் அமைத்துள்ளார். மிக அருமையாக அமைந்துள்ளது. அதிலிருந்து கர்ப்பூர தேகசித்தியைப் பற்றிய ஒரு பத்தியை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுகிறோம்.

முத்தி பெறும் உயிரது கடைசி உடல் கற்பூரம் கரைவதுபோல கரைந்து விடுகிறது. உயிர் மேலெழும் பண்பால் உலகின் உச்சிக்கு சென்றுநிலை பெற்று விடுகிறது. அங்கு எல்லையற்ற தன் இன்பத்தைத் துய்த்துக் கொண்டு தான் கடைசியாக ஏற்ற உடல் வடிவில் நிலையாக இருக்கிறது. முத்தி பெற்ற உயிர் மீண்டும் பிறவியில் வந்து பிறப்பது இல்லை. அது தனக்குரிய எல்லா பண்புகளோடும் விளங்குகிறது.

சைவ நூல்களிலும் கற்பூர தேகசித்தி கூறப் பெற்றுள்ளது.

**"எழுகின்ற தீயில்கர்ப் பூரத்தை ஒக்கப்**
**பொழிகின்ற இவ்வுடல் போம் அப் பரத்தே"**

**.. 2587**

என்னும் திருமந்திரமும்,

**"சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தர் உடல், தீபம்**
**வைத்த கர்ப்பூரம் போல் வயங்கும் பராபரமே" -- 190**

என்ற தாயுமானவரின் பராபரக்கண்ணியும் காண்க. வள்ளலாரும் கர்ப்பூர தேக சித்தியைக் கூறியுள்ளார்.

# மகாவீரரின் தேகசித்தி அதிசயங்கள்

மகவீரர் கருவிலேயே திருவுடையவர். பிறக்கும் போதே சுத்த தேகத்துடன் அவதரித்தவர். அவதரித்த போதே அவரிடம் பத்து அதிசயங்கள் விளங்கின. அவற்றைச் சுபாவாதிசயம் (சுபாவமான அதிசயம்-இயல்பான அதிசயம்) எனக் கூறுவர். தவமியற்றிஞானம் பெற்றபோது மேலும் பத்து அதிசயங்கள் வந்து சேர்கின்றன. பின்பு நிறைவு நிலையில் மேலும் பதினான்கு அதிசயங்கள் வந்து சேர்கின்றன. ஆக முப்பத்து நான்கு (10+10+14) அதிசயங்களையுடையவர் மகாவீரர். இவ்வதிசயங்கள் பொதுவாகத் தீர்த்தங்கரர்கள் அனைவருக்குமே பொருந்தும். ஸ்ரீபுராணத்தில் இவ்வதிசயங்கள் கூறப்பெறும் பகுதியை அப்படியே எடுத்துத் தருகிறோம். இதன்பின் வருபவை ஸ்ரீபுராணம் கூறுவது.

அவதரித்தபோதே சுபாவாதிசயம் பத்துடன் கூடியவராக அவதரித்தார். அந்த அதிசயங்கள் யாதெனின்:

1. சுவேதாபாவம்
2. ராஜோமலாபாவம்
3. கஷிரசமாநரசவிசேஷம்
4. ஸ்ரீவணப்பிரியமான வசநப்ரவ்ருத்தி
5. உபமாதீத செள்ந்தர்யம்
6. பரமமாகிய பரிமள கந்தம்
7. ஸ்ரீ தேவ்யாதி ஸ்ரீலட்சணம்
8. அளவில்லாத மகாபலம்
9. வஜ்ர ரிஷப நாராச சம்ஹநநதம்
10. சமசதுரச் சம்ஸதானம்

இவை ஒவ்வொன்றையும் மேலே விளக்குவோம்.

1. சுவோதாபாவமாது அவரது திருமேனியில் எப்பொழுதும் **வியர்வை இல்லாமை**

2. ரஜோமலாபாவமாவது புலன்கள் ஐந்திலும் **ஜலமோ மலமோ இல்லாமை**

3. கஷீர சமாந ரசவிசேஷமாவது திருமேனியிலுள்ள **இரத்தம்** போன்றவை **பால் போலிருத்தல்.**

**4.** ச்ரவணப்பிரியான வசநப்ரவ்ருத்தியாவது பிராணிகளுக்கும் இதமான வார்த்தைகளையே பேசுதல்

5. உபாமாதீத சௌந்தர்யமாவது மிக்க மேதாவிகளாலும் உருவகம் செய்யவோ ஒப்பிடவோ முடியாத திருவுருவம்.

6. பரமமாகிய பரிமள கந்தமாவது ஏழு தாதுக்களும் திசைகள்தோறும் நறுமணம் வீசுதல்.

7. ஶ்ரீ தேவ்யாதி ஶ்ரீலட்சணமாவது சுபமாகவுள்ள ஆயிரத்தெட்டு இலட்சணங்களைக் கொண்டிருத்தல்.

8. அளவில்லாத மகாபலமாவது முடிவில்லாத மகாபலம்

9. வஜ்ர ரிஷப நாராச சம்ஹநநமாவது யாராலும் சேதிக்க (வெட்ட)ப் படாத சரீரம்

10.சமசதுரக் சம்ஸ்தானமாவது நான்கு திக்கிலும் அழகாக உள்ள உருவம்.

பகவான் பன்னிரண்டு ஆண்டுகள் மறைவாயிருந்தார். பிறகு ஜ்ரும்பிக கிராமத்தருகில் பாய்கின்ற ருஜுகதி என்னும் நதிக் கரையில் உள்ள பூங்காவில் மராமரத்தின் கீழே ஒரு கற்பாறை மீது அமர்ந்து ஆரு உபவாசங்கள் செய்து **ஆதபயோகி** யாக (வெய்யிலில் அமர்ந்திருத நிலையில்) இருந்தபின் கரணத்ரையம் முதலியவைகளை அனுஷ்டித்துப் பரமாருகந்திய நிலை அடைந்து கேவல ஞானியானார். அந்தக் கணத்திலேயே கர்மம் தொலைந்தபின் ஏற்படக்கூடிய பத்து அதிசயங்களும் அவருக்கு ஏற்பட்டன.

அந்த அதிசயங்களாவன:

1. அச்சாயத்துவம் (அவர் திருமேனியில் **நிழல் இல்லாமை)**

**2.** நிர்புக்தி (அவருக்கு **ஆகாரமின்மை)**

3. நிருபஸர்க்கம் (அவருக்குத் துன்பம் இல்லாமை)

4. நிர்நிமேஷத்துவம் (இமை கொட்டாமை)

5. நிர்ஜந்துவதை (ஜீவஹிம்சை இல்லாமை)

6. துர்பிட்சவிரஹம் ( அவர் எழுந்தருளியுள்ள தேசத்தில் பஞ்சம் இன்மை)

7. சர்வவித்தியே சத்துவம்(அவரைத் தியானித்த உடனே எல்லா ஞானங்களும் வருதல்)

8. சமானநககேசத்துவம்(**நகம், கேசம் சமமாக இருத்தல்)**

9. வியோம கமனத்துவம்**(ஆகாயத்தில் சஞ்சரித்தல்)**

10. சதுராநநத்துவம் (நான்கு திக்கிலும் நான்கு வடிவத்துடன் இருத்தல்)

இவ்வாறு இருந்தவுடன் நால்வகைத் தேவ தேவேந்திரர்கள் வந்து, கேவல உற்பத்தி பூஜையினையும் சமவ சரணப் பெருமைகளையும் செய்து பகவானைப் பூசித்து அவரது பாதசேவை செய்வதிலேயே ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் பகவானிடம் தெய்வீகமான பதினான்கு வகை அதிசயங்கள் வந்து சேர்ந்தன. அவையாவன:

1. எல்லா ஜீவன்களோடும் **அவரவர் மொழியில் பேசும் ஆற்றல்**

2. பன்னிரண்டு மாதங்களிலும் அவற்றிற்குரிய காலத்தில் மலரும் மலர்கள் பகவான் உள்ள இடத்தில் எப்பொழுதும் மலர்தல்.

3. எல்லாருடனும் நட்புரிமை கொண்டிருத்தல்

4. அவர் இருக்கும் தேயத்தில் கூன், குருடு, செவிடு, முடம் முதலிய துன்பங்கள் இல்லாமை.

5. அவர் அமர்ந்துள்ள நிலம் பளிங்குக் கண்ணாடி போல் பிரதிபலித்தல்.

6. அவர் உள்ள இடத்தில் குளிர்ந்த நறுமணம் கமழும் மந்த மாருதம் வீசுதல்.

7. அவர் தங்கிய இடத்தை வாயுகுமாரன் வந்து தூசி முதலியவற்றை அகற்றுதல்.

8. மேககுமாரன் வாசனையும் குளிர்ச்சியும் கொண்ட நீரைத் தெளித்தல்

9. அவரைத் தேவர்களும் மனிதர்களும் நன்கு துதி செய்தல்

10. பகவான் எழுந்தருளியுள்ள தேசத்தில் எல்லாத் தானியங்களும் நிறைந்து இருத்தல்

11. ஆகாயமும் திசைகளும் நிர்மலமாக இருத்தல்

12. அவர் இருக்கும் இடத்தில் எண்வகை மங்கலங்களும் நிறைந்திருத்தல்.

13. சிம்மாதனத்தில் மீது மத்திய கமலத்திற்கு முன் ஏழாயிரம் பின் ஏழாயிரமும் தாமரை மலர்கள் இருத்தல்.

13. நாற்றிசையிலும் பூதங்கள் தரிக்கின்ற இரத்தினத்தாலான நான்கு தரும சக்கரங்கள் அமைந்திருத்தல்.

## மகாவீரரின் தேகசித்தி அதிசயங்களும்

## வள்ளலாரின் தேகசித்தி அனுபவங்களும்

மகாவீரரின்(தீர்த்தங்கரர்களின்)தேகசித்தி அதிசயங்களும் வள்ளலாரின் தேகசித்தி அனுபவங்களும் பல வகையில் ஒத்துள்ளன.

ஆகாரம் இன்மை, மலஜலம் இன்மை, வியர்வை இன்மை, நிழல்(சாயை)இன்மை முதலியன இரண்டிலுமே உள்ளன.

மகாவீரரின்(தீர்த்தங்கரர்களின்) உடம்பு யாராலும் எதனாலும் சேதிக்க (வெட்ட) இயலாத உடம்பு என்று கூறியுள்ளதைப் போன்றே வள்ளலாரும் திருவருட்பாவிற் கூறியுள்ளார்.

**ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே**
**அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே**
**காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்**
**கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்**
**பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்**
**படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே**
**சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான**
**சித்திபுரத் தமுதே என் நித்திரைத்தீர்ந் ததுவே. 4636**

**காற்றாலே புவியாலே ககனமத னாலே**
**கனலாலே புனலாலே கதிரதி யாலே**
**கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே**
**கோளாலே பிற இயற்றும் கொடுஞ்செயல்க ளாலே**
**வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்**
**மெய் அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே**
**ஏற்றாலே இழிவென நீர் நினையாதீர் உலகீர்**
**எந்தைஅருட் பெருஞ்சோதி இறைவனைச்சார் வீரே. - 5450**

கொலைக் கருவிகளிலிருந்து உடலைப் பாதுகாக்க, குண்டு துளைக்காத ஆடைகளை அணிவது, குண்டு துளைக்காத கார் வண்டிகளில் பயணம் செய்வது போன்றன உலக முழுவதும் இன்று வழக்கமாகி விட்டன. தேகசித்தி பெற்ற சித்தர்கள் ஞானிகள், அருளாளர்களின் உடம்பைக் கத்திவெட்டாது. துப்பாக்கி குண்டு துளைக்காது. மண்ணும், நீரும், நெருப்பும், காற்றும் அவர்களின்

உடலுக்கு இடையூறு செய்ய இயலாது. இடி, மின்னல், வானத்திலிருந்து வரும் பல்வேறு கதிர்கள் போன்றவற்றாலும் அவர்களது உடலைத் தாக்க இயலாது. விண்கதிர்களின் தாக்கத்திற்கு அஞ்சியே விண்வெளி விஞ்ஞானிகள் பாதுகாப்புக் கவசம் அணிந்து செல்கின்றனர். இத்தகைய பாதுகாப்புகள் எவையும் மகாவீரர், வள்ளலார், போன்ற அருளாளர்களுக்கு வேண்டுவதில்லை. அவர்களது உடம்புகள் இயற்கையையும் வெல்லும் ஆற்றல் பெற்றவை.

மகாவீரர் ஆதபயோகியாக (வெய்யிலில் அமர்ந்திருந்த நிலையில்) தியானஞ் செய்தது ஸ்ரீ புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. வள்ளலார் பகலில் உச்சி நேரத்தில் வெட்ட வெளியில் வெய்யிலில் அமர்ந்து தியானஞ் செய்வதுண்டு. அவ்வாறு தியானத்திலிருந்த போது பார்த்த அன்பர் ஒருவர் வள்ளலாரின் தலை உச்சிக்கும் வானத்துச் சூரியனுக்குமாக நீண்ட நெடியதோர் ஒளிப்பிழம்பு தெரிவதைக்கண்டார் என்பது வரலாறு.

**வள்ளலாரின் தேகசித்தி அனுபவங்கள்**

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை இரண்டே சொற்களிற் கூற வேண்டுமாயின் ஆன்மநேயம். ஆன்ம லாபம் என்று கூறலாம். ஜீவகாருண்யம், மரணமிலாப் பெருவாழ்வு என்று கூறலாம்.

ஆன்மநேயம் - ஜீவகாருண்யம்

ஆன்மலாபம் - மரணமிலாப் பெருவாழ்வு

ஆன்ம நேயத்தால் ஆன்ம லாபத்தைப் பெற வேண்டும். அதாவது ஜீவகாருண்யத்தால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற வேண்டும்.

ஜீவகாருண்யம் முதலாவது படி

மரணமிலாப் பெருவாழ்வு முடிந்த முடிபான நிலை

ஆன்ம நேயமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகினால் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய முத்திறத் தேகசித்திகளைப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வை அடையலாம் என்று வள்ளற்பெருமான் உபதேசித்துள்ளார். திருவருட்பாப் பாடல்களிலும் கூறியுள்ளார். வள்ளற் பெருமான் இம்முத்தேக சித்திகளையும் பெற்றவர்.

சுத்த பிரணவ தேக சித்திகளைப் பற்றிய வள்ளலார் உபதேசத்தை நாம் பதிப்பித்துள்ள திருஅருட்பா உரைநடைப் பகுதியில் தெளிவாகப் பதிப்பித்துள்ளோம். நாம் எழுதியுள்ள இராமலிங்க அடிகள் வரலாற்றுப் பெருநூலில் விரிவாக விளக்கியுள்ளோம். விரிவஞ்சி ஒரு அட்டவணையை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுகிறோம்.

## மூவகைத் தேகங்கள்

| சுத்த தேகம் | பிரணவதேகம் | ஞானதேகம் |
|---|---|---|
| காரியரூபம் | காரிய காரண ரூபம் | காரண ரூபம் |
| பரதேகம் | பரம்பரதேகம் | எங்கும் பூரண வியாபகம் |
| பர உணர்ச்சி | பரம்பர உணர்ச்சி | - |
| பர அறிவு | பரம்பர அறிவு | பராபர அறிவு |
| பரத்துவம் | பரம்பர தத்துவம் | பராபர தத்துவம் |
| பொன்வண்ணம் அபரஞ்சிமாற்று | 16முதல்108வரையில் மாற்று உரைபடாதது. | அளவுகடந்த மாற்று |
| 12வயது பருவம் | 5 முதல் 8 வயது | சப்தமயதரிசனம் |
| நரை,திரை,பிணி,மூப்பு மலம்,ஜலம்,வியர்வை, ஆகாரம்,நித்திரை, தாகம் நிழல் முதலியன இல்லாமை | உருவம் தோன்றும் பிடிபடாது | உருவம் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் |
| மயிர்வளர்ச்சி தாழ்ச்சி இல்லாமை | - | - |
| கர்மசித்தி | சர்வசித்தி | சர்வ மகாசக்தி, சர்வ சுதந்தரம் |
| கல்பதேகி | பிராண கல்பதேகி | காலாதீதன் |
| அபரமார்க்கி | பர அபர மார்க்கம் | - |

சுத்த தேகத்திற்கு சுவர்ணதேகம் (பொன்னுடம்பு) ஒளி உடம்பு என்றும் பெயர்.

| | | |
|---|---|---|
| **சுத்த தேகம்**<br>**பொன்னுடம்பு** | - | **ஒளி உடம்பு Body of Light** |
| **பிரணவ தேகம்** | - | **ஒலி உடம்பு Body of Sound** |
| **ஞானதேகம்** | - | **அருள் உடம்பு Body of Grace** |

சுத்த பிரணவ ஞானதேக சித்திகளிப் பெற்றவரது உடம்பு ஒளிவடிவமாகி, ஒலி வடிவமாகி, அருள் வடிவமாகி, கடவுள் நிலையைப் பெற்று எங்கும் பூரண வியாபகமாக நிறைந்துவிடும்.

இதுவே மரணமிலாப் பெருவாழ்வு. இனிப்பிறப்பொன்றுமில்லாப் பெருநிலை. வள்ளலார் இந்நிலையைப் பெற்றார். வள்ளலார்க்கு இப்பிறப்பே இறுதிப்பிறப்பு. இனிப் பிறப்பு இல்லை.

வள்ளலார் கடவுள் நிலையை அடைந்து அம்மயமாகி விட்டார். கடவுள் மயமாகிவிட்டார் என்பதே அவரது நிறைவான சித்திநிலை.

## <u>அருகர் என்பேன் புத்தர் என்பேன்</u>

திருவருட்பாப் பாடலொன்றில் வள்ளலார் அருகரையும் புத்தரையும் குறிப்பிடுகிறார். அதற்கு அடுத்த பாடலில் அதற்கொரு விளக்கமளிக்கிறார். இவ்விரு பாடல்களும் வள்ளலாரின் சமய சமரசத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன.

திருஅருட்பா ஆறு திருமுறைகளில் முதல் ஐந்து திருமுறைகள் பொது. ஆறாம் திருமுறை சிறப்பு, முதல் ஐந்து திருமுறைகளில் பக்திக் கருத்துகள் மிகுதி. ஆறாம் திருமுறையில் சீவகாருண்யக் கருத்துக்கள்மிகுதி,சீர்திருத்தக் கருத்துக்கள் மிகுதி, சமரசக் கருத்துக்கள் மிகுதி.

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் ஈற்றில் உள்ளது அனுபவமாலை, நூறு பாடல்கள் அனுபவ மாலைக்குப்பின் சத்திய வார்த்தை என்ற தலைப்பில் ஒருபாடல், சத்திய அறிவிப்பு நான்கு பாடல்கள், இவற்றோடு, திருவருட்பா நிறைவு பெறுகிறது.

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் ஈற்றயலில் உள்ள அனுபவமாலை, பெயருக்கேற்ப அனுபவ நிலைகள் பலவற்றைக் கூறுகிறது. அனுபவமாலைப் பாடலொன்றில் வள்ளற்பெருமான் தன் ஆன்ம நாயகனாகிய நடராசப் பெருமானின் பெயரைக் கூறும்போது அருகன் என்பேன். புத்தர் என்பேன் என்று கூறுகிறார். நாயக நாயகி பாவத்தில், தலைவி தோழிக்குக் கூறுவதாகப் பாடிய பாடல்கள், நடராசப் பெருமான் நாயகர், தலைவர், வள்ளற்பெருமான் நாயகி, தலைவி, மனம் தோழி, தில்லைச் சிற்றம்பலத்திலே திருநடனம் புரியும் உன்னுடைய கணவர்

திருப்பெயரைச் சொல் என்று (மனமாகிய) தோழி கேட்கிறாள். தோழிக்குத் தலைவி பதிலுரைக்கிறாள். பதிலுரைப்பதாகப் பாடிய பாட்டு இது.

**சிற்சபையில் நடிகின்ற நாயகனார் தமக்குச்**
**சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்**
**பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்**
**பித்தர் என்றே பெயர்படைத்தர்க் கெப்பெயர் ஒவ் வாதோ**
**அச்சமயத் தேவர் மட்டோ நின்பெயர் என் பெயரும்**
**அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே**
**சிற்சபையில் எம்கணவர் செய்யும் ஒரு ஞானத்**
**திருக்கூத்து கண்டளவே தெளியும் இது தோழி** 5802

பெருகிய பேரருளை உடையவர், தில்லைச் சிற்றம்பலத்திலே நடம் புரியும் பெருந்தகை, என்னுடைய கணவர் திருப்பெயரைச் சொல்லும்படிக் கேட்கிறாஅய்!

அருகர் என்பேன், புத்தர் என்பேன், அயன் என்பேன், நாராயணன் என்பேன், அரன் என்பேன், ஆதிசிவம் என்பேன், சதாசிவம் என்பேன், சத்தி சிவம் என்பேன், பரமம் என்பேன், பிரமம் என்பேன், பரப்பிரமம் என்பேன், சுத்தப்பிரமம் என்பேன், துரிய நிறைவு என்பேன், சுத்த சிவம் என்பேன் - என்று அடுக்கடுக்காக கூறுகிறார்.

அயன் (பிரமன்), நாராயணன் (விஷ்ணு), அரன் (சிவன்),ஆதிசிவம், சாதாசிவம், சத்திசிவம், பரமம், பிரமம், பரப்பிரம்மம், சுத்தப்பிரமம், துரிய நிறைவு, சுத்த சிவம் என்பனவெல்லாம் சைவ, வைணவ, வேதாந்த, சித்தாந்தப் பெயர்கள், அகச் சமயப்பெயர்கள் இவையெல்லாம் சிற்சபையில் நடம் புரியும் நாயகனாருக்கும் பொருந்தும் அருகர் என்றும் புத்தர் என்றும் சொல்லுகிறாயே அவை புறச்சமயப் பெயர்களாயிற்றே! அருகர் புத்தர் என்னும் புறச்சமயப் பெயர்கள் நடராசப் பெருமானுக்குப் பொருந்துமா? என்று தோழி கேட்கிறாள். அதற்குத் தலைவி பதில் கூறுகிறாள். பதில் கூறுவதாக வள்ளலார் பாடுகிறார். புறச்சமயப்போர் பொருந்துவதோ என்கிறாய்! பிற சமயத்தார் பெயரும் அவர் பெயரே, பித்தர் என்றுபெயர் பெற்றவருக்கு வேறுஎப்பெயர்தான் பொருந்தாது! பிற சமயப்பெரியோர்கள் பெயர் மட்டுமா, உன்பெயரும் என்பெயரும் கூட அவர் பெயரே, சிற்சபையில் என் கணவர் செய்யும் ஞானத்திருக்கூத்தைக் கண்டால் தான் நான் கூறுவது தெளிவாகத் தெரியும் என்று தோழி கூறுவதாக வள்ளலார் பாடுகிறார்.

**பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்**
**பெருந்தகை என் கணவர் திருப் பேர்புகல்என் கின்றாய்**
**அருகர்புத்தர் ஆதி என்பேன் அயன் என்பேன் நாரா**
**யணன்என்பேன் அரன் என்பேன் ஆதிசிவம் என்பேன்**
**பருகுசதா சிவம் என்பேன் சத்திசிவம் என்பேன்**
**பரம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்**
**துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்**
**சுத்த சிவம் என்பென் இவை சித்துவிளை யாட்டே** .. 5801

சிதம்பரத்தில் எல்லா மதங்களின் தத்துவ உண்மைகளும் அடங்கியுள்ளன. "எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த" என்று ஒரு பாடலில் (4142) வள்ளலார் குறிப்பிடுகிறார்.எல்லாச் சமயங்களின்முடிவுகளும் திருச்சிற்றம்பலத்திலே இருக்கின்றன என்கிறார். " எச்சமயத்தவரும் வந்து இறைஞ்சா நிறபது" என்று தாயுமானவரும் கூறியுள்ளார். (14-ஆகாரபுவனம், சிதம்பர ரகசியம்(12) "அனைத்து உலகும் தொழும் தில்லை"எல்லோரும் இறைஞ்சு தில்லை" என்று மாணிக்கவாசகரும் கூறுகிறார். (474; 476).

சிதம்பரம் நடராஜரை வள்ளலார் அருகனாகக் காண்கிறார். புத்தராகவும் காண்கிறார். சமண சமயக் கடவுளாகவும் பௌத்த சமயக் கடவுளாகவும் காண்கிறார். பித்தனைத்விடப் புத்தன் சிறியனவா? அருகன் சிறியவனா?பித்தன் என்று சொல்வதை இறைவன் ஏற்பானானால் புத்தன் என்று சொல்வதையும் அருகன் என்று சொல்வதையும் ஏற்க மாட்டானா? உலகில் உள்ள எல்லா உயிர்களின் பெயருமே இறைவன் பெயர்தான் என்கிறார். வள்ளலாரின் உள்ளம் எவ்வளவு விரிவாக உள்ளது என்பதை இதனால் அறியலாம்.

"வஞ்சச் சமண வல் இருளை மாய்க்கும் ஞான மணிச்சுடரே" (474)" ஆருகச் சமயக் காடை அழித்த வெங்கனலே போற்றி" (512) என்று திருவருட்பா முதல் திருமுறையிலும், "இறகெடுத்த சமணர் குலம் வேரறுத்த சொக்கே" (2781) என்று நான்காம் திருமுறையிலும் பாடும் வள்ளலார், ஆறாந் திருமுறையில் சிதம்பரம் நடராசப் பெருமானை அருகர் என்பேன் புத்தன் என்பேன் என்றும் பாடுகிறார். முன்னே சமணத்தை இழித்துக் குறிப்பிட்டது வழிவழியாக வரும் சைவமரபைச் சார்ந்து பாடிய நிலை. இங்கு அருகர் புத்தராதியென்பேன் என்று போற்றிப் பாடியது சொந்த அனுபவநிலை. முன்னது சமய மரபுநிலை. பின்னது சமரசப் பொதுநிலை.

வள்ளலார் திருவுள்ளத்தில் அருகருக்கும் ஓர் இடம் உண்டு, வள்ளலார் திருவாக்கால் அருகரும் போற்றிப் பாடப்பெற்றிருக்கிறார் என்பதைச் சைவ, சமண, சன்மார்க்க உலகங்கள் உணரவேண்டும்.

## <u>சமணர்களின் தமிழ்க்கொடை</u>

## <u>(சமணர்களின் தமிழுக்குச் செய்த தொண்டு)</u>

தமிழ் நூற்பரப்பு கடல்போற் பரந்தது. அகத்தியமும், தொல்காப்பியமும் பழந்தமிழிலக்கணங்கள். அகத்தியம் கிடைக்கவில்லை. தொல்காப்பியம் முழுமையாகக் கிடைத்துள்ளது. தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் சமணர் என்பது ஆய்வாளர் சிலரது கருத்து. இக்கருத்து எல்லார்க்கும் உடன்பாடன்று. தொல்காப்பியர் சமணர் அல்லர் என்ற கருதே பரவலாக உள்ளது. தொல்காப்பியர் சைனரென்றோ சைனரல்லர் என்றோ உறுதி கூற முடியாது என்பது தெ.பெ.மீனாட்சி சுந்தரனார் கருத்து.*

* சமணத் தமிழிலக்கிய வரலாறு தெ.பொ.மீ. கலைக்கதிர் வெளியீடு. கோயம்புத்தூர், முதற்பதிப்பு 1961 - ப.15.

தொல்காப்பியம் பழந்தமிழ் இலக்கணமென்றால், பழந்தமிழ் இலக்கியங்கள் சங்கநூல்கள். அவை பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் என இரண்டு தொகுதிகள். மிகப் பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் தொகுப்புகள். கடைச்சங்க காலத்திலேயே சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டன. சங்கப்புலவர்களில் சமணர் சிலரும் பௌத்தர் சிலரும் இருந்திருக்கின்றனர். உலோச்சனார் நிகண்டனார் என்ற பெயர்கள் அவர்கள் சைனர் என்பதைக் காட்டுகின்றன. சமணத் துறவிகள் தங்கள் தலைமயிரைக்கத்தியாற் சிறைக்காமல் கைகளாற் பறித்துக் கொள்வதற்கு உலோச்சு என்றுபெயர். ஆதலின் உலோச்சனார் சமணராக இருக்கலாம். நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் என்றொரு புலவர் இருந்திருக்கிறார். சமணக் கடவுளுக்கு நிர்கந்தர் என்றொரு பெயர். நிர்கந்தர் என்பதன் சிதைவே நிகண்டர் என்பர். கலைக்கோட்டுத் தண்டு என்றொரு நிகண்டு நூலை இவர் எழுதியதாகப் பின்னாளைய உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

கலைக்கோட்டுத் தண்டனார் என்ற பெயர் கம்பராமாயணத்தில் வரும் கலைக்கோட்டு மாமுனிவர் பெயரி ஒத்திருக்கிறது. நீண்ட மான்கொம்பைத் தண்டாக (கைத்தடியாக)க் கொண்டிருந்த்தால் கூட் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். கலைக்கோடு- மான்கொம்பு, தண்டு - தடி.

கடைச்சங்க காலத்திற்குப் பின்பு கி.பி.470-இல் வச்சிரந்தி என்ற சமண முனிவர் திராவிட சங்கம் ஒன்றை நிறுவிச் சமணத்தையும் தமிழையும் வளர்த்திருக்கிறார். வச்சிராந்தி தமிழ்ச் சங்கம் என அது வழங்கப்பெற்றது.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்கள் பதினெட்டுக்குப் பின்னர், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பதினெட்டு நூல்கள் தோன்றின அவற்றுள் சில நூல்கள் பெருநூல்கள். பல நூல்கள் சிறுநூல்கள். பதினெண்கீழ் கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள், சங்க இலக்கியங்களைக் காட்டிலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சமணசமயக்கருத்துக்கள் மிகுந்து காணப்பெறுகின்றன. புண்ணிய பாவம் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தலையாயது திருக்குறள். திருவள்ளுவர் சமணர் என்பது சமண சமய அறிஞர்களின் கருத்து. சமணரல்லாத அறிஞர்கள் சிலரும் அவ்வாறு கருதுகின்றனர். திரு.வி.க.வும் வையாபுரிப் பிள்ளையும் இக்கருத்துடையவர்கள். காஞ்சிபுரம் தி. அனந்தநாத நயினார் என்னும் சமண அறிஞர் திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும் என்றொரு விரிவான நூலை எழுதியுள்ளார். திரு. வி.க.வின் அணிந்துரையுடன் அது 1931-ல் வெளியாயிற்று. சமண சமய ஆசாரியாராகிய குந்தகுந்தருக்கு ஏலாச்சாரியார். திருவுள்ளம் நயினார் என்ற பெயர்களும் உண்டென்றும் அவர் பிராகிருத மொழியில் ஐம்பத்திரண்டு நூல்களையும் சமஸ்கிருதத்தில் தத்துவார்த்த சூத்திரம் பத்ம நந்தி பச்சீஸ் ஆகிய இரண்டு நூல்களையும், தமிழில் திருக்குறளையும்

இயற்றினார் என்று அனந்தநாத நயினார் கூறுகிறார். திருவள்ளுவர் சமணர் என்ற கருத்தை உடன்பட்டுத் திரு.வி.க. அணிந்துரை வரைந்துள்ளார்.

சைவரும், வைணவரும், சமணரும், பௌத்தரும், கிறித்தவரும் திருவள்ளுவரைத் தத்தம் சமயத்தவர் என்று உரிமை கொண்டாடுகின்றனர். திருவல்லுவரின் சமயப் பொதுமையைக் காட்டுவதற்கு இஃதொன்றே போதுமானது. திருவள்ளுவரைச் சமணர் என்று சாதிப்பதைத் தெ.பொ.மீ. ஏற்கவில்லை. திருவள்ளுவர் சமயப்பொதுவினர் என்பதே தெ.பொ.மீ. கருத்து. சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவர் என்ற கல்லாடனார் கணக்கே சரியான கணக்கு. திருவள்ளுவர் பிறப்பால் (தமிழ் மண்ணின் சமயமான) சைவரே. சிறப்பால், ஒழுக்கத்தால் சமயாதீதர், சமயப் பொதுவினர்.

வள்ளலார் பிறப்பால் சைவர். சிறப்பால், ஒழுக்கத்தால் (சைவமுக்கடந்த) சமரசசுத்த சன்மார்க்கி, திருவள்ளுவரையும் அப்படித்தான் கொள்ளவேண்டும். திருவள்ளுவர் பிறப்பால் சமணராக, ஒழுக்கத்தால் சமணராக இருந்திருந்தால் அவரது திருக்குறளில் இவ்வளவு சமயப்பொதுமை இராது. சமணம் சற்றுக் தூக்கலாகவே இருந்திருக்கும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூலகள் பதினெட்டில் நாலடியார், பழமொழி, சிறு பஞ்சமூலம், ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது ஆகிய ஐந்தும் சமணர் இயற்றியவை.

பதினெண்கீழ்க்கணக்கின் பின்னர் வைத்து எண்ணப்பெறுவன ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள். ஐம்பெருங்காப்பியங்களில் மூன்று சமணம். இரண்டு பௌத்தம், ஐஞ்சிறுகாப்பியங்களில் ஐந்துமே சமணம்.

<u>ஐம்பெருங்காப்பியங்கள்</u>

1. **சிலப்பதிகாரம் - சமணம்**
2. **மணிமேகலை - பௌத்தம்**
3. **சீவகசிந்தாமணி - சமணம்**
4. **குண்டலகேசி - பௌத்தம்**
5. **வளையாபதி - சமணம்**

சிந்தாமணியை முதலில் வைத்து ஐம்பெருங்காப்பியங்களை வரிசைப்படுத்துவதும் உண்டு. ஆனால் காலத்தால் முற்பட்டது சிலப்பதிகாரமே. சிலம்பு, மேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, என்ற வரிசை முறையே பொருத்தமானது.

ஐஞ்சிறு காப்பியங்கள் சூளாமணி, நீலகேசி, யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் என ஐந்து, இவ்வைந்துமே சமண நூல்கள்.

ஐம்பெருங்காப்பியங்களிலும் சேராமல் ஐஞ்சிறு காப்பியங்களிலும் சேராமல் பெருங்கதை ஒரு தனிக்காப்பியமாக உள்ளது. பெயருக்கேற்பப் பெருநூலாகிய பெருங்கதை இருவகைக் காப்பியத் தொகுதிகளிலும் சேர்க்கப்பெறாமற் போனது பெருங்குறையே.

பரணி நூல்களுள் கலிங்கத்துப்பரணியே சிறந்தது. அதன் ஆசிரியர் சயங்கொண்டார் சமணர்.

இலக்கியப் பரப்பில் சமணரது கொடை போன்றே இலக்கணத்திலும் சமணர்களது கொடை மிகுதி. தொல்காப்பியத்துக்கு அடுத்த நிலையில் வைத்துச் சிறப்பிக்கப் பெறும் இலக்கண நூலாகிய நன்னூல் சமணமுனிவர் பவணந்தி செய்தது. அவிநயம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் சமணர் செய்தவையே. முழுமையும் கிடைக்காமல் உரைநூல்களால் அறியப் பெறும் இந்திரகாளியம் அமுதசாகரம்முதலிய பல இலக்கண நூல்களும் சமணர் செய்தவையே. வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல் செய்த வச்சணந்தி முனிவர் சமணரே.

இலக்கிய இலக்கணங்களைச் செய்வதில் மட்டுமின்றி, உரையெழுவதிலும் சமணர்கள் கொடை மிகுதி. தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர், சிலப்பதிகாரத்திற்கு உரைவரைந்த அடியார்க்கு நல்லார் நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் ஆகியோர் சமணரே. அமுதசாகரர் என்றும் குணசாகரர் என்றும் சாகரப் பெயர்கொண்ட இவர்களெல்லாம் தமிழ்க் கடல்களாகவே திகழ்ந்தனர். சாகரம்-கடல்.

பிற்காலத்திய, தற்காலத்திய அகராதிகளுக்கு முன்னோடி அக்காலத்திய நிகண்டுகள். திவாரகம், பிங்கலம், சூடாமணி நிகண்டு ஆகிய நிகண்டு நூலகளைச் செய்தவர்களும் சமணரே.

அறநெறிச்சாரம் சமணர் செய்த தனி ஒரு அற இலக்கியம். அருங்கலச் செப்பு, மேருமந்தர புராணம், ஶ்ரீபுராணம் முதலிய சமண சமய தத்துவ நூல்களும் பல.

திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, (சமணத்)_திருவெம்பாவை, திருமேற்றிசையந்தாதி, ஆதிநாதர் பிள்ளைத்தமிழ், நரிவிருத்தம் முதலிய சமண சமயச் சிற்றிலக்கியங்களும் பல. நரிவிருத்தம் போன்றே எலிவிருத்தம் கிளிவிருத்தம் என்பனவும் இருந்து இன்று கிடைக்கப் பெறாதவையாயின.

சமணத் தமிழ் நூல்களின் பட்டியலொன்றைக் கீழே தருகிறோம்.

1.சிலப்பதிகாரம் }
2.சீவகசிந்தாமணி } இம்மூன்றும் ஐம்பெருங்காப்பியங்காளில் சேர்ந்தவை.]
3.வளையாபதி }

4. சூளாமணி }
5. நீலகேசி }
6. யசோதர காவியம் }

7. உதயணகுமார காவியம்}
8. நாககுமார காவியம் } இவ்வைந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள்

9. பெருங்கதை }
10. நாலடியார் } இவ்வைந்தும் பதினெண் கீழ்க்கணக்கு
11. பழமொழி } நூல்களுள் சேர்ந்தவை.
12. சிறுபஞ்சமூலம் }
13. ஏலாதி }
14. திணைமாலை நூற்றைம்பது }

15. அறநெறிச்சாரம் -- நீதிநூல்

16. கலிங்கத்துப்பரணி -- சிற்றிலக்கியம்

17. அவிநயம் }
18. இந்திரகாளியம் } இலக்கணங்கள்
19. யாப்பருங்கலம் }
20. யாப்பருங்கலக்காரிகை }
21. நம்பியகப்பொருள் }

22. வச்சணந்திமாலை -- பாட்டியல்

23. திவாகரம் } நிகண்டுகள்
24. பிங்கலம் }
25. சூடாமணி நிகண்டு }

26. மேருமந்தர புராணம் } சமண சமய தத்துவ
27. ஶ்ரீ புராணம்
28. அருங்கலச் சிறப்பு }
29. நரிவிருத்தம்
30. திருக்கலம்பகம் }
31. திருநூற்றந்தாதி
32. திருவெம்பாவை }
33. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்
34. திருமேற்றிசை அந்தாதி }
35. திருநாதர் குன்றத்துப் பதிகம்
36. ஜீவசம்போதனை }
37. சினேந்திர மாலை }

## வள்ளலார் காட்டும்

## நாலடியார் மேற்கோள்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்பெறும் சிறப்பு வாய்ந்த அறநூல் நாலடியார். சமண முனிவர் பலர் பாடிய நானூறு பாடல்களின் தொகுதி. ஒருவராலேயே பாடப்பெற்றது என்ற கருத்தும் உண்டு. நான்கு அடிகளை உடைய வெண்பாவாற்பாடப் பெற்றதால் நாலடியார் எனப் பெயர் பெற்றது. பழைய இலக்கியங்களுள் "ஆர்" என்ற சிறப்பு விகுதி பெற்ற நூல் இஃதொன்றே. திருக்கோவையார், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகியவை பின்னாளில் ஆர் விகுதிபெற்றுச் சிறந்தன. நானூறு பாடல்களைக் கொண்டதால் நாலடி நானூறு என்றும் பெயர் பெற்றது.

**"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"**

என்பது ஒரு பழமொழி.

**"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"**

என்பது ஒரு தனிப்பாடலின் பகுதி, இவற்றில் நாலு என்பது நாலடியார். இரண்டு என்பது நாலடியார். இரண்டு என்பது இரண்டடிகளால் இயன்ற திருக்குறள். ஆலம் விழுதும் வேலங்குச்சியும் பல்துலக்கும் பற்குச்சிகளாகப் பண்டைக் காலந்தொட்டே மக்களாற் பயன்படுத்தப் பெறுபவை. ஆலும் வேலும் (ஆல விழுதும் வேலங்குச்சியும்) பல்லுக்கு உறுதியைக் கொடுப்பதைப் போல நாலும் இரண்டும்(நாலடியார் திருக்குறளும்) சொல்லுக்கும் உறுதியைக் கொடுக்கும். பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் (நாலடியாரிலும், திருக்குறளிலும்) சொல், உறுதி, சொல் அருமை, திருக்குறள் நாலடியார் ஆகிய இரண்டிலும் உண்டு.

நாலாடியாருக்கு வேளாண் வேதம் என்றும் ஒரு பெயர் வழங்கியுள்ளனர்.

**வெள்ளான் மரபுக்கு வேதம் எனச் சான்றோர்**
**எல்லாருங் கூடி எடுத்துரைத்த, சொல் ஆகும்**
**நாலடி நானூறும் நன்கினிதா என்மனத்தே**
**சீலமுடன் நிற்க தெளிந்து.**

என்பது ஒரு தனிப்பாடல்

வேளாண்வேதம் என்று ஏன் இதனைச் சொன்னார்கள்?

அந்தணர் அரசர் வணிகர் ஆகிய மூவருணத்தாருக்கு மட்டுமே வடமொழி வேதங்கள் உரியவை. வேளாளருக்கு அவற்றின் உரிமை மறுக்கப்பட்டு விட்டது. எனவே திருக்குறள் நாலடியார் போன்றவை வேளாளருக்கு வேதங்களாயின. நால்வேதத்தினும் பெரிய வேதமாக வேளாளர் இவற்றைப் போற்றினர். திருக்குறள் தமிழ் வேதம்(தமிழ் மறை) எனப் பெயர் பெற்று விட்டது. நாலடியாருக்கு

வேளாளர் வேதம் எனப் பெயர் சூட்டினர். நாலையும் இரண்டையும் வேளாளர்கள் தங்கள் வேதங்களாகவே கொண்டனர்.

திருக்குறளில் மிகப் பெரிதும் ஈடுபட்ட வள்ளலார் திருக்குறளைத் தன் வழிகாட்டி நூலாகவேகொண்டவர். வள்ளலாரின் நாட்டம் நாலடியாரிலும் சென்றிருக்கிறது. நாலடியார்ச் செய்யுள்கள் இரண்டை இரண்டு வெவ்வேறு இடங்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

திருக்குறளைப் போன்றே நாலடியாரும் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என மூன்று பால்களை உடையது. காமத்துப்பால் இரண்டே அதிகாரங்கள், இருபதே பாடல்கள். திருக்குறள் அறத்துப்பாலில் பாயிரத்திற்குப்பின் இல்லற இயல் முதலில் இருக்கும். அதன்பின் துறவறவியல் ஆனால் நாலடியாரில் துறவற இயல் முன்னே, இல்லறவியல் பின்னே. நாலடியார் துறவற இயலில்தான் தொடங்குகிறது. முதல் அதிகாரம் 1. செல்வம் நிலையாமை 2. இளமை நிலையாமை, 3.யாக்கை நிலையாமை, இம்மூன்று நிலையாமைக்கும் பின் 4. அறன் வலியுறுத்தல் இரண்டாவது அதிகாரம் இளமை நிலையாமையில் ஒரு பாடல், அதிலும் முதற்பாடல்

**'நரை வரும்' என்று எண்ணி நல்அறி வாளர்.**
**குழவி யிடத்தே துறந்தார்; புரைதீர**
**மன்னா இளமை மகிழ்ந்தாரே; கோல் ஊன்றி**
**இன்னாங்கு எழுந்திருப் பார்** -1(11)

சமண சமயம் துறவுக்கு மிகுந்த பெருமை தரும் சமயம், கடுந்துறவுச் சமயம் போகப்போக நாளடைவில் நரைவந்து விடுமே என்று எண்ணி நல்ல அறிவுடையவர்கள் குழவிப் பருவத்திலேயே குழந்தைப் பருவத்திலேயே துறவு பூண்டவர்கள். குழவி - குழந்தை, குழவியிடத்தே-குழந்தைப் பருவத்தில். இளமைப் பருவத்திலேயே என்று சொல்லாமல் குழவிப் பருவத்தில் என்றுசொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இல்லற வாழ்க்கையை மேற்கொள்வதில் அருவருப்பு, பால் உண்ணும் காலத்திலேயே தமக்கு உண்டு என்கிறார். வள்ளலார், பால் உண்ணும் காலம் குழந்தைப் பருவம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதில் அருவருப்புப் பால் உணும் காலையே உளதால் என்பது வள்ளலாரின் ஒருபாடல் வரி.

மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள் சிதம்பர புராணத்தைப் பதிப்பித்தார். அப்பதிப்புக்கு வள்ளற்பெருமான் சாற்றுக்கவி அளித்தார். அச்சாற்றுக்கவியில் நரைவருமென்றெண்ணி... குழவியிடத்தே துறந்தார் என்னும்நாலடியார்ச் செய்யுளை மேற்கோளாக எடுத்தாள்கிறார்.

**"வையமும் வானமும் மறையும் சைவமும்**
**உய்ய ஓங்கிய ஒருபெருங் குரவன்**
**ஞான சம்பந்த நாயகன் அருளால்**
**ஈன சம்பந்த மெல்லாம் ஒழித்தோன்**
**நரைவரும் என்றெணி நல்லறிவாளர்**
**இரைவுறு குழவி யிடத்தே துறந்தார்**
**என்னு நாலடிக் கிலக்கிய மானவன்**

**மன்னுமா தவரெல்லாம் வழுத்தும் அருந்தவன்"**

என்று சிதம்பர சுவாமிகளிஅப் போற்றிப் புகழ்கிறார். எழுபத்திரண்டு அடிகளையுடைய நீண்ட குறள் வெண் செந்துறைப் பாடலில் இவை சில அடிகள். இதனுள் நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார் என்னும் நாலடியார்த் தொடரை அப்படியே முழுமையாக எடுத்தாண்டுள்ளதோடு, என்னும் நாலடி என்ரு நாலடியாரையும் குறிப்பிட்டுள்ளதைக் காண்க. இளமையிலேயே துறவு பூண்ட சிதம்பர சுவாமிகளுக்கு நாலடியார் உதாரணமாயிற்று. அதை வள்ளற்பெருமான் எடுத்துக்காட்டுகிறார்.

நாலடியார் பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்தில்.

**பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியாரைக்**
**கொன்னே தலைக் கூடப் பெற்றிருந்தும், அன்னோ!**
**பயனில் பொழுதாக் கழிப்பரே, நல்ல**
**நயமில் அறிவி னவர். .. 162**

என்றொரு பாடல் உள்ளது.

பொன்னைக் கொடுத்தாவது நட்புச் செய்து கொள்ளும் அளவுக்குத் தகுதியான பெரியோர்களை, எளிதில் பொருட்செலவில்லாமலேயே நட்புச் செய்து கொள்ளும் நிலையைப் பெற்றிருந்தும் கூட,அறிவு நயமற்றவர்கள் தம் வாழ்நாளைப் பயனற்றதாகக் கழிப்பர் என்பது இப்பாடலில் கருத்து. வள்ளற்பெருமான் இளம்போதில் சென்னையில் வதிந்த காலத்தில் சென்னையில் திருவாவடுதுறை ஆதினக் கிளைமடத்தில் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் என்ற கல்வியறிவிற் சிறந்த சான்றோர் ஒருவர் இருந்தார். வள்ளற்பெருமானுக்கு அவருடன் நட்பிருந்தது. தாண்டவராய சுவாமிகளுக்கு வரைந்த திருமுருப் பாசுரமொன்றில் வள்ளற்பெருமான் பொன்னே கொடுத்தும் என்னும் இந்நாலடியார்ச் செய்யுளைமேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார். எடுத்துக்காட்டுவதோடு அது நாலடி என்றும் சொல்லிக் காட்டுகிறார்.

**மின்னேர் சடைமுடித் தாண்டவ ராய வியன்றவநின்**
**றன்னேர் அடைதற் கெளிதாக நான் பெற்றுந் தாழ்த்துகின்றேன்**
**பொன்னே கொடுத்தும் எனுநா லடியின் பொருட்கிலக்காய்**
**என்னே இருந்துழல் என் ஏழை வன்மதி என்மதியே.**

வள்ளலாரின் சென்னை நண்பர்களில் இறுக்கம் இரத்தின முதலியார் புதுவை ராயல் ஹோட்டல் வேலு முதலியார் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள். பெருமான் சென்னை வாழ்வை நீத்து வடலூர்ப் பக்கம் வந்தபின் வேலு முதலியாருக்கு 15.02.1859-இல் எழுதிய திருமுகத்தில் "நல்லா ரெனத் தான் நனிவிரும்பிக் கொண்டாரை அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்" என எழுதியுள்ளார். இது, நாலடியார் நட்பிற் பிழை பொறுத்தல் என்னும் அதிகாரத்திலுள்ள முதற் செய்யுளின் இரண்டு அடிகளாகும்.

**நல்லார் எனத்தாம் நனி விரும்பிக் கொண்டாரை**
**அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்**
**நெல்லுக்கு உமிஉண்டு, நீர்க்கு நுரை உண்டு**
**புல் இதழ் பூ விற்கும் உண்டு.** .. 221

நல்லனவற்றிலும் சிறு குறைகள் இருக்கும். நெல்லுக்கு உமி உண்டு, தண்ணீருக்கு நுரை உண்டு. பூவுக்கு நல்ல இதழ்களோடு காம்பு ஓரத்தில் புல்லிதழ்களும் உண்டு. இவற்றைப் போல நல்லவர்களிடத்திலும் சிற்சில குறைகள் இருக்கக்கூடும். நல்லவர் என்று எண்ணி நாம் விரும்பி நண்பராகக் கொண்டவர்கள் நல்லவரல்லர் எனத் தோன்றினால் அதை வெளிக்காட்டாது அடக்கிக் கொள்ளவேண்டும் என்பது இந்நாலடியார்ச் செய்யுளின் பொருள். இச்செய்யுளின் முதல் இரண்டு அடிகளை அப்படியே தம் கடிதத்தில் எடுத்துக்காட்டுகிறார் வள்ளலார்.

வள்ளலார் நாலடியாரை மேற்கோள் காட்டுகிடங்கள் மூன்று. நாலடியார் சிறந்த அறநூல்(நீதிநூல்). நீதிநூற் பயிற்சி இக்காலத்தில் மிகவும் குறைதுவிட்டது. நமக்கு முந்திய தலைமுறையில் வள்ளலார் காலத்தில் நீதி நூற்பயிற்சி மிகுந்திருந்தது. நாலடியார்ச் செய்யுள்கள் மூன்றை மூன்று வெவ்வேறு இடங்களில் வள்ளலார் மேற்கோள் காட்டியுள்ளார் என்றால் பெருமானுக்கு நாலடியாரில் எவ்வளவு ஈடுபாடு இருந்திருக்கும் என்பதை நன்கறியலாம்.

## சமண சமயத்தின் இன்றைய நிலை

## சமணமும் சன்மார்க்கமும்

சமண சமயம் மிகக் குறைந்த மக்கள் தொகையைக் கொண்டது. சமணர்களின் எண்ணிக்கை (மக்கள் தொகை)50 இலட்சத்திற்கும் குறைவு. 42,81,000 நாற்பத்திரண்டு லட்சத்து எண்பத்தோராயிரம்) என்பதுமனோரமா ஆண்டு நூல் (இயர்புக்) 2004-இல் உள்ள குறிப்பு.

உலக சமயங்களை மக்கள் தொகையைக் கொண்டு பொதுவாக மூன்று நிலைகளில் பிரித்துள்ளார். 1. பெருஞ்சமயங்கள் (லீடிங் ரிலிஜன்ஸ் Leading Religions)2. சிறுசமயங்கள் (லெஸ்ஸர் ரிலிஜன்ஸ் lesser Religions) 3. தொன்மையான சமயங்கள் (என்சியண்ட் ரிலிஜன்ஸ் Ancient Religions)கிறித்துவம் இஸ்லாம் இந்து புத்தம் போன்ற சமயங்கள் "லீடிங்" என்று பெருஞ்சமயங்களின் வரிசையில் உள்ளன. சமணம், யூதம், ஷிண்டேயிசம், தாவோயிசம் ஆகியவை "லெஸ்ஸர்" என்று சிறிய சமயங்களின் வரிசையில் உள்ளன.

சமணமும் பௌத்தமும் வட இந்தியாவில் தோன்றின. பௌத்தம் உலக முழுவதும் பரவியுள்ளது. கிழக்கு ஆசிய நாடுகளில் மிகுதியாகப் பரவியுள்ளது. இந்தியாவில் குன்றியுள்ளது. சமணம் கடல் கடந்த நாடுகளில் (வெளிநாடுகளில்) பரவவில்லை. இந்தியாவுக்குள்ளேயே உள்ளது. வட இந்தியாவில் மிகுதி. அதிலும் ராஜஸ்தான், குஜராத், மகாராட்டிரா மாநிலங்களில் மிகுதி. தமிழ்நாட்டில் பரவலாக உள்ளது.

வடமாநிலங்களிலிருந்து சமணர்கள் பெரும்பாலும் பல்வேறு வகை வணிகர்கள், தொழிலை முன்னிட்டுத் தமிழ்நாட்டுக்கு வந்து பரவலாகப் பல இடங்களிலும் வாழ்கின்றனர். அவர்களின் பொருளாதார நிலை வசதிமிக்கது. தமிழ்ச் சமணர்கள் பெரு நகரங்களைவிடச் சிறுநகரங்களிலும் கிராமங்களிலுமே வாழ்கின்றனர். இவர்களின் பொருளாதார நிலை மிகக் குறைவானது. வடமாநிலங்களிலிருந்து வந்து இங்கு வாழும் சமணப் பெருமக்கள் பெருநகரங்களிலும் சிறுநகரங்களிலும் புதிய புதிய கோயில்களைக் கட்டியுள்ளனர். இன்று கட்டி வருகின்றனர்.

பெருநகரங்களின் புறத்திலும், சிற்றூர்களிலும் உள்ள பழைமையான சமணக் கோயில்கள்,ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையுடைய கோயில்கள் அழிந்து வருகின்றன. பாழ்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் பழைமை மாறாமல் புதுப்பித்துப் பராமரிக்கும் நிலை உருவாக வேண்டும்.

காஞ்சிபுரம் அருகே திருப்பருத்திக்குன்றம் என்றொரு ஊர். சமண காஞ்சி என்றே அதற்குப் பெயர். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையாக சமணக் கோயில்கள் இரண்டு உள்ளன. அதில் ஒன்றின் திருச்சுற்றில் குராமரம் ஒன்று உள்ளது. அதன்கீழ் கல்லில் சமண ஆசாரியர் இருவரின் பாதங்கள் உள்ளன. அக்குராமரத்தைத் தருமக்குரா என்றொரு பழம்பாடல் கூறுகிறது.

**தன்னளவிற் குன்றா துயராது தண்காஞ்சி**
**முன்னுளதுமும்முனிவர் மூழ்கியது-மன்னவன் தான்**
**செங்கோல் நலங்காட்டும் தென்பருத்திக் குன்றமர்ந்த**
**கொங்கார் தருமக் குரா.**

குராமரத்துக்குத் தருமக்குரா என்று பெயரிட்டுள்ளது மிகவும் அருமை. தருமக்குராவைத் தரிசிப்பதற்காகவே நாம் சென்றோம்(23.07.1992) சிறிதுநேரம் தருமக்குராவின் நீழலில் தியானம் செய்து மகிழ்ந்தோம். சமண சமயம் அறச்சமயம். தங்கள் சமயத்தை "ஜைன தர்மம்" என்றே கூறுவர். ஜைன தர்மத்தில் குராமரமும் தருமக்குரா.

நன்னூல் என்ற அருமையான தமிழ் இலக்கண நூலை இயற்றிய பவணந்தி முனிவரின் ஊர் சீனாபுரம் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் உள்ளது. சீனாபுரம்(ஜினபுரம்)சமணக் கோயிலை மதுரையிலுள்ள தமிழ்ச்சமணர் சங்கத்தார் புதுப்பித்து ஆராதனை விழா நடத்தினர் (10.08.1997) விழா நிகழ இருக்கும் செய்தியைச் செய்தித்தாளிற் கண்டதும் சீனாபுரத்திற்குச் சென்று விழாவிற் கலந்து கொண்டோம். விழா ஏற்பாட்டாளர்களின் விருப்பத்திற்கிணங்க ஒரு சிறு சிறப்புரையும் ஆற்றினோம். நன்னூல் படிப்பவர்களெல்லாம் சீனாபுரம் சென்று வணங்க வேண்டும்.

சமண சமயம் மக்கள் பவ்ய ஜீவர்களாக வாழ வேண்டும் என்று கூறுகிறது. பிற உயிர்களுக்குச் சிறிதும் இம்சை செய்யாது வாழும் அகிம்சையாளரே பவ்யஜீவர்கள் சமணர்கள் கொசுவை அடிப்பதில்லை. மூட்டைப்பூச்சியை நசுக்குவதில்லை. சீவ சிந்தாமணியைப் பதிப்பித்த காலத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் கும்பகோணத்தில் குணபால செட்டியார் என்னும் சமணர் வீட்டுக்குச் சென்று சிந்தாமணி, சமணசமய மரபுகள் சம்பந்தமாகச் சில

ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார்கள். குணபால செட்டியாரின் மனைவியார், ஐயரவர்களைப் பவ்யஜீவன்போல் இருக்கிறதே என்று வியந்து பாராட்டினார்கள். ஐயரவர்கள் என் சரித்திரத்தில் எழுதியுள்ளார். நல்லுரைக்கோவையில் "பவ்யஜீவன்" என்ற தலைப்பில் ஒரு தனிக்கட்டுரையாகவே எழுதியுள்ளார்.

விஜயமங்கலம் ஸ்ரீ சந்திரபிரபதீர்த்தங்கரர் ஜினாலயத்தைத் திருப்பணி செய்து சிறப்பு வழிபாடு நிகழ்த்திய அழைப்பிதழ் எனக்கு வந்தது. அழைபிதழில் "**அன்பர்கள்** அனைவரும் வருகை தந்து" என்பதற்குப் பதிலாக " பவ்யர்கள் அனைவரும் வருகை தந்து" என்று அச்சிட்டிருந்தனர். ஐயரவர்களின் பவ்யஜீவன் எமக்கு நினைது வந்தது. சமணர் அனைவருமே பவ்யஜீவர்கள். பவ்யஜீவர் அல்லாதர் சமணராக இருத்தல் இயலாது. விஜயமங்கலம் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிரின் ஊர். ஈரோடு கோயம்புத்தூர் நெடுஞ்சாலையின் மீதே உள்ளது. அவ்வழிச் செல்ல நேருங்காலங்களில் கண்டு வணங்கிச் செல்வது எமக்கு வழக்கம்.

ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் என்று ஒருவர். வள்ளலாருக்குப்பின் ஜீவகாருண்யப் பணியில், சிறு தெய்வங்களுக்குக் கொடுக்கப்படும் உயிர்ப்பலியைத் தடுப்பதில்சிறந்து விளங்கியவர் ஜீவபந்து ஒருவரே. ஜீவபந்துவால்தான் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பலித்தடைச்சட்டமே வந்தது. ஜீவபந்துவுக்கும் எமக்கும் நேர்பழக்கம் இருந்தது. எம்மினும் பல ஆண்டுகள் வயதால் மூத்த அவர் எம்மைக் காணும்போதெல்லாம் நிலந்தோய வீழ்ந்து வணங்கும் வழக்கமுடையவராக இருந்தார். வள்ளலாரைப் பற்றி எங்கும் பேசுவார். ஜைனநெறிகளும் வள்ளலார் புரட்சியும் என்றொரு நூலை எழுதினார். எமது அணிந்துரையைப் பெரிதும் விரும்பினார். சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவரது விருப்பம் நிறைவேறாது பொயிற்று. ஜீவபந்துவின் நூற்றாண்டு விழா அவரது ஊராகிய கரந்தையில் (காஞ்சிபுரம் அருகே) 07.01.2001.-இல் நிகழ்ந்தது. நாம் சிறப்புரையாற்றினோம். உயிர்ப்பலித் தடுப்புப் பணியை இவரைப்போல் வேறு யாரும் செய்யவில்லை. எந்தச் சைவமும், எந்தச் சன்மார்க்கியும் செய்யவில்லை. உயிர்ப்பலித் தடுப்பின் புண்ணியமனைத்தும் வள்ளலாருக்குப் பின் சமணராகிய ஜீவபந்து ஸ்ரீபால் ஒருவரையே சாரும். காந்தியும் நேருவும் ஜீவபந்துவைப் பாராட்டியுள்ளனர். பெரியாரும் பாரதிதாசனும் பாராட்டியுள்ளனர். ஜீவபந்து ஒரு தெய்வீக மனிதர். மனிதரில் புனிதர். நாயன்மார் வரிசையில், பரமேட்டிகளின் வரிசையில் சேர்ப்பதற்குரியவர். இன்றும் ஒரு ஜீவபந்து தேவை.

தமிழ்நாட்டில் தமிழ்ச் சமணர்களுக்குரிய தலைமை மடம் விழுப்புரம் மாவட்டம் மேல் சித்தாமூரில் உள்ளது. மடாதிபதிகளின் டெல்லி கொல்லாபுர ஜினகஞ்சி பெறுகொண்டா சதுர்சித்த சிம்மாசனாதீஸ்வர ஸ்ரீமத் அபிநவலகஷ்மீசேன பட்டிரக பட்டாசாரியவர்ய சுவாமிகள் என்பது. மடாதிபதியாக வரும் அனைவருக்கும் இதுவே பொதுப்பெயர். பொன்னூர் புலவர் ஆதிராகவனார் அவர்கள் சிலகாலம் மடாதிபதியாக இருந்தார்கள். அவருக்குப்பின் இப்போது மடாதிபதியாக எழுந்தருளியுள்ள சுவாமிகள் பூர்வாசிரம காலத்திலேயே எம்மோடு பழக்கமுள்ளவர்கள்.

வந்தவாசிக்கு அருகே, குந்தர் குந்தர்மலையை ஒட்டி அமைந்துள்ள ஆசாரியர் குந்தகுந்தர் நிறுவனம் நல்ல பல அறப்பணிகளைச் செய்து வருகிறது. மதுரையிலுள்ள தமிழ்ச்சமணர் சங்கம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

சைவத்துக்கும் சமணத்துக்கும் போராட்டம் நடந்த காலம் இப்போது இல்லை. கண்டுமுட்டு கேட்டுமுட்டு இன்று இல்லை. விருத்தாசலத்திலுள்ள அகர்சந்தஜெயின் என்னும் சமணர் விருத்தாசலம் விருத்தகீரிசுவர் கோயில் திருப்பணிக் குழு செயலாளராக உள்ளார். விருத்தாசலத்திற்கு அருகே ஏசுநாதர் கோயில் என்றொரு சிவன் கோயிலே கட்டியுள்ளார். ஆயிரம் ஆண்டுகள் வெட்ட வெளியில் வெய்யிலில் தனித்துக் கிடந்த சிவலிங்கத்துக்குக் கோயில் கட்டி ஏசுநாயகர் கோயிலாக்கினார். சைவத்திற்கும் சமணத்திற்கும் இனி வேற்றுமைகள் உண்டாகலாகாது. ஒற்றுமை பெருகவேண்டும்.

சமணமும் சன்மார்க்கமும் சமயத்தால் இரண்டாயினும் ஜீவகாருண்யத்தில் ஒன்றே. ஓர் ஊரில் சன்மார்க்க சங்கம் உள்ளதென்றால் தாவர உணவினர் சிலர் இருக்கிறார்கள் என்று பொருள். ஓர் ஊரில் சமணர்கள் சிலர் உளர் எனின் சுத்தசைவ உணவினர் சிலர் உளர் என்று பொருள்.

சமணப் பண்பாடு, முற்றிலும் ஜீவகாருண்யப் பண்பாடு. சன்மார்க்கப் பண்பாடும் அப்படியே. ஆதலின் சமணமும் சன்மார்க்கமும் ஜீவகாருண்ய பரப்பல், புலை கொலை ஒழிப்பு, பலித்தடுப்பு முதலியவற்றில் இணைந்து செயற்படவேண்டும். பல இடங்களில் இணைந்து செயலாற்றுவதைக் கண்டு மகிழ்கிறோம். இவ்விணைப்பு இன்னும் பரவ வேண்டும், வலிவு பெறவேண்டும்.

வர்த்தமான மகாவீரர், வள்ளுவர், வள்ளலார் நாள்களில் புலால் கடைகளையும் மதுக் கடைகளையும் மூடவேண்டும் என்று ஒரு அரசாணையை வேண்டிப் பெற்றவர்கள் சமணர்களே. பகவான் மகாவீரர் அகிம்சைப் பிரச்சார சங்கத்தின் கோரிக்கை மனுவே இவ்வரசாணைக்குக் காரணம். அரசாணையில் பார்வை (Reference) என்ற இடத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது பகவான் மகாவீரர் அகிம்சைப் பிரச்சார சங்கத்தின் பெயரே. திருவள்ளுவர் கழகங்களோ, சன்மார்க்க சங்கங்களோ இதில் முன்னிற்கவில்ல. சமணர் முன்னின்றே வர்த்தமானர் வள்ளுவம் வள்ளலார் நாள்களில் மாமிசம் மது விற்பனை தவிர்க்க ஏற்பாடு செய்தனர்.

சமணம் புத்துயிர் பெறுவதால் வேறு யாருக்கும் இடையூறு இல்லை. மதம் மாறுவோர் பௌத்தத்திற்கு மாறுவேன் என்கிறார்களே தவிர, யாரும் சமணத்துக்கு மாறுவேன் என்று கூறவில்லை. சமணத்திற்கு மாறினால் நூற்றுக்கு நூறு சைவ உணவு (தாவர உணவு) கொள்பவராக ஆகவேண்டும். பௌத்தம் அப்படியன்று இது விடயத்தில் அது தளர்ந்துவிட்டது. இவற்றையெல்லாம் விரித்து விளக்க இங்கு இடம் போதாது.

**அருளார்ந்த அகிம்சைச் சமயமாகிய சமணம் தழைக்கட்டும்.**

**சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக என்பது பழமொழி.**

**சைவமும் சமணமும் சன்மார்க்கமும் தழைத்தினிதோங்குக என்பது நம் புதுமொழி.**

சமணத் தமிழ்நூல்களை வட மாநிலச் சமணர் அறியார். சமணத் தமிழ்நூல்களை இந்தியில் மொழியாக்கம் செய்து வடமாநிலங்களிலும் ஆங்கில மொழியாக்கம் செய்து அனைத்துலகிலும் பரப்பவேண்டும்.

**அமைதி பரவும் வன்முறை குறையும்**
**உலகில் பவ்ய ஜீவர்களின் தொகை மிகும்**

**வாழ்க! வாழ்க !!**

**திருச்சிற்றம்பலம்**

**தயவு**